757

தமிழ்நாடு
சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
செய்தி வெளியீடு

தொகுதி 24 எண் - 2

30 மார்ச் 1990

D
V211,31 'N90
N90. 24-2
143796

வெளியீடு 18-10-1990 Issued 18-10-1990

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
## செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
## OFFICIAL REPORT

வெள்ளிக்கிழமை, மார்ச் 30, 1990—தொகுதி 24—எண் 2

Friday, the 30th March 1990–Volume 24-No. 2

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600 009.
**Legislative Assembly Secretariat, Fort St. George**
**Madras-600 009**

விலை ரூ. 3.00] [Price Rs. 3.00

143796

D

## உள்ளடக்கம்

**30–3–1990.**


| | பக்கங்கள். |
|---|---|
| **1. வினாக்கள்—விடைகள் —** | |
| உடுக்குறியிட்ட வினாக்கள் ... ... .. | 171–204 |
| **2. தகவல் கோரல்—** | |
| (அ) பெரியார் மாவட்டத்தில் அரிசி ஆலைகள் மூடப்பட்டுள்ளது குறித்து. | 204–205 |
| (ஆ) திருச்சி வட்டாரப் பொறியியல் கல்லூரியில் பகுதி நேரப் பொறியியல் பட்டப் படிப்பு நிறுத்தப்படுவது குறித்து. | 205–206 |
| (இ) நாகப்பட்டினத்திலிருந்து படகுகளில் மீன் பிடிக்கச் சென்ற சிலர் இலங்கைக்குக் கொண்டு போகப்பட்டுள்ளதால் அவர்களை மீட்பதற்கான நடவடிக்கைகள் குறித்து. | 206–208 |
| (ஈ) இலங்கையிலிருந்து திரும்பிய இந்திய இராணுவத்தினருக்கு அளிக்கப் பெற்ற வரவேற்பு நிகழ்ச்சியில் முதலமைச்சர் கலந்து கொள்ளாதது குறித்து. | 208–226 |
| **3. கவன ஈர்ப்பு—** | |
| திருவாரூரில் ஏற்பட்டுள்ள குடிநீர்ப் பற்றாக் குறை குறித்து. | 226–228 |
| **4. அறிக்கை அளித்தல்—** | |
| பொது நிறுவனங்கள் குழு—. .. .. .. | 228 |
| **5. அறிவிப்புகள்—** | |
| (அ) கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள், 1989–90—மொழிதல் (ஆ. இ.). | 228 |
| (ஆ) நிதி ஒதுக்க (எண் 2) சட்ட முன்வடிவு, 1990 (ஆ.இ.). | 277 |
| (இ) பேரவை அலுவல்கள் | 282 |


பு 2 53-70—1

6. இறுதித் துணை நிதிநிலை அறிக்கை 1989-90—பொது விவாதம் மற்றும் கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள் 1989-90—பொது விவாதமும் வாக்கெடுப்பும்—

*திரு. எல். கணேசன் .. .. .. .. 228, 229 264, 272
திரு. எஸ். ஆர். சிவலிங்கம் .. .. .. 229–233
*திரு. ஆலவயல் சுப்பையா .. .. .. 233–236
திரு. எஸ். ஏ. தங்கராஜன் .. .. .. 236–242
திரு. து. க. சுப்பிரமணியம் .. .. 242–248
*திரு. கோ. பூவராகன் .. .. .. .. 248–253
திரு. பி. எச். பாண்டியன் .. .. .. 253–257
திரு. ஜி. பழனிச்சாமி .. .. .. .. 257–261
திரு. எம். முகமது சித்திக் .. .. .. 261–264

7. விதி 110-இன் கீழ் உணவு அமைச்சரின் அறிக்கை—

தமிழ்நாட்டிற்கு மத்திய அரசு கூடுதல் அரிசி ஒதுக்கீடு செய்துள்ளது குறித்து. 253

8. சட்ட முன்வடிவு (அறிமுகம் செய்தல்)

நிதி ஒதுக்க (எண் 2) சட்ட முன்வடிவு, 1990 .. 276–277

9. சட்ட முன்வடிவு (ஆய்வு செய்தல்)

மாநகராட்சிச் சட்டங்கள் சார்ந்த (திருத்த) சட்ட முன்வடிவு, 1990.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி .. .. 277, 280, 281
திரு. யூ. கே. வெள்ளிங்கிரி .. .. .. 277–280

10, பேரவைமுன் வைக்கப் பெற்ற ஏடுகள் .. .. 282–283

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

பங்குனி 16, சுக்ல—திருவள்ளுவர் ஆண்டு 2021.

1990, மார்ச் 30, வெள்ளிக்கிழமை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் முனைவர் மு. தமிழ்க் குடிமகன் அவர்கள் தலைமையில் காலை 9-00 மணியளவில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

'' கான முயலெய்த அம்பினில் யானை
பிழைத்தவேல் ஏந்தல் இனிது.''

காட்டில் ஓடும் முயலை நோக்கிக் குறி தவறாமல் எய்த அம்பை ஏந்துவதை விட வெட்ட வெளியில் நின்ற யானை மேல் எறிந்து தவறிய வேலை ஏந்துதல் சிறந்ததாகும்.

3. வினாக்கள்—விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

வடச்சேரி கிராம உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக உயர்த்துதல்.

*3440—திரு. வெ. கோவிந்தன்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) பேரணாம்பட்டு தொகுதி, வடச்சேரி கிராமத்தில் உள்ள அரசு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக உயர்த்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : தலைவர் அவர்களே,

(அ) பேரணாம்பட்டு தொகுதி வடச்சேரி கிராமத்தில் உள்ள அரசு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக உயர்த்துவதற்கான கருத்துருக்கள் வேலூர் முதன்மைக் கல்வி அலுவலரிடமிருந்து பெறப்பட்டு உயர் மட்டக் குழுவின் பரிசீலனைக்கு வைக்கப்பட்டது. அக்குழு வகுத்துள்ள நெறிமுறைகளுக்குள் இப்பள்ளி உட்படாததால் இதனை 1989-90ம் ஆண்டில் மேல்நிலைப் பள்ளியாக உயர்த்த அக்குழு அரசுக்குப் பரிந்துரைக்கவில்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

**திரு. வெ. கோவிந்தன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரணாம்பட்டுத் தொகுதியிலுள்ள வடச்சேரி உயர்நிலைப் பள்ளியில் படிக்கும் மாணவ மாணவியர்கள் தங்களுடைய பள்ளி இறுதி ஆண்டை முடித்து விட்டு 5 கிலோ மீட்டர் தூரத்திலுள்ள வாணியம்பாடிக்குச் செல்ல வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. ஏழை எளிய மாணவர்கள் தங்களுடைய படிப்பை இடையிலேயே படிக்க முடியாமல் நிறுத்திவிடக் கூடிய சூழ்நிலை ஏற்படுகிறது. ஏற்கெனவே 1987 ஆம் ஆண்டு ரூ. 25,000 தொகையை அரசுக்குச் செலுத்தியிருக்கிறார்கள். பொது மக்களுடைய அந்த நன்கொடையை வசூலித்து பள்ளிக் கட்டிடத்தை ரூ. 1,50,000 அளவில் கட்டியுள்ளார்கள். ஆகவே மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்கள் இந்த நிலையை மனதில் இருத்தி இந்தக் கல்வியாண்டிலாவது வடச்சேரி உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக்க முன் வருவாரா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் :** தலைவர் அவர்களே, ஆண்டுதோறும் இப்படிப்பட்ட உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக்க வேண்டும், நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக்க வேண்டுமென்று அரசினிடத்திலே சேர்கின்ற விண்ணப்பங்கள் ஏராளம். அவைகளில் முன்னுரிமை தர வேண்டிய அவசியம் எந்தப் பள்ளிக்கு இருக்கிறது என்பதை ஒரு கல்வி இயக்ககக் குழு, அந்தப் பள்ளி அமைந்திருக்கிற இடம், பயிலுகின்ற மாணவர்களுடைய எண்ணிக்கை, எவ்வளவு பேர் பயன் பெறுவார்கள் என்று ஒரு ஆய்வு நடத்துகிறது. அந்த ஆய்வின் முடிவில் அதிக முக்கியத்துவம் உள்ள இடங்களுக்குத் தான் மேல்நிலைப் பள்ளியாக உயர்த்தப்படுவதற்கான அந்தக் கருத்துரு அரசுக்கு அனுப்பப்படுகிறது. ஒரு பள்ளிக்கு 8 கிலோ மீட்டர் தூரத்தில் பள்ளி இல்லையானால் முன்னுரிமை என்ற அந்த அடிப்படையில் 5 கிலோமீட்டர் தூரத்தில் மேல்நிலைப் பள்ளி இருக்கின்ற காரணத்தால் அந்த வகையில் முன்னுரிமையை அந்தப் பள்ளி இழக்கிறது. மேலும் உள்ள தகுதிகளின் அடிப்படையில் ஒவ்வொரு ஆண்டும் பரிசீலனை செய்கிறபோது இது கவனிக்கப்படும்.

**திரு. வ. முல்லைவேந்தன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உயர்நிலைப் பள்ளிகளையும், மேல்நிலைப் பள்ளிகளையும் காலத்தில் கட்டாயமாக திறக்க வேண்டுமென்று முன்மொழிவுத் தொகைகளை 10, 15 ஆண்டுகளுக்கு முன்பாக செலுத்திவிட்டு, பள்ளி வரும், பள்ளி வரும் என்று ஏங்கிக் கிடைக்கின்ற அந்த பகுதி மக்களுக்கு ஆறுதல் அளிக்கத் தக்க வகையில் ஒரு கால நிர்ணயம் குறித்து, உடனடியாக அந்த மேல்நிலை பள்ளிகளை துவக்க அரசு முன்வருமா என அறிய விரும்புவதோடு, முன் மொழிவுத் தொகைகளை செலுத்திவிட்டு, பள்ளிக்காக காத்திருப்போரின் எண்ணிக்கை எத்தனை என்பதை அறிய விரும்புகிறேன்.



**மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் :** தலைவர் அவர்களே, எத்தனை என்ற விவரம் இல்லாவிட்டாலும் நூற்றுக் கணக்கிலே இப்படி முன்னுரிமைப் பணம் செலுத்தியவர்கள் பல்வேறு பள்ளிக்கூடங்களை மேல்நிலைக்கு உயர்த்தக் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். அப்படிக் கேட்கப்படுகின்ற எல்லா இடத்திலேயும் ஏற்றுக் கொள்ள முடியாததற்கு மிக முக்கியமான காரணம் நிதிப் பற்றாக்குறைதான். இதற்காக அதிக நிதி ஒதுக்கப்பட்ட போதிலும், அந்தச் செலவு ஆண்டுதோறும் மிகப் பெரிய அளவிற்கு உயர்ந்து விடுகிறது. ஒரு ஆண்டிற்கு 10 சதவீதத்திற்கு மேல் கல்விக்கு வளர்ச்சிச் செலவு ஏற்பட்டுவிடுகின்ற காரணத்தால் அந்த ஏற்றத்தை ஈடு கொடுத்து அவைகள் அத்தனையையும் ஒரே நேரத்தில் ஆக்குவது என்பது இயலாத காரியம். ஆண்டுதோறும் மாண்புமிகு உறுப்பினர் முயற்சிப்பதையும், மற்றவர்கள் முயற்சிப்பதையும் எடுத்துச் சொன்னதைப் போல் அரசாங்கமும் ஆண்டுதோறும் பரிசீலித்து ஆண்டுதோறும் சில பள்ளிகளை உயர்த்திக் கொண்டுதான் வருகிறது.

9-05 மணி

**திரு. அ. இராசேந்திரன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தகுதி இருந்தும் சென்ற ஆண்டு சில பள்ளிகள் மேல்நிலைப் பள்ளிகளாக மாற்றப்படவில்லை. அந்தப் பள்ளிகளையெல்லாம் இந்த ஆண்டாவது மாற்ற அரசு முயலுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் :** தலைவர் அவர்களே, தகுதிகள் என்னென்ன என்று வரையறுக்கப்பட்டிருக்கிறது. முன்னுரிமை எந்த அடிப்படையில் என்றும் வரையறுக்கப்பட்டிருக்கிறது. அதற்கு அடுத்து மாவட்டம் தோறும் பிரித்து வழங்க வேண்டிய கடமை இருக்கிறது. மிக மிக பிற்படுத்தப்பட்ட பகுதி, அந்தப் பகுதியிலே உயர்நிலைப் பள்ளிக்கூடமே, மேல்நிலைப் பள்ளியே இல்லை என்றால் முன் உரிமை வழங்கப்படுகிறது. இப்படி பல்வேறு அடிப்படையில் என்றைக்கும் பரிசீலனைக்கு உரியதாகத்தான் இந்தப் பிரச்சினை இருக்கிறது.

**திரு. கி. கோவிந்தராஜன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நடுநிலைப் பள்ளியை உயர் நிலைப் பள்ளியாகவும் உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகவும் உயர்த்துவதற்கு ஒரு உயர் மட்டக்குழு இருப்பதாக அமைச்சர் அவர்கள் கூறினார்கள். அந்த உயர் மட்டக் குழுவில் யார் யார் அங்கம் வகிக்கிறார்கள் என்பதைச் சொல்ல முடியுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் :** தலைவர் அவர்களே, சரியான பெயர் விவரம் என்னிடத்தில் தற்போது இல்லாவிட்டாலும் கூட கல்வித் துறையைச் சார்ந்த இயக்குநர் போன்றவர்கள் தான் அதிலே இடம் பெற்றிருக்கிறார்கள்.

திரு. பெ. சு. திருவேங்கடம் : பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது தமிழ்நாட்டில் அரசு உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளியாகவோ அல்லது புதிய அரசு உயர்நிலைப் பள்ளிஏற்படுத்தக் கோரியோ நூற்றுக்கணக்கான விண்ணப்பங்கள் அரசிடத்திலே இருப்பதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். அதே நேரத்தில் அரசுக்கும் நிதி நெருக்கடி உள்ளது. ஆகையினால் புதிய உயர்நிலைப் பள்ளி கோருகிற போது கல்வித் துறையைச் சார்ந்த அதிகாரிகள் அதையும் மேலே மேலே சிபாரிசு செய்து கொண்டே இருப்பதால் சட்ட மன்ற உறுப்பினர்களுக்கும் சிரமம் ஏற்படுகிறது. அதையாவது சிறிது காலத்திற்கு அரசு ஒத்தி வைக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : தலைவர் அவர்களே, இந்தக் கேள்வியில் எழுகிற கருத்து புதிய உயர்நிலைப்பள்ளிகள் கேட்டால் அதை வழங்கக் கூடாது என்ற அடிப்படையில் அமைந்து இருக்கிறது. புதிதாக கேட்டாலும், பழைய வேண்டுகோளையே திரும்பக் கேட்டாலும் முன்னுரிமைகளுக்கு சில வரன்முறைகள் இருக்கின்றன. அந்த முன்னுரிமை அடிப்படையிலே பரிசீலிக்க வேண்டிய கடமை அரசுக்கு இருக்கிறது. சட்ட மன்ற உறுப்பினரா அல்லது இயக்குநரா என்று பார்ப்பதைவிடப் பொது மக்களுடைய பிரச்சினை என்ற வகையிலே தான் அரசு இதை நோக்குகிறது.

திரு. சோ. அழகர்சாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாக உயர்த்தக்கூடிய காலத்தில் அரசு உயர்நிலைப் பள்ளிகள், தனியார் உயர்நிலைப் பள்ளிகள் இரண்டுமே மனுப் போடுகிற காலத்தில் அரசு உயர்நிலைப்பள்ளிகளுக்கு முன் உரிமை அளிக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : தலைவர் அவர்களே, தனியார் பள்ளிக்கூடமா அரசு பள்ளிக்கூடமா என்பதை விட எவ்வளவு தேவையை நிறைவு செய்யும் என்பது முதலில் கணக்கிடப்படுகிறது. இரண்டாவது தனியார் பள்ளிக்கூடங்கள் அவசியமாக நடத்த விரும்பினால் அரசினுடைய நிதி உதவி இல்லாமல் அந்த மேல் வகுப்புக்களை நடத்துவதற்கு முன் வந்தால் அவர்களுக்கு அந்த வகையில் முன் உரிமை வழங்கப்படுகிறது.

திரு. ஏ. சி. தயாளன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு ஒன்றியத்திற்கு ஒரு உயர்நிலைப் பள்ளி இருக்க வேண்டும் என்று ஏதாவது அரசிடம் உத்திரவு இருக்கிறதா? அப்படி இருந்தால், இல்லாத ஒன்றியத்திற்கு எல்லாம் புதிதாக பள்ளி அமைக்க இனிமேலாவது அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.





மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : தலைவர் அவர்களே, ஒன்றியத்திற்கு ஒரு பள்ளி என்ற உத்திரவு இருப்பதாக எனக்குத் தெரியவில்லை. ஆனால், ஒன்றியத்திற்கு ஒரு பள்ளியாவது இருக்கும் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது.

திரு. எஸ். எஸ். ராமசுப்பு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தகுதியின் அடிப்படையில் உயர்நிலைப்பள்ளிகளை மேல்நிலைப்பள்ளிகளாக ஆக்குவதாக அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். சில பள்ளிகளில் அந்தத் தகுதிகளின் அடிப்படையே சரியாக பராமரிக்கப் படவில்லை. சில பள்ளிகளில் பிளே கிரவுண்டுகளே இல்லாமல் இருக்கிறது. அப்படி அந்தத் தகுதிகளின் அடிப்படையில் சில பள்ளிகள் இல்லாமல் இருக்கின்றனவே அதற்கு அரசு ஏதாவது நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : தலைவர் அவர்களே எந்தப் பள்ளிக்கூடத்திலேயும் சில குறைகள் இருக்கத்தான் செய்கின்றன. இட வசதி பற்றாக்குறை, கட்டிடம் போதுமான அளவு இல்லாத நிலைமை, ஆய்வுக்கூடம் அமைக்கப்படாத நிலைமை, இப்படிப்பட்ட அந்தக் குறைகள் கல்வி இலாகாவோடு சேர்ந்த ஒன்றாகவே இருக்கின்றன. இந்தக் குறைகள் இருந்தாலும் கூட தேவையைப் பொறுத்து சில கடமைகளை நிறைவேற்றுகிறோம். அந்தக் குறைகளைப் போக்குவதற்கு பெரும் அளவுக்குப் பொது மக்களுடைய ஒத்துழைப்புத் தேவை என்ற அடிப்படையில் பெற்றோர் ஆசிரியர் சங்கம் சிறந்த முறையில் இயங்குவதற்கு எந்த முறையில் ஊக்கப்படுத்த முடியுமோ அந்தக் கடமையை அரசு மேற்கொண்டிருக்கிறது.

திரு. இரெ. இராசமாணிக்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உயர்நிலைப் பள்ளி அல்லது மேல்நிலைப் பள்ளியாக மாற்றுவதற்கான முன் உரிமை தகுதியின் அடிப்படையில் கொடுப்பதாக மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். பொது மக்களின் சார்பாக மனு அனுப்பப்பட்டு, அந்த மனுவின் மீது அரசாங்கம் நடவடிக்கை எடுத்து அரசாங்கத்திடம் இருந்து அதற்கு உண்டான மக்கள் பங்குத் தொகையை செலுத்த வேண்டுமென்று கடிதம் எழுதி அதுவும், அதற்கான தொகை செலுத்தப்பட்ட பிறகும் கூட, அந்தக் கல்விக்கூடங்கள் மேல்நிலைப்பள்ளிகளாக, உயர்நிலைப்பள்ளிகளாக மாற்றப்படாமல் பல இடங்களில் இருக்கின்றன. உதாரணத்திற்குச் சொல்லவேண்டுமென்று சொன்னால் என்னுடைய தொகுதியில் குடவாசல் ஒன்றியத்தில், ஆலத்தூர் கிராமத்தில் அப்படிப்பட்ட நிலை இருக்கிறது. இதையெல்லாம் கருத்தில் கொண்டு, முன்னுரிமை அடிப்படையில், பொதுமக்கள் நலனுக்

[1990 மார்ச் 30

கார, உயர்நிலைப்பள்ளி, மேல்நிலைப்பள்ளிகளைத் துவக்கு வதற்கு, அரசு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள் மூலமாகத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

9–10 மணி.

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, ஒரு 22,000 ரூபாய், 25,000 ரூபாய் என்ற விகி தத்தில், பரிசீலனைக்காகவே, அந்தப்பள்ளியைக் கன்சிடர் செய்ய வேண்டும் என்பதற்காகவே செலுத்தப்படுகிற நிதியை அவர்கள் குறிப்பிட்டார்கள். அப்படிச் செலுத்தப்பட்ட அந் தப் பள்ளிக்கூடங்களுக்கு, என்ற அடிப்படையில் முன்னுரிமைப் பேச்சே வருகிறது. அந்தப் பணமே செலுத்தாத போது, அவை, அந்தக் குழுவிலே ஆய்வு செய்யப்படுவதில்லை. எனவே, அந்த 25,000 ரூபாய் பணம் செலுத்திய காரணத்தால், உடனே ஏற் றுக்கொள்ள வேண்டுமானால், ஓராண்டிற்கு ரூ. 1 இலட்சம் என்ற அளவிற்குப் புதிய ஊதியம் உடனடியாகத் தரவேண்டிய கட்டாய நிலை ஏற்படுகிறது. எனவே, மாண்புமிகு உறுப்பினர் மிகக் கட்டாயமாக வற்புறுத்தினால், அந்த நிதியைத் திருப்பிச் செலுத்துவதற்கு அரசாங்கம் முயற்சிக்கும்.

கனியனூர் கிராம உயர் துவக்கப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக மாற்றுதல்.

*3558—திரு. டி. ஆர். கஜபதி :

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) ஆற்காடு தாலுகா, கனியனூர் கிராமத்தில் உள்ள உயர்துவக்கப்பள்ளியை உயர்நிலைப்பள்ளியாக மாற்றும் செயற் குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : மாண்புமிகு பேர வைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. டி. ஆர். கஜபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆற்காடு தொகுதியில், கனியனூர் கிராமத்தைச் சுற்றி, பத்துக்கும் மேற்பட்ட கிராமங்கள் உள்ளபடியால், அதற்கு அருகிலே, 10 கிலோ மீட்டருக்கு மேலே சென்றால்தான் உயர்நிலைப்பள்ளிகள் இருக்கின்றன என்கிற காரணத்தால், அந் தக் கிராமத்தை, உயர்நிலைப்பள்ளி உள்ள கிராமமாக மாற்றித் தர அரசு மீண்டும் பரிசீலனை செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.



1990 மார்ச் 30]

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : மாண்புமிகு பேர வைத் தலைவர் அவர்களே, இப்படிப்பட்ட பள்ளியை, உயர் நிலைப் பள்ளியாக ஆக்க வேண்டுமானால், ஏறத்தாழ 175 மாண வர்கள் அந்தப் பள்ளியிலே படிக்க வேண்டும். 6, 7, 8 ஆகிய வகுப்புகளில் 175 பேர்கள் படித்தால்தான், உயர்நிலைப் பள்ளி யாக ஆக்குவது பற்றி ஆலோசிக்கப்படுகிறது. இந்தப் பள்ளியில் கடந்த ஆண்டில் 6-வது வகுப்பில் 43 பேர்களும், 7-வது வகுப்பில் 27 பேர்களும், 8-வது வகுப்பில் 15 பேர்களும்—ஆக மொத்தம் 85 பேர்கள்தான் படித்தார்கள். அந்தப் பள்ளியை, உயர்நிலைப் பள்ளியாக ஆக்குவது என்று சொன்னால் அதற்கு முன்னுரிமை எந்த வகையிலேயும் எளிதாகக் கிடைக்காது.

திரு. டி. ஆர். கஜபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஆண்டில் இல்லையென்றாலும், இந்த ஆண்டு அதிகமான மாணவர்கள் சேர்ந்துள்ளபடியால், மீண்டும் பரிசீலனை செய்து, இந்தப் பள்ளியை, உயர் நிலைப்பள்ளியாக மாற்றித்தர வேண்டுமென்று அரசைக் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, மாணவர்களை அதிகமாகச் சேர்த்து, மற்ற பள்ளி களோடு போட்டியிடுமாறு அங்கத்தினர் அவர்களை நான் கேட் டுக் கொள்கிறேன்.

கல்வி பயிலத் தேவைப்படும் உபகரணங்கள்

*4305—திரு. என். பழனிவேல் :

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா:

(அ) உயர் நிலைப்பள்ளியில் பயிலும் ஏழை மாணவ, மாண வியர்க்கு கல்வி பயிலத் தேவைப்படும் உபகரணங்கள் அனைத் தையும் இலவசமாக வழங்க அரசு ஆணையிட்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : மாண்புமிகு பேர வைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. என். பழனிவேல் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர் களே, உயர் நிலைப்பள்ளியில் பயிலும் ஏழை மாணவர்களுக்கு இன்றையதினம் பாடப் புத்தகம் மற்றும் நோட்டுப் புத்தகம், அதைப்போல அவர்களுக்குத் தேவையான 'ஜியாமெட்ரி பாக்ஸ்' போன்ற பொருட்களெல்லாம், இன்றைக்கு மிக அதிக

அளவிலே விலை கூடியுள்ளது. ஒரு மாணவனுக்கு ஏறக்குறைய 20 நோட்டுக்கு மேல் தேவைப்படுகிறது. ஆகவே, இவைகளையெல்லாம் அவர்கள் வாங்கி, காலாகாலத்தில் சேர்ந்து படிப்பதற்கு சிரமமான நிலை இருக்கின்ற காரணத்தால், அவர்களுக்குத் தேவையான அத்தனை கருவிகளையும், அரசே வாங்கிக் கொடுப்பதற்கு ஆணை பிறப்பிக்கப்படுமா ?

**மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கேள்வியிலே ஒரு சிறு குழப்பம். கேள்வி கேட்கிறபோது, உபகரணங்கள் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டார்கள். உபகரணங்கள் என்றால், துணைக் கருவிகள் என்று பொருள். பாடப் புத்தகம், நோட்டுப் புத்தகங்களை எல்லாம், உபகரணங்களைப் போல கருதுகிற ஒரு எண்ண ஓட்டம் கல்வித் துறையிலே இல்லை. ஆனால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இப்போது கூடக் கருவிகள் என்று சொன்னாலும் கூட, பாடப் புத்தகங்கள் 8-வது வகுப்பு வரையிலே படிக்கிற பிள்ளைகளுக்கு சத்துணவு வழங்கப்படுகிற அத்தனை பேர்களுக்கும் இலவசமாகப் பாடப் புத்தகங்கள் அரசால் வழங்கப்படுகின்றன. தாழ்த்தப்பட்ட மாணவர்கள், பழங்குடியினர் ஆகியோருக்கு நோட்டுப் புத்தகங்களும் கூட இலவசமாக வழங்கப்படுகின்றன. அரசால் வழங்கப்படுகிற வேறுசில சலுகைகளும் இருக்கின்றன. ஆனால், கருவிகள் என்பது ஆய்வுக் கூடத்திற்கு வழங்கப்படுகிறது. அது பொதுவகையிலேதான் பயன்படுத்தப்படுகிறது.

**திரு. என். பழனிவேல் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய அமைச்சர் அவர்கள் மாணவர்களுக்குத் தேவையான பாடப் புத்தகங்கள் நோட்டுப் புத்தகங்கள், குறிப்பாக தாழ்த்தப்பட்ட மாணவர்களுக்கு நோட்டுப் புத்தகங்கள் எல்லாம் இலவசமாக வழங்கப்படுவதாக இங்கே கூறினார்கள்.

9-15 மணி.

அதை நான் மறுக்கவில்லை. ஆனால் அதெல்லாம் ஒரு பெயரளவிற்குத்தான் கொடுக்கப்படுகிறதேயொழிய அவர்களுடைய தேவையைக் கருதி கொடுக்கப்படுவதில்லை. குறிப்பாக புத்தகங்கள் கூட, பாடங்கள் ஆரம்பித்து மூன்று மாதங்கள் கழித்து, கால் பரீட்சை முடிந்ததற்குப் பின்னால்தான் அந்தப் புத்தகங்களைக் கொடுக்கிறார்கள். ஆனால் பள்ளி ஆரம்பித்தவுடனே பிள்ளைகள் தங்களுடைய பெற்றோரை, புத்தகங்கள், நோட்டுகள் வாங்கி கொடுக்கச் சொல்லி துன்பப்படுத்துகிறார்கள். ஆகவே, அவைகளெல்லாம் தேவையான அளவிற்கு உடனடியாக அளிப்பதற்கு, கல்வி ஆண்டினுடைய ஆரம்பத்திலேயே கொடுப்பதற்கு அரசு ஆணை பிறப்பிக்குமா ?



**மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாடப்புத்தகங்கள் சற்று தாமதமாக வழங்கப்பட்டன என்பது உண்மைதான். அதற்கு பல்வேறு காரணங்கள் இருக்கின்றன. கடந்த காலத்தில் சட்டமன்றத்தில் ஓரளவு அதை விளக்கியிருக்கிறேன். இந்த ஆண்டு தாமதம் ஏற்படாமல் வழங்குவதற்குத் தகுந்த நடவடிக்கை எடுத்துக் கொள்ளும்படி உரிய அலுவலர்களுக்குத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. இலவசப் பாடப் புத்தகங்கள் பள்ளிக்கூடங்களிலே கிடைக்காத போது, பிள்ளைகள் பெற்றோர்களை பாட புத்தகங்கள் வாங்கித் தரவேண்டுமென்று கேட்டால்கூட விற்பனைக்கு அந்த புத்தகங்கள் கிடைக்காது. இலவச புத்தகங்கள் கொடுக்கிற அன்றைய தினம்தான் விற்பனைக்குள்ள புத்தகங்கள் வருமே தவிர முன்னதாக விற்பனைக்கான புத்தகங்கள் வெளியிலே கிடைக்காது. ஆகவே, பெற்றோரைத் தொந்தரவு செய்தால் கூட வாங்கித் தரவேண்டிய கட்டாயம் அவர்களுக்கு கிடையாது.

**திரு. ப. முத்துசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆறாம் வகுப்பிலிருந்து எட்டாம் வகுப்புவரை பல மாணவர்கள் சத்துணவுத் திட்டத்தில் பெயர் கொடுக்கப்பட்டால் அவர்களுக்கு இலவசப் புத்தகங்கள் கிடைக்கும் என்ற அடிப்படையில் பெயர் கொடுத்துவிட்டு பலபேர் அங்கே சத்துணவு சாப்பிடாமல் இருக்கிறார்கள். இருந்தாலும் அதற்குரிய அரிசி, பருப்பு இவைகளெல்லாம் வீணாகப் போகின்றன. ஆகையால் ஏழையாக இருக்கக்கூடிய மாணவர்களுக்கு இலவசப் பாடப் புத்தகங்கள் தரப்படும் என்று அறிவித்து சத்துணவுத் திட்டத்தில் இருக்க வேண்டுமென்ற நிபந்தனையை அரசு ரத்து செய்வதற்கு பரிசீலிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏதாவது ஒரு வரைமுறை வைக்கிறபோது ஏழைகள் என்பதற்காக, பகல் உணவு, பள்ளிக்கூடங்களிலே பெறவேண்டிய நிலையிலே இருக்கிறார்கள் என்பது ஒரு அடையாளமாக வைக்கப்பட்டிருக்கிறது. தேவையானால், அது அவசியத்திற்கு ஏற்ப மறு பரிசீலனை செய்யப்படலாம்.

**திரு. செ. நூர்முகமது :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் சொல்கிறபோது, ஏழை மாணவ மாணவிகளுக்கு உபகரணங்கள் அளிப்பதற்கான ஆலோசனை இல்லை என்று சொன்னார்கள். ஆனால் உயர்நிலைப் பள்ளி வரையிலே படிக்கின்ற ஆதிதிராவிட பழங்குடி மக்கள் எண்ணிக்கை மிகக் குறைவாக இருக்கிறது. ஆகவே ஏழ்மையில் கஷ்டப்பட்டு, மேல்நிலைப்பள்ளி வரையிலும் செல்வதற்கு வாய்ப்பில்லாமல் சிரமப்படுகின்ற ஆதிதிராவிட பழங்

குடியினருக்காவது இந்த உபகரணங்கள் அத்தனையும் இலவசமாக வழங்குவதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உபகரணம் என்ற சொல் இதற்குப் பொருந்துமா என்று எனக்குத் தெரியவில்லை. இலவசமாகத் தரப்படுகிற இந்தப் புத்தகங்கள் இவைகளெல்லாம் தாழ்த்தப்பட்ட மாணவர்களுக்கும், பழங்குடியினருக்கும், மதம் மாறிய தாழ்த்தப்பட்டவர்களுக்கும்கூட வழங்கப்படுகிறது. அப்படி பயன் அடைந்தோர் எண்ணிக்கை, பாடப்புத்தகங்கள் பெற்றவர்கள் எண்ணிக்கை 1.76 இலட்சம். 176 ஆயிரம் பேருக்கு அந்தவகையிலே வழங்கப்பட்டிருக்கிறது. அதைப் போல பொதுவான பள்ளிகளிலே பயில்கிற தாழ்த்தப்பட்ட மாணவர்கள் 176 ஆயிரம் பேருக்கும், தாழ்த்தப்பட்ட மாணவர்கள் அதிகமாகச் சேர்க்கிற அப்படிப்பட்ட ஆதிதிராவிட மற்றும் பழங்குடியினர் நலப்பள்ளிகளில் 2 இலட்சத்து 46 ஆயிரம் பேருக்கும் பாடப்புத்தகங்கள் வழங்கப்பட்டிருக்கின்றன. ஏறத்தாழ அந்த விகிதாச்சாரத்தில் மற்ற பொருள்களும் அவர்களுக்கு வழங்கப்படும்.

திரு. யூ. கே. வெள்ளிங்கிரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு சார்பில் நடத்தக்கூடிய பள்ளிகளானாலும், தேவஸ்தானங்கள் சார்பாக நடத்தக்கூடிய பள்ளிகளானாலும் குறிப்பாக என்னுடைய தொகுதியில் மருதமலை தேவஸ்தானம் சார்பாக நடத்தப்படக்கூடிய பள்ளியில் லேப் இல்லாமல் கோவைக்கு சென்று அவர்கள் கற்றுக்கொள்கிற நிலைமை இருக்கிறது. அவர்களுக்கு அரசு அந்த உபகரணங்களை கொடுக்குமா அல்லது அந்த தேவஸ்தானமே ஏற்றுக்கொள்ளுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எந்தப் பள்ளிக்கூடங்களில் அதற்குத் தேவையான ஆய்வுக் கூடங்கள் இல்லையோ அந்தப் பள்ளிக் கூடங்களுக்கெல்லாம் ஒரு ஆய்வுக்கூட வண்டி வாரத்திலே ஒரு நாள் அல்லது 15 நாட்களுக்கு ஒருமுறை அனுப்பப்பட்டு அந்தப் பயிற்சி அதன் மூலமாக தற்காலிகமாக வழங்கப்படுவது எல்லா மாவட்டங்களிலும் தற்போது நடைமுறையில் இருக்கிறது.

திரு. ஜி. பழனிச்சாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பள்ளிக் குழந்தைகள் சத்துணவு சாப்பிட்டுக்கொண்டிருக்கின்றனர். அநேகமாக ஞாயிற்றுக் கிழமைகளில் குழந்தைகள் குறைவாக வருகின்ற காரணத்தால்............ (மணியடிக்கப்பெற்றது).



## குடிசைவாழ் மக்களுக்கு பட்டா வழங்கல்.

*2620—திரு. அ. இரகுமான்கான் :

மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

சென்னை, பூங்காநகர் தொகுதி 60-வது வட்டம், பழைய ஜெகநாதபுரத்தைச் சார்ந்த குடிசைவாழ் மக்களுக்குப் பட்டா வழங்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

சென்னை, பூங்காநகர் தொகுதி, பழைய ஜெகநாதபுரம் குடிசைப் பகுதியில் தற்போது குடிசைகள் ஏதும் இல்லை. இந் நிலம் தென்னிந்திய ரயில்வேக்குச் சொந்தமானதாகும்.

9–20 மணி

திரு. அ. இரகுமான்கான் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பூங்காநகர் தொகுதியில் உள்ள பழைய ஜெகநாதபுரத்தில் இருக்கிற குடிசை வாழ் மக்கள் பழைய ஆட்சியினரால் விரட்டப்பட்டு பக்கத்தில் உள்ள இடங்களில் தஞ்சம் புகுந்திருக்கிறார்கள். அவர்களுக்குப் பட்டா வழங்கப்பட வேண்டுமென்ற கோரிக்கையை அரசிடத்தில் பல ஆண்டுகளுக்கு முன்பே முன்னாள் சட்டப் பேரவைத் தலைவராக இருந்த சிவசண்முகம் பிள்ளை அவர்கள் காலத்திலிருந்தே ரயில்வே துறைக்குக் கொடுக்கப்பட்டது. அதற்கான அனுமதி இன்னும் கொடுக்கப்படவில்லை. கிடைத்ததா, இல்லையா என்ற தகவல் இல்லை. அந்தக் கோரிக்கை இன்னும் அரசிடம்தான் இருக்கிறது. இங்கே திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி மலர்ந்திருக்கிறது. தேசிய முன்னணி ஆட்சியும் நமது ஆட்சியாக இருக்கிறது. எனவே மத்திய அரசிடம், ரயில்வே துறையிடம் இது குறித்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அணுகி, அங்கேயிருக்கிற ஆதிதிராவிட மக்களுக்கு பட்டா வழங்குகிற முயற்சியை நமது அரசு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அப்படி செய்திருக்கிறார்களா, செய்யப்படுமா? அப்படியில்லை என்றால் அரசுக்குச் சொந்தமாக பக்கத்திலேயே இருக்கிற இடத்திலாவது பட்டா வழங்கப்படுமா ? அத்துடன் இன்னொரு கேள்விக்கும் தாங்கள் அனுமதி வழங்கவேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் : மாண்புமிகு உறுப்பினர் இரகுமான்கான் பாய் அவர்கள் பழைய........ (சிரிப்பு).

[1990 மார்ச் 30

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மதிப்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு அப்படியொரு ஒட்டு இருப்பதாக எனக்குத் தெரியவில்லையே. (சிரிப்பு).

மாண்புமிகு திரு. நாஞ்சில் இ. மனோகரன் : எங்களுக்குள்ளே அந்தப் பாச உணர்வு உண்டு. (சிரிப்பு). சட்டமன்றப் பேரவை வினாவில் உள்ள சென்னை பூங்காநகர் பகுதி பழைய ஜெகநாதபுரம் நிலத்தைப் பற்றி நிலையான பதிவேட்டில் உள்ள விபரத்தை மாண்புமிகு இரகுமான்கானுக்கு வழங்குகிறேன். கிராமம்—வேப்பேரி. புல எண். 1286/9. விஸ்தீரணம் 01, 07, 0456 சி.சி. காணி, சதுரஅடி. உரிமையாளர்—தென்னிந்திய ரயில்வே. பழைய ஜெகநாதபுரத்தில் குடிசைப் பகுதிகள் நிலத்தணிக்கை செய்யப்பட்டதில், அப்படியே காலியாகவே உள்ளது. அங்கே வசித்து வந்த குடிசைவாழ் மக்களுக்கு குடிசைமாற்று வாரியத்தால் நான்காண்டுகளுக்கு முன்னரே மாற்றுக் குடியிருப்புகள் கொடுக்கப்பட்டுள்ளன. எனவே, மேற்குறிப்பிடப்பட்ட ஜெகநாதபுரத்தில் குடிசை ஏதுமில்லை என்பதாலும், அது ரயில்வே நிலமாக இருப்பதாலும், பட்டா வழங்கும் பரிசீலனை எழவில்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தொடர்ந்து பேசும்போது, கேட்ட கேள்வியில், மேலே மைய அரசு நமது அரசாக இருக்கிற காரணத்தாலும், இங்கே தி.மு.க. அரசு இருக்கிற காரணத்தாலும், மத்திய அரசோடு தொடர்புகொண்டு அந்த நிலத்தைப் பெறுகிற முயற்சியில் நான் ஈடுபட வேண்டுமென்றும், அப்படி அது ஒத்துக்கொள்ளப்பட்டால், அங்கே தாழ்த்தப்பட்ட மக்கள் குடியிருக்க முயற்சி எடுக்கவேண்டுமென்றும் கேட்டிருக்கிறார்கள். நல்ல யோசனை. மைய அரசின் கவனத்திற்குக் கொண்டு வருவதற்கு நமக்கு ஒன்றும் தடையில்லை. அப்படி ஒப்புக்கொள்வார்களேயானால், மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கை நிறைவேறுவதற்கான முயற்சியில் என்னாலான உறுதுணை நிச்சயம் இருக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன். அடுத்தாற்போல, இனியும் ஒரு கேள்வி கேட்க அனுமதிக்க வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். அதற்குள்ள தேவை இருப்பதாக நான் கருதவில்லை. அவர் கருதினால் கேட்பதும் கேட்காததும் அவர் இஷ்டம். அவரை அனுமதிப்பதும் அனுமதிக்காததும் உங்கள் இஷ்டம்.

திரு. அ. இரகுமான்கான் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவை விதிகளுக்கிணங்கவே இரண்டாவது கேள்வி கேட்க உரிமை இருக்கிறது என்று நம்புகிறேன். நம்முடைய......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உரிமை பற்றி இல்லை. அந்த அளவுக்கு முழுமையான பதிலைச் சொல்லிவிட்டதால், அதற்குத் தேவையே இருக்காது என்ற அடிப்படையில்தான் அமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள்.



1990 மார்ச் 30]

திரு. அ. இரகுமான்கான் : மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மத்திய அரசிடம் சொல்லி அந்த இடத்தில் அவர்களுக்கு பட்டா வழங்க முயற்சி எடுக்கப்படும் என்று சொல்லிய காரணத்தால், நான் நிறைவோடு இருக்கிறேன். ஆனால் அதையொட்டி இன்னொரு கேள்வி. அமைச்சரை விழாவிற்கு அழைக்கிற கேள்வி. ஏற்கெனவே பூங்காநகர் தொகுதியில் கிரே நகர் பகுதியில் பெரியார் நகரில் எம்.எம்.டி.ஏ. அப்ரூவல் கொடுத்த சில இடங்களுக்கு அரசின் சார்பில் விழா நடத்த வேண்டும். அங்கே அதிகாரபூர்வமான பட்டா கொடுக்க வேண்டும். அதுபோல் கார்ப்பரேஷன் லைன் என்று சொல்லக்கூடிய சில பகுதிகள் எல்லாம் இருக்கின்றன. அங்காளப்பநாயக்கன் தெருவிலே ஆதி ஆந்திரர்கள் வாழ்கிறார்கள். அந்தப் பகுதியும் இருக்கிறது. உத்வார் போன்ற பகுதி இருக்கிறது. அங்கெல்லாம் ஆதிதிராவிட மக்கள் மற்றும் ஆதி ஆந்திரர்கள் வாழ்கிறார்கள். ஆக அமைச்சர் பெருமகனார் அவர்களிடத்திலே நான் ஒன்றைக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். எம்.எம்.டி..ஏ. அப்ரூவல் வழங்கியதற்குப் பிறகு நாம் பட்டா கொடுக்க வேண்டியவர்களாக இருக்கிறோம். அந்த விழாவுக்கு அமைச்சர் அவர்கள் அவசியம் வந்து சிறப்பிக்க வேண்டும். அந்த மக்களுக்குப் பட்டா வழங்கப்பட வேண்டும். அதற்கு விரைவில் வருவார்களா என்று இந்தச் சபையின் மூலம் நான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

9-25 மணி

மாண்புமிகு திரு. நாஞ்சில் இ. மனோகரன் : பேரவைத் தலைவர் அவர்களே, நிரம்ப யோசனைகளை வழங்கிய மாண்புமிகு உறுப்பினர் திரு. இரகுமான்கான் அவர்களுக்கு எனது நன்றியினையும், வாழ்த்தையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வேறு உறுப்பினர்கள் யாரேனும் அமைச்சரை விழாவுக்கு அழைக்க வேண்டிய தேவை இருந்தால், அது குறித்து மொத்தமாக எழுதிக்கொடுத்துவிட்டால் அதனை அவரிடத்தில் கொடுத்து, விடையை வாங்கிக் கொடுத்து விடலாம் என்று கருதுகிறேன். (சிரிப்பு).

திரு. வே. பெரியசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, குடிசைப் பகுதிகளுக்குப் பட்டா வழங்குகிறபோது நீண்ட நெடுங்காலத்திற்கு முன்னாலே ஊர்நத்தம், மந்தை என்று வைத்திருக்கிறார்கள்........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது பூங்காநகர் தொகுதியைச் சேர்ந்த கேள்வி.

திரு. சி. கோவிந்தசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, பட்டா வழங்குகிற பிரச்சினையை ஒட்டி இருக்கின்ற காரணத்தால்........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பூங்காநகர் பகுதி குறித்து மட்டும் தான் கேட்க வேண்டும்.

[1990 மார்ச் 30

திருபெரும்புதூர் ஊராட்சி ஒன்றியப் பொதுமக்களுக்குக் குடிமனைப் பட்டா.

*3169—திரு. ஏ. கோதண்டம் ;

மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) திருப்பெரும்புதூர் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள குண்டுபெரும்பேடு, எரையூர், மேட்டுப்பாளையம், பால்நெல்லூர் போன்ற கிராமங்களில் உள்ள பொது மக்களுக்கு குடிமனைப் பட்டா வழங்குவதில் ஏற்பட்டுள்ள காலதாமதத்தை அரசு அறியுமா ?

(ஆ) விரைவில் பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) திருப்பெரும்புதூர் வட்டம், குண்டுபெரும்பேடு, எரையூர், மேட்டுப்பாளையம், பால்நெல்லூர் கிராமங்களில் வீட்டு மனைப்பட்டா கோரி மனுக்கள் ஏதும் நிலுவையில் இல்லை.

குண்டுபெரும்பேடு கிராமத்தில் ஏற்கனவே வழங்கப்பட்ட குடிமனைப்பட்டாக்கள் தொலைந்தும், அழிந்தும் போனதால் தற்போது தொகுப்பு வீடுகள் கட்டும் திட்டத்தில் பயனடையும் பொருட்டு அனுபவச்சான்று வழங்கினால் போதுமென அக் கிராமத்தினர் தெரிவித்துள்ளனர். அவர்களிடமிருந்து மனுக்கள் உரிய அதிகாரிக்கு வந்தவுடன் அச்சான்று வழங்கப்படும்.

மேட்டுப்பாளையம் கிராமத்தில் அனுபவச்சான்று வழங்கினால் போதுமென கிராமத்தினர் தெரிவித்துள்ளனர். அம் மனுக்கள் வந்தவுடன் இச்சான்று வழங்கப்படும்.

எரையூர் கிராமத்தில் அரிசன நலத்துறை மூலமாகவோ அல்லது 'தாட்கோ' நிறுவனத்தின் மூலமாகவோ தொகுப்பு வீடுகள் கட்டித் தரும்படி கோரியுள்ளார்கள். பட்டா கோரவில்லை.

பால்நெல்லூர் கிராமத்தைப் பொறுத்தமட்டிலும், பட்டா கோரும் புல எண் 133 தோப்பு புறம்போக்காகும். இதில் பட்டா வழங்குவதற்கு அக்கிராமத்திலேயே ஆட்சேபணை உள்ளது. மேலும் இது தொடர்பாக வழக்கு ஒன்று மாவட்ட முன்சீப் நீதிமன்றத்தில் (ஓ.எஸ். எண். 654/78) நிலுவையில் இருப்பதால் தற்போது நடவடிக்கை மேற்கொள்ள இயலாது.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.



1990 மார்ச் 30]

திரு. ஏ. கோதண்டம் : பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பெரும்புதூர் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள குண்டுப் பெரும்பேடு, ஏரையூர், மேட்டுப்பாளையம், பால்நெல்லூர் போன்ற கிராமங்களில் உள்ள பொதுமக்கள், நான் அவர்களைச் சந்திக்கும்போது குடிமனைப் பட்டா வழங்கவேண்டுமென்று மனு தந்தார்கள். அதை நான் வட்ட ஆட்சியாளரிடம் தந்து அது காலதாமதம் ஆகிக்கொண்டிருப்பதால் உடனடியாக அவர்களுக்கு பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் : பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே இந்தக் கேள்விக்குப் பதில் சொல்லிவிட்டதாக நம்புகிறேன். இருந்தாலும் சொல்கிறேன். குண்டுப்பெரும்பேடு, மேட்டுப்பாளையம் ஆகிய கிராமங்களில் உள்ள மக்களுக்கு ஏற்கெனவே வழங்கப்பட்டிருந்த பட்டாக்கள் அழிந்தும், தொலைந்தும் போன நிலையில் அவர்களின் வீட்டுமனைக்கு அனுபவச் சான்றிதழ் வழங்கினாலே போதும் என செங்கை-அண்ணா மாவட்ட வருவாய்த்துறை அலுவலர் தெரிவித்துள்ளார். உரிய அதிகாரிக்குக் கோரிக்கை வந்தவுடன் அவர்களுக்கு அனுபவச் சான்றிதழ் வழங்க முடியும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து வினா எண் 4250. நேற்றே இந்த வினா வந்து, நேற்றைக்கே விடையும் சொல்லப் பட்டு இருப்பதாக நான் அறிகிறேன். இருந்தாலும் மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள் விடை சொல்வார்கள். (சிரிப்பு)

கீழ்பவானி பாசன விவசாயிகளுக்கு விதிக்கப்பட்டுள்ள தண்டத் தீர்வை.

*4250—திரு. துரை ராமசாமி :

மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:—

கீழ்பவானி பாசன விவசாயிகளுக்கு விதிக்கப்பட்டுள்ள தண்டத் தீர்வை ரத்து செய்யப்பட வேண்டுமென்ற விவசாயிகளின் கோரிக்கையை அரசு நிறைவேற்றுமா ?

9-30 மணி

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிரமத்திற்கு ஆளாக்கியதற்கு உங்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (சிரிப்பு). தண்டத் தீர்வையைத் தள்ளுபடி செய்யவேண்டுமென்ற கோரிக்கையை அரசு ஆய்வு செய்து அரசாணை (நிலை) எண் 1955 வருவாய், நாள் 6—11—1989 இல் புஞ்சைக்குப் பதிலாக நஞ்சை விளைவித்து அதனால் விதிக்கப்பட்ட அபராதத் தண்ணீர் தீர்வையில் இதுகாறும் நிலுவையிலே உள்ள தொகை

முழுவதையும் தள்ளுபடி செய்துள்ளது. இச்சலுகை முறையற்ற அதாவது வாய்க்கால் உடைத்து பாசனம் செய்வது போன்ற இதர இனங்களுக்குப் பொருந்தாது.

திரு. ஏ. கணேசமூர்த்தி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுவரையிலே விதிக்கப்பட்டிருக்கின்ற அபராதத் தீர்வைதான் ரத்து செய்யப்பட்டிருக்கிறது. இனிமேல் இந்த அபராதத் தீர்வையை விதிக்காமல் இருப்பதற்கு அரசாங்கம் உத்தரவு வழங்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே இதைப்பற்றி சொல்லி இருக்கிறேன். அரசாங்க ஆதாரத்திலிருந்து அல்லது பாசன ஆதாரத்திலிருந்து வருவாய் பதிவேட்டில் நஞ்சையாக பதிவு செய்யப்பட்டிருக்கும் நிலங்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ள நிபந்தனைகளை அனுசரிக்காது தண்ணீர் பாய்ச்சினாலோ மற்ற எந்த நிலத்திற்கும் தக்க அதிகாரியால் கொடுக்கப்பட்டு இருக்கும் அனுமதி சீட்டில் கொடுக்கப்பட்டுள்ள நிபந்தனைகளை அனுசரிக்காமல் தண்ணீர் பாய்ச்சினாலோ ஒரு வாய்க்கால் நீரை தடுத்து நிறுத்துவது அணை கட்டுவது போன்றவற்றால் முறையற்ற நீர்ப்பாசனம் செய்தாலோ ஆணைப் பிறப்பிக்கத்தக்க அதிகாரியின் ஆணைக்கு மாறாக நீரைப் பயன்படுத்தினாலோ அனுமதிக்கப்பட்ட ஆதாரம் மற்றும் தண்ணீர் பாய்ச்சுவதற்கு விதிக்கப்படும் நிபந்தனைகளை மீறி தண்ணீர் பாய்ச்சினாலோ பாசனம் முறையற்றதாகக் கருதப்படுகிறது.

புஞ்சை மற்றும் நஞ்சை நிலத்திற்குச் செய்யும் முறையற்ற நீர்ப்பாசனத்தைப் பொறுத்தவரை கீழ்க்கண்டவாறு அபராதம் விதிக்கப்படுகிறது :

| | புஞ்சை | நஞ்சை |
|---|---|---|
| பெரியார் & தாமிரபரணி பாசன பகுதிகளில் : | | |
| முதல் முறை | 3 மடங்கு | 2 மடங்கு |
| 2வது முறை | 6 மடங்கு | 5 மடங்கு |
| 3வது முறை | 12 மடங்கு | 11 மடங்கு |
| 4வது முறை | 20 மடங்கு | 19 மடங்கு |
| மற்ற பகுதிகளில் : | | |
| முதல் முறை | 2 மடங்கு | 1 மடங்கு |
| 2வது முறை | 5 மடங்கு | 4 மடங்கு |
| 3வது முறை | 10 மடங்கு | 9 மடங்கு |
| 4வதும் அதற்கு மேலும் | 20 மடங்கு | 19 மடங்கு |

திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய விளக்கத்திற்குப் பிறகு தமிழகத்திலே தண்டத் தீர்வை விதிப்பதன் வாயிலாக எவ்வளவு அரசுக்கு வருமானம்



வருகிறது என்பதோடு, இந்த ஆண்டு இந்த அரசு உத்தரவு வழங்குவதற்கு முன்னால் அங்கே கெடுபிடி வசூல் செய்து கட்டப்பட்டிருக்கின்ற அந்த விவசாயிகளிடமிருந்து வசூல் செய்த தண்டத் தீர்வையை அவர்களுக்கு திருப்பிக் கொடுப்பதற்கு அரசு முன்வருமா என்பதைநான் அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 6—11—1989ல் இதுகாறும் விதிக்கப்பட்ட தண்ணீர் தீர்வையில் நிலுவையாக உள்ள தொகை முழுவதும் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. மேற்படி அரசாணைப்படி சலுகை முறையற்ற அதாவது வாய்க்கால் உடைத்து பாசனம் செய்வது போன்ற இனங்களுக்குப் பொருந்தாது. மேற்காணும் அரசாணைக்கு இணங்கபெரியார் மாவட்டத்தில் பயிர்கட்டுபாடு இனத்தில் நிலுவையாக உள்ள சுமார் 3 கோடி ரூபாய் தள்ளுபடி சலுகைக்கு உட்படுகிறது.

### கிராமப்புறங்களில் வீடு கட்டிக்கொள்ள கடன்.

*2380—திரு. ஆர். அண்ணாநம்பி :
மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) கிராமப்புறங்களில் உள்ள ஏழை எளியோருக்கு சொந்தத்தில் வீடு கட்டிக் கொள்ள மானியமும், கடனும் வழங்கும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், இத்திட்டம் எப்போது செயல்படும் ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) இந்தத் திட்டம் இந்த ஆண்டு முதல் அதாவது 1989–90 ஆவது நிதியாண்டு முதல் செயல்படுத்தப்படுகிறது.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டு இது அமுல்படுத்தப்படும் என்றால் அதாவது கிராமத்திலுள்ள விவசாயிகளுக்கு நாம் எவ்வளவு கடன் கொடுக்க இருக்கிறோம், எத்தனை ஆண்டுகளில் திருப்பிக் கொடுக்கவேண்டிய சூழ்நிலை இருக்கிறது, ரூரல் அவுசிங் ஸ்கீம் என்று நாம் ஏற்கெனவே வைத்து இருக்கிறோம். அந்த திட்டத்தின் மூலமாக 31 ஆண்டுகளுக்கு அவர்கள் வில்லங்க சர்டிபிகேட் வாங்கவேண்டுமென்று இருக்கிறதே, அதுவும் இன்று கட்டுப்படுத்தப்படுமா அல்லது ரத்து செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே இருந்த ரூரல் அவுசிங் ஸ்கீம் என்டதை பெயர் மாற்றம் செய்து தமிழ்நாடு கிராம வீட்டு வசதி திட்டம் என்று மாற்றி அமைக்கப்பட்டு 1989–90 ஆவது நிதி ஆண்டு முதல் வீடுகள் கட்டுவதற்கு கடன் வழங்கப்பட்டு வருகிறது. இந்த ஆண்டில் 30 ஆயிரம் வீடுகள் கட்டவேண்டு மென்று அரசு உத்தரவிட்டிருக்கிறது. 9 ஆயிரம் ரூபாய் மதிப் பீட்டில் ஆதிதிராவிடர்கள் அல்லாதவர்களுக்கு 201 சதுர அடி பரப்பளவு கொண்ட ஓட்டு வீட்டினைக் கட்டுவதற்காகவும் இந்த கடன் வழங்கப்படுகிறது. வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சிக் கழகத்திடமிருந்து பெறக்கூடிய ரூ. 4,500-ம், தமிழ் நாடு அரசாங்கத்தால் வழங்கப்படுகிற மானியம் 1,500 ரூபாயும் கடன் பெறுவோர் தங்களது சொந்த மூலதனமாகவோ அல்லது கட்டடப் பொருள்களாகவோ ஈடு செய்கிற வகையில் 3,000 ரூபாய் ஆகமொத்தம் 9,000 ரூபாய் மதிப்பீட்டில் இந்த திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இதற்குகூட சென்ற ஆண்டு 1988–89 ஆண்டில் 9.58 சதவிகிதம் வரி விதிக்கப்பட்டு இருந்தது. 20 ஆண்டுகள் தவணைகளிலே திருப்பிச் செலுத்தப்படவேண்டும். அது இந்த ஆண்டு முதல் 20 தவணைகள் ஆகவும் வட்டியில் 8.5 சதவிகி ம் செலுத்தினால் போதும் என்றும் சலுகைகள் வழங்கப்பட்டிருக்கின்றன. அதே போல் இதற்கு முன்னாள் தங்களுடைய வேறுவிதமான சொத்துக்களை அடமானம் வைக்க வேண்டும். தங்களுடைய வீட்டையும் நிலத்தையும் அடமானம் வைக்கவேண்டுமென்ற நிலையை மாற்றி அவர்களுடைய பத்திரங் களை மட்டுமே ஒப்படைத்தால் போதும் என்ற சலுகை இந்த ஆண்டிலேயிருந்து வழங்கப்பட்டு வருகிறது.

9–35 மணி

திரு. ஆர். மகேந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிராமப் பகுதிகளில் ஏழையெளிய மக்களுக்கு சொந் தத்தில் விடுகள் கட்ட வழங்குகின்ற கடன்தொகை போதுமான தாக இல்லை. எனவே, இந்தத் தொகையை உயர்த்திக் கொடுக்க இந்த அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே குறைந்தத் தொகை இருந்த காரணத்தினாலேதான் இந்த ஆண்டு முதல் அது உயர்த்தப் பட்டிருக்கிறது. இந்த ஆண்டின் நடைமுறைமூலம் எப்படி இத்திட்டம் செயல்படுகிறது என்பதைப் பார்த்து அரசு பரி சீலனை மேற்கொள்ளும்.

திருமதி பாப்பா உமாநாத் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நகர் வீட்டுவசதி வாரியத்தைப் போல கிராமங்களில் இருக்கிற, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவித்ததுபோல,



வீட்டுவசதி வாரியம் வீடுகளைக் கட்டி, ஏழையெளிய மக்கள் நீண்டக் காலத் தவணைகளில் மாதா மாதம் கட்டும்வகையில் சொந்தமாக கட்டிக் கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமீபத்தில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிவித்த கொள்கை அறிவிப்பின்படி, கிராமப் பகுதிகள், நகரைச் சார்ந்திருக்கின்ற பகுதிகள் அல்லது நகர பேரூராட்சி களாக இருக்கிற பகுதிகளில் 5 ஆண்டுக் காலத்தில், 500 இடங் களில், ஒரு இலட்சம் வீடுகள் கட்டப்பட வேண்டும் என்ற கிராம வீட்டு வசதித் திட்டத்தை உருவாக்குகின்ற வகையிலே அந்தத் திட்டம் இந்த ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்டிருக் கிறது. வருகிற ஆண்டில் அதற்காக நிதி ஒதுக்கீடு செய்து வீடு கட்டும் திட்டத்தைத் தொடங்க இருக்கிறோம். ஏற்கெனவே சொன்ன திட்டத்தைப் பொறுத்தவரையில் கிராமப் புறங்களில் இருக்கிற ஆதி திராவிடர் அல்லாத சாதாரண வறுமைக் கோட்டுக் குக் கீழே இருக்கிற மக்களுக்குப் பயன்படும் வகையில் இத் திட்டம் உருவாக்கப்பட்டிருக்கிறது.

திரு. உ. ரா. வரதராசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இத்திட்டத்திலே, ஏழையெளியவர் என்பதற்கான வரையறை என்ன? இதற்கான நிதி ஒதுக்கீடு எவ்வளவு? பணு செய்பவர்கள் எல்லோருக்கும் கிடைக்க வாய்ப்பிருக்கிறதா?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாதத்திற்கு 700 ரூபாய்க்குக்கீழ் வரு மானமுள்ளவர்களுக்கு, குறைந்த வருமானமுள்ளவர்களுக்கு இந்த கடனுதவி வழங்கப்படுகிறது.

திரு. சோ. அழகர்சாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிராமப்புறங்களில் ஏழையெளியவர்களுக்கு வீடு கட்டுகிற திட்டம் மிக முக்கியமான திட்டம். ஏற்கெனவே இத் திட்டம் ரூரல் ஹவுசிங் ஸ்கீம் என்கின்ற பெயரில் கிராமக் கூட்டுற வுக் கடன் சங்கங்கள் மூலமாக கொடுக்கப்பட்டதாக சொல்கிறார்கள். கூட்டுறவுக் கடன் சங்கங்கள் மூலம் 6 ஆயிரம் ரூபாய் கொடுக்கப்பட்டு வந்தது. இப்போது கூட்டுறவு அமைப்பு அல்லது வீட்டுவசதி மாதிரி கொடுக்கப்படுமா? அல்லது வேறு எந்த முறையில் இந்தக் கடனை அரசு வினியோகம் செய்ய கருதி இருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாலுகா கூட்டுறவு வீடு கட்டும் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் இக்கடன் வினியோகம் செய்யப்பட்டு வருகிறது. ஏற்கெனவே கிராமப்புறங்களில் இருக்கின்ற வீடு கட்டும் சங்கங்

களை எல்லாம் சீரமைத்து தாலுகா கூட்டுறவு வீடு கட்டும் சங்கங்களாக சீரமைத்ததன் மூலம், இச்சங்கங்கள் மூலம்தான் இது வழங்கப்படுகிறது என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. பி. என். வல்லரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே . . . . . . . . . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உறுப்பினர் திரு. வல்லரசு அவர்கள் கொஞ்சம் பொறுமையைக் காட்ட வேண்டும். தங்களுடைய வினா அடுத்து வருகிறது.

மதுரை திருவள்ளுவர் பேருந்து நிலையத்தை நவீனமாக்குதல்.

*6135— திரு. பி. என். வல்லரசு :

மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) மதுரையில் உள்ள திருவள்ளுவா பேருந்து நிலையத்தை நவீனமாக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் என்ல், எப்பொழுது நிறைவேற்றப்படும் ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) இன்னும் இரண்டு ஆண்டுகளில் நிறைவேற்றப்படும்.

திரு. பி. என். வல்லரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை மாநகர் வளர்ந்து வருகிற ஒரு சிறப்பு மிக்க நகரம். மதுரையிலுள்ள திருவள்ளுவர் போக்குவரத்து நிலையத்திற்கு சென்னை, கன்னியாகுமரி மற்றும் தொலை தூரமான திருப்பதி போன்ற இடங்களிலிருந்து பஸ்கள் வருகின்றன. அப்படி வருகின்ற பஸ்கள் எல்லாம் நிற்க போதிய இட வசதி இல்லாத நிலை உள்ளது. பிரயாணிகள் தங்கவும் அங்கே போதிய இட வசதி இல்லை. இப்படிப்பட்ட நிலையில் மதுரை திருவள்ளுவர் போக்குவரத்து நிலையத்தை நவீனப்படுத்த, அபிவிருத்தி செய்ய அரசு முன்கூட்டியே காலக்கெடுவை நிர்ணயம் செய்து பணிகள் தொடங்க ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

9—40 மணி

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல திருவள்ளுவர் போக்குவரத்து கழக பஸ் நிலையத்தி





லிருந்து மதுரையில் நாள்தோறும் 400 பேருந்துகள் புறப்படுகின்றன. 150-க்கும் மேலான பேருந்துத் தொழிலாளர்கள் தங்கும் அளவுக்கு வசதிகள் செய்யப்பட்டிருக்கின்றன. ஒரு நாளைக்கு 20,000 பயணிகள் வந்து செல்லுகிறார்கள். இந்த நிலைமைகளை எல்லாம் கருத்திலே கொண்டு அந்த இடத்தை இன்னும் விரிவுபடுத்த வேண்டுமென்ற முறையில் பக்கத்திலுள்ள நிலங்களை ஆர்ஜிதம் செய்வதற்கு யோசிக்கப்பட்டது. ஆனால் பக்கத்திலே நிலங்கள் ஆர்ஜிதம் செய்வதற்குத் தகுந்தாற்போல் இல்லாததால், இருக்கின்ற இடத்திலேயே அபிவிருத்தி செய்து, கூடுதலான வசதிகளோடு பேருந்து நிலையத்தை அமைக்க வேண்டுமென்று முடிவு செய்யப்பட்டு, சுமார் 90 இலட்சம் ரூபாய் செலவில் அந்த பஸ் நிலையத்தை உருவாக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. இதற்கான ஒப்புதல் தரப்பட்டு, விரைவில் அந்த வேலைகள் தொடங்கப்பட இருக்கின்றன. நான் ஏற்கெனவே கூறியபடி 2 ஆண்டுகளில் முடிக்க வேண்டுமென்று குறியீடு இருந்தாலும் விரைவில் முடிக்க வேண்டிய முயற்சிகளை மேற்கொள்ள அரசு திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்தை வலியுறுத்தும்.

திரு. பி. என். வல்லரசு ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவள்ளுவர் பஸ் நிலையத்தின் அருகில் பெரியார் பஸ் நிலையம் இருக்கிறது. இந்த இரண்டு பஸ் நிலையங்களும் ஒன்றுக்கொன்று பக்கத்திலேயே இருக்கின்றன. மழைக் காலங்களில் பெரியார் பஸ் நிலையம் முழுவதும் தண்ணீர் நிரம்பிவிடுகின்றது. 10 நாட்கள், 15 நாட்களுக்குக்கூட பெரியார் பஸ் நிலையத்திற்குள் பஸ்கள் செல்ல முடியாத, மக்கள் செல்ல முடியாத சூழ்நிலை ஏற்படுகிறது. அதனால் தற்காலிக பஸ் நிலையங்கள் பல ஏற்பட்டு, எந்த பஸ் நிலையத்திற்குச் செல்வது என்று மக்களுக்கு குழப்பமான நிலை ஏற்படுகிறது. எனவே திருவள்ளுவர் பஸ் நிலையத்திற்கு அருகில் உள்ள பெரியார் பஸ் நிலையத்தால் மழைக் காலங்களில் திருவள்ளுவர் பஸ் நிலையத்தில் பல்வேறு கஷ்டங்கள் ஏற்படுவதால், பாதாளச் சாக்கடையை நவீனமுறையில் கட்டி உடனுக்குடன் அங்கே தங்கும் தண்ணீரை வெளியேற்ற அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் ; பேரவைத் தலைவர் அவர்களே, திருவள்ளுவரும், பெரியாரும் எவ்வளவோ வகையிலே ஒற்றுமையுடைய கருத்துக்களை உடையவர்கள். இந்தப் பேருந்து நிலையங்களில் இருக்கின்ற குறைபாடுகளை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். அவைகளை எல்லாம் போக்குவதற்கு சம்பந்தப்பட்ட நடவடிக்கைகளை துறைகள் மேற்கொள்ளும்.

திரு. சோ. பால்ராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெரியார் பேருந்து நிலையத்தில் மழைக் காலங்களில் ஜனங்கள் கஷ்டப்படுவதன் காரணமாக, தற்காலிகமாக தெற்கு வெளி வீதியில் முன்னாள் காவலர் குடியிருந்த பகுதியில் வெளியூர் பேருந்துகள் நிறுத்தப்பட்டிருக்கின்றன. அவர்களுக்குப் போதுமான வசதிகள் இன்மையால், உடனடியாக சிட்டி பஸ்களையும் மபுசல் பேருந்துகளையும் ஒருங்கிணைத்து, ஒரே இடத்தில் அதை நிறுத்த ஏற்பாடுகளைச் செய்து தர முடியுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூலக் கேள்விக்கு இது சம்பந்தமில்லை என்றாலும், சமீபத்தில் நான் மதுரை சென்றிருந்த போது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட பேருந்து நிலையத்தையும் நேரடியாகப் பார்க்கக்கூடிய வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. அங்கே பயணிகளுக்காகச் சில வசதிகளை ஏற்படுத்த வேண்டுமென்று மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். அந்த வசதிகளை நிறைவேற்றினாலேயே பொது மக்களுக்கு ஓரளவுக்கு நெரிசல் குறைந்து, வசதி செய்து கொடுத்ததாக அமையும் என்பதால் அந்த இடத்திலேயே மேற்கொண்டு அபிவிருத்தி செய்வதற்கான ஏற்பாடுகள் செய்யப்படும்.

திரு. வே. தங்கபாண்டியன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, பெரியார் பஸ் நிலையத்திற்கு அருகிலேயே உள்ள திருவள்ளுவர் பஸ் நிலையத்தை விஸ்தரிக்க வேண்டுமென்று தொலைநோக்கத்தோடு இந்த அரசு திட்டமிட்டிருக்கிறதா ? பல லட்சக் கணக்கான ரூபாய்களை நெருக்கடியான பகுதியில் செலவழிப்பதைவிட, நகரப் பகுதிக்கு அப்பாலே புதிய பஸ் நிலையத்தை அமைக்க அரசிடம் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : பேரவைத் தலைவர் அவர்களே, திருவள்ளுவர் பேருந்து நிலையத்தைப் பொறுத்தவரையில் நகரத்தின் மத்தியில், பல்வேறு பகுதிகளிலிருந்தும் பொதுமக்கள் வந்து போகின்ற வகையில் அமைந்திருக்கிற நிலையமாகும். ஆகவே, நகரத்தை விட்டு அப்பால் கொண்டு செல்வது என்றால் அதற்கு நீண்ட நாளாகும். எனவே, இருக்கின்ற பேருந்து நிலையத்தை அபிவிருத்தி செய்ததற்குப் பிறகும் தேவைப்பட்டால் நகரத்தினுடைய வெளிப் பகுதியில் புதிய நிலத்தை விலைக்கு வாங்கி, புதிய பஸ் நிலையம் ஏற்படுத்துவது பற்றி யோசனை செய்யலாம்.



9-45 மணி

திரு. அ. லெ. சுப்பிரமணியன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, இப்படிப் புதிய பஸ் நிலையங்களை உருவாக்குகின்றபோது பயணிகளுடைய நலன்களை மட்டும் கருத்தில் கொள்ளப்படுமா என்று அறிய விரும்புகிறேன். அதிலும் இப்போது எல்லாம் பஸ் ஸ்டாண்டுகளில் தேவையில்லாத கடைகள் - லாட்டரி சீட்டுக் கடை, முடி திருத்தகம், வீடியோ, ரேடியோ கடைகள் போன்றவற்றை எல்லாம் வைத்து பயணிகளுக்கு உள்ள இடங்களை ஆக்கிரமிப்பு செய்து ஏராளமான கஷ்டத்தை உண்டு பண்ணுகிறார்கள். ஆகவே, இனி பேருந்து நிலையத்தை நவீனமாக்குகின்றபோது குறைந்த அளவில் கடைகளை மட்டும் வைப்பதற்கு அரசு திட்டமிடுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவர் அவர்களே, பயணிகளுடைய வசதியைக் கருதி கடைகள் உருவாக்குவது கருத்திலே கொள்ளப்படும்.

திரு. எஸ். எஸ். தென்னரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்க பாண்டியன் அவர்கள் ஒரு முக்கியமான கேள்வியைக் கேட்டு இருக்கிறார்கள். நம்முடைய அமைச்சர் அவர்கள் எப்போதாவது மதுரைக்கு வருகிறபோது மாலை 6 மணிக்கு மதுரை பெரியார் பஸ் நிலையத்திலிருந்து அதைச் சோதனையிட்டால் 3 மணி நேரம் அந்த இடத்தில் போக்குவரத்து காரணமாக காத்து இருக்க வேண்டிய அவசியம் ஏற்படுகிறது என்பது தெரியவரும். மிக விரைவிலே போக்குவரத்துக் கழகத்தை நகரத்திற்கு அப்பாலே கொண்டுசெல்ல அரசு முயற்சி எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவர் அவர்களே, அரசு இந்தக் கருத்தை யோசிக்கும்.

திரு. எஸ், ஆர். இராதா: தலைவர் அவர்களே, 20 ஆயிரம்
மக்கள் வந்துபோகிற ஒரு பேருந்து நிலையம் என்று அறிவிக்கப்
பட்டு இருக்கிறது. 90 இலட்சம் ரூபாயில்தான் இந்தத் திட்டம்
தயாரிக்கப்பட்டு இருப்பதாகச் சொல்லப்பட்டு இருக்கிறது.
ஆனால் 90 இலட்சம் ரூபாயில் ஒரு பேருந்து நிலையம், நவீன
பேருந்து நிலையமாக இருக்கும் என்று நம்ப முடியவில்லை.
சென்னையிலே நீண்ட நாட்களுக்கு முன்னாலே ஒரு பேருந்து
நிலையம், நவீனப் பேருந்து நிலையம் கட்டப்பட்டது. இப்
போது அது நவீனமாக இல்லை. ஆனால் ஒரு புதிய எடுத்துக்
காட்டாக நவீனப் பேருந்து நிலையமாக மதுரை பேருந்து நிலை
யம் அமைய வேண்டும். அதிலே மக்கள் தங்குகிற வசதிகள்
இருக்க வேண்டும். வருகிறவர்கள், போகிறவர்கள் பாதுகாப்
பாக இருக்க வேண்டும். இன்றைக்கு மதுரை பேருந்து நிலையத்
திற்கு வந்து போகிறவர்களுக்கு பாதுகாப்பு என்பது மிகப் பெரிய

அவசியம். அங்கு இருந்து போகிற பேருந்துகளுக்குக் கூட பாதுகாப்பு இல்லாத ஒரு நிலை இருக்கிறது. எனவே இதை எல்லாம் கணக்கில் எடுத்துக்கொண்டு ஒரு நவீனப் பேருந்து நிலையம் என்ற அளவுக்கு இந்தப் பேருந்து நிலையம் அமைப்பதற்கு ஆவன செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவர் அவர்களே, திருவள்ளுவர் பேருந்து நிலையம், பெரியார் பேருந்து நிலையம் இரண்டும் அருகருகே, இருந்தாலும் திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்திற்குச் சொந்தமானது திருவள்ளுவர் பேருந்து நிலையம்; மதுரை நகராட்சிக்குச் சொந்தமானது பெரியார் பேருந்து நிலையமாக இருக்கின்றது. இருந்தாலும் மாண்புமிகு உறுப்பினர்கள் இங்கே வலியுறுத்திச் சொல்லிய கருத்துகள் எல்லாம் பரிசீலனை செய்வதற்காக, சட்டமன்ற கூட்டத் தொடர் முடிந்ததற்குப் பிறகு நேரடியாக அந்த இடத்தைப் பார்வையிட்டு, எந்த வகையில் அந்தப் பேருந்து நிலையத்தைப் பொது மக்களுக்கு மேலும் சிறந்த வகையில் பயன்படுகின்ற முறையிலே அமைக்கலாம் என்பதைப் பற்றி ஆலோசித்து நல்ல முடிவாக எடுக்கலாம்.

சொரிமுத்து ஐயனார் கோவில்

*829—திரு. கே. ரவி அருணன் :

மாண்புமிகு இந்துசமய அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) முண்டந்துறை சரணாலயம் பகுதியில் இருக்கும் செக்போஸ்ட்டிற்கு மேற்புறம் அகஸ்தியர் அருவி சொரிமுத்து ஐயனார் கோவில் அமைந்துள்ளபடியால், அங்கு செல்லும் பொதுமக்களும் ரூபாய் இரண்டு கட்டணம் செலுத்தி போக வேண்டும் என்பது உண்மையா ?

(ஆ) ஆம் எனில், அதை மாற்ற அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(ஆ) நெல்லை மாவட்டம், பாபநாசம் அருகே, முண்டந்துறை சரணாலயம் பகுதியில் இருக்கும் சோதனைச் சாவடிக்கு மேல் பகுதியில் உள்ள அகஸ்தியர் அருவி, சொரிமுத்து ஐயனார் கோவில் ஆகிய இடங்களுக்குச் செல்ல நுழைவு கட்டணம் ரூ. 2 விதம் வசூலிக்கப்படுகிறது. ஆனால், ஆடி அமாவாசை, திருவிழா நேரத்தில் ஒவ்வொரு வருடமும் 11 நாட்களுக்கு கட்டணம் வசூல் ஏதும் இல்லை.



(ஆ) அகஸ்தியர் அருவியைப் பொறுத்தமட்டிலே இந்த சோதனைச் சாவடியை இன்னும் சற்று மேல் பகுதியிலே அமைத்து அருவிக்குச் செல்கின்றவர்களுக்குக் கட்டணம் வசூலிக்க வேண்டாம் என்பதைப் பரிசீலித்து வருகின்றோம். கூடிய விரைவிலே அதற்கான முடிவு மேற்கொள்ளப்படும். ஆனால், சொரிமுத்து ஐயனார் கோவிலுக்குச் செல்கின்றவர்களிடம் கட்டணம் வசூலிப்பதிலே எந்தவிதமான மாற்றமும் செய்வதற்கு பரிசீலனையில் இல்லை.

திரு. கே. ரவி அருணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காரையார், சேர்வலார், காணிமுடிப்பு ஆகிய பகுதிகளில் ஆயிரக்கணக்கான பொது மக்கள் வசித்து வருகிறார்கள். அவர்கள் செக்-போஸ்ட்டைக் கடந்து செல்ல வேண்டுமென்றால் அல்லது யாராவது அவர்களுடைய உறவினர்கள் அவர்களைப் பார்க்க வேண்டுமென்று வந்தால்கூட அங்கே செக்-போஸ்ட்டில் கட்டணம் வசூல் செய்யப்படுகின்றது. அந்தப் பகுதியிலுள்ள மக்கள் நீண்டகாலமாக செக்-போஸ்டில் வசூலிக்கின்ற கட்டணத்தை ரத்து செய்ய வேண்டுமென்று கோரி வருகிறார்கள். ஆகவே, அந்தக் கட்டணம் வசூலிப்பதை மட்டும் நிறுத்த அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

9-50 மணி

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : தலைவரவர்களே, இது சரணாலயம் என்று அறிவிக்கப்பட்ட பிறகு அந்த வனப் பாதுகாப்பு—வன விலங்குச் சட்டத்தின் கீழ் சில கட்டுப்பாடுகளைச் செய்ய வேண்டியிருக்கிறது. ஆகவே, இந்தச் சோதனைச் சாவடிக்கு மேல் செல்கின்றவர்களுக்கு இதிலே இந்த விதியைத் தளர்த்தி கட்டணம் வசூலிக்க வேண்டாமென்ற அந்தப் பரிசீலனை இல்லை என்பதை மீண்டும் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கே. ரவி அருணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முண்டந்துறை சரணாலயப் பகுதியில் காணி குடியிருப்பில் வசிக்கின்ற ஆதி வாசி மக்களுக்கு, ஆதிவாசி மக்கள் புனர் வாழ்வுத் திட்டத்தின் கீழ் இருபது ஏக்கர் நிலம் வழங்கப்பட்டு, அவர்கள் விவசாயம் செய்து வருகின்றனர். முண்டந்துறை சரணாலயப் பகுதியில் தேசியப் புலிப் பூங்கா அமைப்பதன் மூலம் அங்கே வசிக்கின்ற மக்களுக்கு எந்தவிதப் பாதிப்பும் ஏற்படாது என்று அமைச்சரவர்கள் உறுதியளித்தார்கள். ஆனால் உறுதி அளித்தும்கூட அங்கேயிருக்கின்ற ஆதிவாசிகளின் நிலங்களை......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது இந்த வினாத் தொடர்பானது அல்ல.

[1990 மார்ச் 30

பறவைகள் சரணாலயம்

*5077—திரு. சு. குருநாதன் :

மாண்புமிகு இந்துசமய அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம், பாளையங் கோட்டை ஒன்றியம், தளவாய்புரத்தை பறவைகள் சரணாலய மாக அறிவிக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. கே.பி. கந்தசாமி: அவைத் தலைவரவர்களே, நெல்லை கட்டபொம்மன் மாவட்டம், பாளையங்கோட்டை ஒன்றியம், தளவாய்புரத்தை பறவைகள் சரணாலயமாக அறிவிக்கும் திட்டம் இல்லை.

திரு. சு. குருநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவ ரவர்களே, தென் மாவட்டத்தைப் பொறுத்தவரை மூணடைப்பு பகுதியில்தான் வெளிநாட்டிலிருந்து பறவைகள் வந்து தங்குகின்ற சரணாலயம் அமைவதற்கு திட்டம் முன்பு இருந்து வந்தது. தற்போது மக்கள் நெருக்கத்தின் காரணமாகவும், வாகனப் போக்குவரத்தின் காரணமாகவும் அங்கே பறவைகள் செல்வது இல்லை. அந்தப் பறவைகளெல்லாம் தளவாய் புரத்திற்கு வருகின்ற காரணத்தால் பறவைகள் சரணாலயம் அமைக்கின்ற திட்டத்தை அரசு மீண்டும் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : தலைவரவர்களே, பறவைகள் இருந்தால் சரணாலயம் அமைக்க முடியும். நம்முடைய மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் திரு. குருநாதன் அவர்கள் ஏற்கனவே சொல்லிவிட்டார்கள். மூணடைப்பு பகுதிக்குப் பறவைகள் வருவது இல்லை என்று. இதற்கு முக்கியமான காரணம், பேருந்துகள் அதிகமாக அந்தப் பகுதி யிலே வந்தது என்பது ஒரு காரணமாக இருந்தாலும், முக்கிய மான காரணம், அங்கே இருக்கக்கூடிய குளத்திலே தண்ணீர் இல்லை. தண்ணீர் இருந்தால்தான் பறவைகள் வரும். ஆகவே, இந்த இடத்திற்கு, தளவாய்புரத்திற்கு அதிகமாகப் பறவைகள் வந்தால் அங்கே சரணாலயம் அமைக்க நாம் யோசிக்கலாம்.

திரு. சு. குருநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர் களே, தற்பொழுது பாளையங்கோட்டை ஒன்றியத்திலே இருக்கின்ற அந்தத் தளவாய்புரத்திற்கு உலகில் பல்வேறு நாடு களிலிருந்து பறவைகள் வருவதை நானும் அங்கே கண்டிருக் கின்றேன். அந்தக் கிராம மக்களும் தற்போது அந்தப் பறவை களுக்குப் புகலிடம் அளித்து வருகின்ற காரணத்தால் அதைப் பறவைகள் சரணாலயமாக அறிவிக்கின்ற திட்டத்தை இந்த அரசு எடுத்துக்கொள்ளுமா என அறிய விரும்புகிறேன்.



1990 மார்ச் 30]

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : தலைவரவர்களே, உறுப்பினரவர்களுடைய ஆர்வத்தைப் பாராட்டி, இங்கே மட்டுமல்ல, இன்னும் அருகில் இருக்கக்கூடிய முனைஞ்சிப்பட்டி பக்கத்திலேகூட இப்படிப்பட்ட பறவைகள் அதிகமாக வந்து கொண்டிருப்பதாக நான் அறிகிறேன். ஆகவே, இந்தப் பகுதி யிலே ஒரு பறவைகள் சரணாலயம் அமைக்க நாம் வழிமுறை களைக் காணலாம்.

துரைப்பாக்கம் இராமம் ஒக்கியத்தில் அணை கட்டுதல்.

*923—திரு. மீ. அ. வைத்தியலிங்கம்:

மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தாம்பரம் தொகுதி, துரைப்பாக்கம் கிராமத்தில் ஒக்கி யத்தில் ஒரு அணை கட்டி விவசாயத்தையும், குடிநீரையும் பாதுகாக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. துரைமுருகன் : தலைவரவர்களே, தாம் பரம் தொகுதி, துரைப்பாக்கம் கிராமத்தில் ஒக்கியத்தில் ஒரு அணைகட்டி விவசாயத்தையும் குடிநீரையும் பாதுகாக்க அரசு ஒரு திட்டத்தை 26.60 இலட்சத்தில் தயாரித்திருக்கிறது. அந்த அறிக்கை ஆய்வில் இருக்கிறது.

திரு. மீ. அ. வைத்தியலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஒக்கியத்திற்கு வருகிற தண்ணீர் தாம்பரத்திலிருந்து சற்றொப்ப 15 கிலோ மீட்டர் தூரத் திலே வருகின்ற நீர் அனைத்தும் சேர்ந்து செல்கிற பகுதி. இங்கே வந்து தேங்குகிற தண்ணீர் கடல் நீரோடு கலந்து விடுகிற காரணத்தால் 3, 4 கிராமங்களில் குடிநீரும், விவசாய நீரும் உவர் நீராக மாறி விடுகின்ற காரணத்தால் அரசு இதை விரைந்து செயல்படுத்துமா என்று தெரிந்துகொள்ள விரும்பு கிறேன்.

9-55 மணி

மாண்புமிகு திரு. துரைமுருகன் : தலைவரவர்களே, அதைத் தான் அரசு இந்த அணையைக் கட்டினால் விவசாயத்திற்குப் பயன்படுமா, அதற்கு மண் வளம் தக்கதாக இருக்கிறதா என்று விவசாய இலாக்காவிடத்திலே ஒபினியன் கேட்டிருக் கிறது. எனவே, விவசாய இலாக்காவிடமிருந்தும் நமக்கு அறிக்கை வர வேண்டும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப் போல அப்படி மண்வளம் தக்கதாக இருக்கிறது என்று சொன்னால் சுமார் 306 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி அளிக்கக் கூடிய வகையில் இந்தத் திட்டம் அமையும்.

[1990 மார்ச் 30

திரு. மீ. அ. வைத்தியலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1975 ஆம் ஆண்டு நம்முடைய தலைவர் கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருந்த நேரத்தில் இதற்கு திட்டம் தீட்டப்பட்டு, நிர்வாக ஒப்புதலும் பெறப்பட்டு, பொதுப் பணித் துறைக்குச் சென்று, ஒப்பந்தம் விடுகிற நேரத்தில் ஆட்சி கலைக்கப்பட்ட காரணத்தால் இது தடுத்து நிறுத்தப்பட்டது. எனவே, இதை மீண்டும் அதிகாரிகளை வைத்து அந்த ஒப்பந்தத்தை சீர் செய்வதற்கு, இது போன்று தாமதம் ஏற்படாமல் செய்வதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: : தலைவர் அவர்களே, கலைஞர் அவர்கள் காலத்தில் தீட்டிய எத்தனையோ திட்டங்களை இடையில் விட்டு விட்டார்கள். அப்படி விட்டு விட்ட திட்டங்களை மீண்டும் கண்டெடுத்து, நடைமுறைப்படுத்துவதில் இந்த அரசு முனைப்பாக இருக்கிறது.

### சிறுபத்தூர் ஏரிக்குத் தண்ணீர்

*3318—திரு. எம். தங்கவேல் :

மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

முசிறி தொகுதி, மண்ணச்சநல்லூர் ஒன்றியம் அருகில் உள்ள சிறுபத்தூர் ஏரிக்கு வாத்தலை முக்கொம்பு பகுதியிலிருந்து தண்ணீர் கொண்டுவரும் திட்டம் எந்நிலையில் உள்ளது ?

மாண்புமிகு திரு. துரைமுருகன் : தலைவரவர்களே,

முசிறி தொகுதி, மண்ணச்சநல்லூர் ஒன்றியம் அருகில் உள்ள சிறுபத்தூர் ஏரிக்கு வாத்தலை முக்கொம்பு பகுதியிலிருந்து தண்ணீர் கொண்டு வரும் திட்டம் எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

### தொழிற்பேட்டைக்குச் சொந்தமான நிலங்கள்

*4183—திரு. க. வெ. வீ. இராசமாணிக்கம் :

மாண்புமிகு சமூக நலம் மற்றும் ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) மதுரை புதூரில் உள்ள தொழிற் பேட்டைக்குச் சொந்தமான நிலங்கள் தனியார்களுக்கு விற்கப்பட்டதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது விற்கப்பட்டது ?

(இ) எந்த அடிப்படையில் விற்கப்பட்டது ?



1990 மார்ச் 30]

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் : தலைவர் அவர்களே, மதுரையில் உள்ள கே. புதூர் தொழிற்பேட்டையில் மூன்று சிறு தொழில் முனைவோர்களுக்கு காலி மனைகள் வழங்கப்பட்டிருக்கின்றன. ஏற்கனவே அங்கே தொழிற்கூடங்களில் சிறு தொழில் செய்பவர்களுக்குத் தான் அந்த மனைக்கு அருகில் இருக்கிற காலி இடங்கள் அவர்களின் விருப்பத்தின் பேரில் ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. தனியார் யாருக்கும் அந்த இடத்தில் இட ஒதுக்கீடு செய்யப்படவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண்கள் 3121, 3432, மற்றும் 4669 மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சரின் வேண்டுகோளுக்கிணங்க ஒத்திவைக்கப் பெறுகின்றன.

### திருச்சி நகரில் பாதாள சாக்கடை

*வினா 487—திரு. அன்பில் பொய்யாமொழி :

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) திருச்சி நகரில் பாதாள சாக்கடை அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : தலைவர் அவர்களே,

(அ) திட்டத்திற்கான செயலாக்கப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

(ஆ) திருச்சி நகருக்கான பாதாள சாக்கடைத் திட்டத்திற்கு அரசு ரூ. 285.06 இலட்சங்களுக்கு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. தற்போது இத்திட்டத்தின் திருத்திய மதிப்பீடு ரூ. 677.50 இலட்சங்களுக்கு தயாரிக்கப்பட்டு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் தொழில் நுட்பக் குழு, வாரியக் குழுவின் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ், நீரேற்றிப் பொருத்தும் பணிகள் தவிர மற்ற பணிகள் முடிவடையும் தருவாயில் உள்ளன.

[1990 மார்ச் 30

திரு. அன்பில் பொய்யாமொழி : தலைவர் அவர்களே, 1972 ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட அந்தத் திட்டம்— பாதாள சாக்கடைத் திட்டம் இந்த ஆண்டு திருச்சி நகரில் செயல் படுத்தப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : தலைவர் அவர்களே, அதற்கான பணிகள் இந்த ஆண்டு வேகப்படுத்தப்பட்டு நடைபெற்று வருகின்றன. அதற்காக கொடுக்கப்பட வேண்டிய 2,408 வீட்டு இணைப்பு கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. மேலும் 22,494 இணைப்பு கள் கொடுக்கப்பட இருக்கின்றன. எவ்வளவு விரைவில் இந்தத் திட்டத்தை நிறைவேற்ற முடியுமோ அந்த அளவிற்கு விரை வில் அரசு அதை நிறைவேற்றும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர் : மாண்புமிகு சபா நாயகர் அவர்களே, இந்த பாதாள சாக்கடைத் திட்டம் ஆரம்பித்து பல வருடங்கள் ஆகிவிட்டன. நான் பால்யமாக இருந்தபோது ஆரம்பித்த திட்டம் இது. இன்றைக்கு நான் முதியவனான பிறகும் இந்தத் திட்டம் நடந்து கொண்டிருக் கிறது. நடக்காமல் இல்லை....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்தத் திட்டத்திற்கு மணிவிழாக் கொண்டாட வாய்ப்பு இருக்கிறதா ! (சிரிப்பு)

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர் : தலைவர் அவர் களே, நீங்கள் சொன்னால் அங்கே அமைச்சர்களை கூப்பிட்டு ஒரு விழா நடத்தி விடுகிறேன். இந்தத் திட்டத்தால் பல பகுதி கள் பலன் அடைந்திருந்தாலும், அதனால் பலன் இல்லாமல் அவதிப்படுகிற கிராமங்கள் நிறைய இருக்கின்றன. இந்தத் திட்டத்தில் சூவரேஜ் பார்ம் ஒன்று ஆரம்பித்து அது செயலற்று இருக்கிறது. பெரிய குளம் ஒன்று கோரையாற்றுப் பக்கத்தில் அமைத்து அதில் சாக்கடை தண்ணீரை பம்ப் செய்து விடுகிறார் கள். ஆயிரக்கணக்கான ஜனங்கள் அதனால் அவதிப்படு கிறார்கள். அந்தக் குளம் சரியாக அமைக்கப்படாததால் அது உடைந்து விடுகிறது. இதன்காரணமாக கோரையாற்றில் வாட்டர் பொலூஷன் ஏற்படுகிறது. போன மாதத்தில் இதனால் பெரிய தகராறு ஏற்பட்டு அங்கேயிருக்கிற எம்.பி.யும் நானும் போய் சமரசம் செய்தோம். எனவே, இதைத் தவிர்த்து இந்தத் திட்டத்தை சரியான முறையில் நிறைவேற்றுவதற்கு அரசு ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : தலைவர் அவர்களே, நீண்டகாலமாக இந்தத் திட்டம் கிடப்பில் கிடப்பதாகக் குறிப்பிட்டார்கள். இந்த அரசு பொறுப்பேற்ற பிறகுதான இந்தப் பணிகளை வேகப்



1990 மார்ச் 30]

படுத்தி இருக்கிறார்கள். இப்போது பகுதி 6 மற்றும் 2 (ஏ) ஆகிய இடங்களில் மட்டும் இந்தப் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. மற்ற பகுதிகளில் எல்லாம் இந்தப் பணி கள் முடிந்து விட்டன. இந்த ஆண்டிற்குள்ளாக இந்தத் திட்டம் முடியும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

### காட்டுமன்னார்கோயில் அரசு மருத்துவமனை

*6521—திரு. ஏ. தங்கராஜு :

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் இக் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) காட்டுமன்னார்கோயில் அரசு மருத்துவமனையில் படுக்கைகளின் எண்ணிக்கையை அதிகரிக்க அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) இல்லை.

10-00 மணி

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் அனுமதி யுடன் வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

திரு. ஏ. தங்கராஜு : மாண்புமிகு அவைத் தலைவர் அவர் களே, காட்டுமன்னார்கோயில் தாலுக்கா நகரமாக இருப்ப தால், அங்குள்ள அரசு மருத்துவமனையில் உள்ள படுக்கை வசதிகளை அதிகப்படுத்தவும் அந்த இடத்தை கொஞ்சம் விஸ் தரிப்பதற்கும் இந்த அரசு ஆவன செய்து தருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப் போது காட்டுமன்னார்கோயில் மருத்துவமனை 8 படுக்கை வசதிகளோடு கூடிய மருத்துவமனையாக அது இயங்கி வரு கிறது. அங்கே அறுவைச் சிகிச்சை அரங்கம், பிணவறை போன்ற



D
143796
V211,31'N90
N90.24.2

வசதிகளும் செய்து கொடுக்கப்பட்டு இருக்கின்றன. அரசினுடைய நிதிநிலையைக் குறித்து அந்த படுக்கைகளினுடைய வசதிகளை அதிகரிப்பது குறித்து அரசு பரிசீலிக்கும்.

காரையூரில் கால்நடை மருத்துவமனை

*988—திரு. ஆலவயல் சுப்பையா :

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

திருமயம் தொகுதி, காரையூரில் கால்நடை மருத்துவமனை துவக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு டாக்டர் க. சந்திரசேகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தற்போது வாய்ப்பில்லை.

திரு. ஆலவயல் சுப்பையா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொன்னமராவதியை உள்ளடக்கிய அந்தப் பகுதி 43 ஊராட்சிகளைக் கொண்டது. பொன்னமராவதி ஊராட்சி ஒன்றியத்தில் ஒரே ஒரு கால்நடை மருந்தகம்தான் இருக்கிறது. ஆகவே இன்னொரு கால்நடை மருந்தகத்தை அமைக்க அரசு விரைவில் ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. சந்திரசேகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதிய கால்நடை மருந்தகம் அமைப்பதற்கு உரிய தீர்மானத்தினை நிறைவேற்றி அரசுக்கு அனுப்பி வைத்தால், அதுகுறித்து தக்க நேரத்தில் ஆய்வு செய்து. அரசு முடிவு எடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேற்கு ஜெர்மனியிலிருந்து உயர்தர மாடுகள் வாங்குதல்

*6601—திரு. எஸ். டி. உகம்சந்த் :

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) மேற்கு ஜெர்மனியிலிருந்து தமிழக அரசு உயர்தர மாடுகள் வாங்கி உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அவைகள் எங்கு வழங்கப்பட்டு உள்ளன?



மாண்புமிகு டாக்டர் க. சந்திரசேகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) ஐரோப்பிய பொருளாதார நாடுகளிலிருந்து உபரியாக் உள்ள கால்நடைகளை இறக்குமதி செய்யும் பொருட்டு, முன்னோடித் திட்டத்தின் கீழ், தேசிய பால்வள வாரியத்தின் மூலமாக 250 'ஹோல்ஸ்டீன் ஃப்ரீசியன்' கிடேரிகளும், 10 ஹோல்ஸ்டீன் ஃப்ரீசியன் காளைகளும் மேற்கு ஜெர்மனியிலிருந்து 1987 ஆம் ஆண்டில் தமிழகத்திற்கு இறக்குமதி செய்யப்பட்டது. நீலகிரி மாவட்டத்தின் தட்ப வெப்ப நிலை மற்றும் வல்லுநர்களின் கருத்திற்கிணங்க 250 கிடேரிகள், நீலகிரி மாவட்டத்திலுள்ள கூட்டுறவு பால் உற்பத்தியாளர் சங்கத்தைச் சேர்ந்த விவசாயிகளுக்கு வழங்கப்பட்டன. பத்து காளைகளை உதகமண்டலத்தில் உள்ள தமிழ்நாடு பால் உற்பத்தியாளர் கூட்டுறவு இணையத்தைச் சேர்ந்த கருவூஜெர்ஸி பொலிகாளை நிலையத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டன.

திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது மானியமாக பெறப்பட்டு இருக்கிற மேற்கு ஜெர்மனியைச் சேர்ந்த அந்தக் காளைகள் இன்றைக்கு பல்வேறு பகுதிகளுக்கு அனுப்பப்பட்டு இருந்தாலும், அவைகளை சரியான முறையிலே நம்முடைய தட்பவெப்ப சூழ்நிலைகளுக்கு ஏற்ற வகையிலே பராமரிக்க முடியவில்லை என்ற குறைபாடு இருக்கிறது. அதற்காக அரசாங்கம் ஏதாவது திட்டத்தை வகுத்திருக்கிறதா? மேலும் பால் உற்பத்தியை அதிகரிக்க வேண்டுமென்ற முறையிலே அதற்காக அரசு ஏதாவது சிறப்புத் திட்டத்தை உருவாக்கியிருக்கிறதா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. சந்திரசேகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அங்கிருந்து இறக்குமதி செய்யப்பட்ட காளைகளை எல்லாம் சரியான முறையிலே பராமரிக்க முடியவில்லை, இங்குள்ள சீதோஷ்ண நிலைக்கு ஒத்து வரவில்லை என்று தெரிவித்தார்கள். ஆனால் உதகமண்டலத்திலுள்ள கருவூ ஜெர்ஸி பொலி காளை நிலையத்தில் (Nucleus Jersey and Holstein Stud Farm) அந்தக் காளைகள் எல்லாம் உரைவிந்து தயாரிப்பதற்காகப் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. மேலும் விவசாயிகளுக்கு 250 கிடேரிக் கன்றுகள் வழங்கப்பட்டதில் 188 ஹோல்ஸ் டீன் ஃப்ரீசியன் பசுக்களும், 125 கன்றுகளும் 43 கிடேரிகளும் இப்போது இருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அந்தக் கால்நடைகள் எல்லாம் சரியாக பராமரிக்கப்படவில்லை என்பது உண்மைக்கு மாறானது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[1990 மார்ச் 30

திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த கலப்பு கால்நடை உற்பத்தியின் காரணமாக பால் உற்பத்தியானது எந்த அளவிற்கு அதிகமாயிருக்கிறது. அதோடு மட்டுமல்லாமல், ஐரோப்பிய நாடுகளில் இதைப் போன்று காளைமாடுகள் அதிகமாக இருக்கின்ற காரணத்தால் பசுமாடுகளை அவர்கள் வெட்டுகிறார்கள். எனவே அவைகளை நாம் அதிகமாகப் பெறுவதற்கு அரசாங்கம் ஏதாவது கடிதப் போக்குவரத்து செய்திருக்கிறதா என்பதை அறிய விரும்பு கிறேன்.

10-05 மணி

மாண்புமிகு டாக்டர் க. சந்திரசேகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பால் உற்பத்தியைப் பற்றி எவ்வளவு பால் உற்பத்தி அடைந்திருக்கிறோம் என்ற கேள்வியை எழுப்பினார்கள். அதற்கு தனியாக வினா எழுப்பவும். அத்தோடு இதுபோன்ற திட்டத்தின் மூலமாக மேலும் கால்நடைகளை இறக்குமதி செய்யும் திட்டம் அரசிடம் உள்ளதா என்ற கேள்வி யையும் எழுப்பியிருக்கிறார்கள். இதுகுறித்து அரசாங்கம் உரிய நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டிருக்கிறது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடம்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 2. தகவல் கோரல்.

### (அ) பெரியார் மாவட்டத்தில் அரிசி ஆலைகள் மூடப்பட்டுள்ளது குறித்து.

திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, பெரியார் மாவட்டத்தில் அரிசி உரிமையாளர்கள் சங்கம், அரிசி வியாபாரிகள் சங்கம், கூலி அரிசி ஆலை உரிமையாளர் சங்கம் இவ்வாண்டு போதிய அளவிற்கு லெவி கொடுத்தும், அதிகாரிகள் சட்டத்திற்கு புறம்பாக லெவி வசூல் செய்வதாலும், வாகனங்களை நிறுத்தித் தொல்லை தருவ தாலும், வியாபாரிகளுக்கு பெரும் நஷ்டம் ஏற்படுகிறது என்று கருதி, சந்தைகளுக்கு வருகின்ற நெல்லைக் கூட 21ஆம் தேதியி லிருந்து வராமல் செய்த காரணத்தால் இலட்சக்கணக்கான மக்கள் அரிசி கிடைக்காமல் அவதிப்படுகின்ற ஒரு நிலை ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது. இதைக் கருத்திலே கொண்டு, உடனடியாக இந்த அரசு அவர்களோடு பேச்சு வார்த்தை நடத்தி, ஆவன செய்வதோடு, 21ஆம் தேதியிலிருந்து தொடர்ந்து அவர்கள்



ஆலைகளை மூடிவைத்துக் கொண்டிருக்கிறார்கள். அரிசி அங்கே சந்தைகளுக்குக் கிடைப்பது இல்லை. ஆகவே, உடனடியாக நடவடிக்கை எடுப்பதற்கு இந்த அரசு முன்வருமா என்பதை தெரிவிக்க வேண்டுகிறேன்.

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு உறுப் பினர் செங்கோட்டையன் அவர்கள் எழுப்பிய பிரச்சினை குறித்து நேற்றையதினம் சட்டப் பேரவை உறுப்பினர்களான திரு. கணேச மூர்த்தி, திரு. கோவை இராமநாதன் ஆகியவர்கள் இது குறித்து பேசியிருக்கிறார்கள். அங்கேயுள்ள மொத்த வியாபாரிகளுக்கு சம்பா சீசனுக்காக 15,000 டன் லெவி நிர்ணயிக்கப்பட்டிருக் கிறது. 15—3—1990 வரையிலும் அவர்கள் கொடுத்திருக்கின்ற லெவியின் அளவு 4,100 டன் ஆகும். எனவே எஞ்சியிருக்கின்ற சம்பா சீசன் முடிய இருக்கின்ற காரணத்தாலே அதிகாரிகள் விரைந்து லெவியை வசூலிக்க வேண்டுமென்கின்ற முயற்சியில் ஈடுபட்டிருக்கிறார்கள். அதற்கு எதிராக ஆலைத் தொழிலதி பர்கள் இந்த வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டிருக்கிறார்கள். இது தொடர்பாக ஆலை தொழிலதிபர்களுக்கு தகவல் கொடுத்து நிலைமை எவ்வாறு இருந்தாலும் கூட, நேரடியாக இங்கே வந்தால் பேசி முடித்து வைக்கிறேன் என்ற தகவல் அனுப்பி அவர்களும் வர இருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து அவர்கள் ஆலைகளை மூடிவிட்ட காரணத்தாலே சந்தைக்கு அரிசி வரவில்லை, விலைவாசி ஏறியிருக்கிறது என்ற கூற்று தவறானதாகும். விலைவாசியைக் கட்டுப்படுத்துகின்ற வகையில் பொது விநியோகத் திட்டத்தின் மூலமாக அரிசி நிரம்ப ஏற்கெனவே வைக்கப்பட்டிருக்கிறது. அத்தோடு 'ஓப்பன் மார்க்கெட்'—வெளிச் சந்தை விலைக்கு கொடுப்ப தற்கும் எல்லா கூட்டுறவுச் சங்கங்களின் மூலமாகவும் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் ஏற்பாடு செய்திருக்கிறார்கள். அங்கே பொது மக்களுக்கு வழக்கம்போல் அரிசி உரிய விலையில், வெளிச் சந்தை விலையில் கிடைப்பதற்கான வாய்ப்புகள் ஏற்படுத்தப் பட்டிருக்கின்றன. இருந்தாலும் விரைந்து பேசி சுமூகமாக இந்தப் பிரச்சினையை தீர்த்துக் கொள்வதற்கு அரசு விரும்புகிறது. இது பொது விநியோகத் திட்டம் என்கின்ற காரணத்தாலே மாண்புமிகு எதிர்க்கட்சி உறுப்பினர்களும் இதற்கு ஒத்துழைப்பு வழங்கவேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன்.

### (ஆ) திருச்சி வட்டாரப் பொறியியல் கல்லூரியில் பகுதி நேரப் பொறியியல் பட்டப்படிப்பு நிறுத்தப்படுவது குறித்து.

திருமதி பாப்பா உமாநாத்; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருச்சி ரீஜினல் இன்சினியரிங் கல்லூரியில் இதுவரை நடத்தப்பட்டு வந்த பகுதி நேர பி.இ. பட்டப்படிப்பை நிறுத்து

வது என்று அந்தக் கல்லூரித் துறைத் தலைவர்கள் முடிவு செயதுள்ளனர். அதையொட்டி இந்த ஆண்டு மாணவர்கள் தேர்வு செய்வதை கல்லூரி முதல்வரும் தன்னிச்சையாக நிறுத்தியுள்ளார். இந்தப் பகுதி நேர பட்டப்படிப்பு என்பது மிகவும் அவசியமாக, தேவையானதாக இருக்கிறது. படிக்கமுடியாதவர்கள் வேலை செய்துகொண்டே பட்டப்படிப்பை தொடர்வதற்காக இதைப் பயன்படுத்துகிறார்கள். பட்டப் படிப்பு நிறுத்தப்பட்டதை ஆட்சேபித்து இந்த வட்டாரம் முழுவதும் பல்வேறு மக்கள் பகுதியினர் பாய்லர் ஆலைத் தொழிலாளிகள் அமைப்புகள், அரசியல் கட்சிகள் கடும் ஆட்சேபம் தெரிவித்து பல இயக்கங்கங்கள் நடத்திக் கொண்டு இருக்கிறார்கள். எனவே எக்காரணம் கொண்டும் பகுதி நேர பட்டப் படிப்பை நிறுத்தக் கூடாது. இதற்கு கல்லூரி போர்டு அனுமதியை, சேர்மன் என்ற முறையில் நம்முடைய மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் அளிக்காமல் அந்த பகுதிநேர பி.இ. பட்டப்படிப்பை நடத்துவதற்கு ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

10-10 மணி

*மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருச்சியிலே உள்ள வட்டாரப் பொறியியல் கல்லூரி ஒரு தனி அமைப்பாக இயங்கி வருகிறது. சில சிறப்புக் கூறுகள் அந்தக் கல்லூரியிலே அமையவேண்டும் என்னும் நோக்குடன் மத்திய அரசினுடைய சார்பிலே உள்ள பிரதிநிதிகளும் மாநில அரசின் சார்பிலே உள்ளவர்களுமாக அமைந்த ஆட்சிக்குழு மூலம் நீண்ட காலமாக அப்படி ஒரு நோக்கத்தோடு இயங்கி வருவது. எனினும் அவர்களுக்குச் சில இடையூறுகள் இருக்கின்றன, இந்த பார்ட்-டைம் வகுப்பு நடத்துவதில். இருந்தாலும் அடுத்த பத்து நாட்களில் நடைபெறக் கூடிய அந்த வட்டாரப் பொறியியல் கல்லூரியினுடைய ஆட்சிக்குழு இந்தப் பிரச்சினை குறித்து விரிவாக ஆலோசித்து தகுந்த முடிவு எடுக்கும் என்று நான் எதிர்பார்க்கிறேன்.

(இ) நாகப்பட்டிணத்திலிருந்து படகுகளில் மீன்பிடிக்கச் சென்ற சிலர் இலங்கைக்குக் கொண்டு போகப்பட்டுள்ளதால் அவர்களை மீட்பதற்கான நடவடிக்கைகள் குறித்து.

திரு. கோ. வீரையன் ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றைய தினம் நாகையின் அருகில் உள்ள அக்கரப்பேட்டை, கீத்தாங்குப்பம், கல்லலாறு பகுதியைச் சார்ந்த மீனவர்கள் மீன் பிடிக்கச் சென்றபோது 65 மீனவர்கள் கடத்திச் செல்லப்பட்ட விவரங்களை இங்கே எழுப்பியபோது முதலமைச்சர் அவர்கள் துரிதமாக அதிலே கவனித்து கண்டு பிடிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று அறிவித்தார்கள். அந்த முறையிலே அரசு துறையிலே துரிதமாக நடவடிக்கை எடுக்கப்பட்டு 58 படகுகள் கிடைத்திருப்பதாகவும் அதிலே 311 பேர்கள் இருப்பதாகவும்



அவர்கள் இலங்கைப் பகுதியிலே பிடித்து வைக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதாகவும் அரசு செய்திக் குறிப்பு மூலமாக நேற்று இரவே அறிவித்திருக்கிறது. அதற்கு என்னுடைய நன்றியை இந்த நேரத்திலே அந்த மீனவ மக்களின் சார்பிலே தெரிவித்துக் கொள்வதோடு அந்த 311 பேர்களும் பாதுகாப்பாக இருக்கிறார்களா? அவர்கள் இங்கே கொண்டு வரப்படுவார்களா? அதற்கு என்ன முயற்சிகளை முதல்வர் அவர்கள் அல்லது இந்த அரசு எடுத்துக்கொண்டு இருக்கிறது' அதற்கு அவர்கள் மேற்கொண்டு எடுத்துக்கொண்டிருக்கக் கூடிய முயற்சிகள், எப்போது அவர்கள் இங்கே திருப்பிக் கொண்டு வரப்படுவார்கள் என்ற செய்தியையும் உங்கள் மூலமாக முதல்வர் அவர்களிடமிருந்து நான் அறியவிரும்புகிறேன்.

*மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி ; தலைவர் அவர்களே, நாகைக்குப் பக்கத்திலே மீன் பிடிப்பதற்காக சென்ற மீனவர்களுடைய 65 படகுகள் கடத்தப்பட்டதாகவும் அதிலே 7, 8 படகுகள் திரும்பி வந்ததாகவும், திரும்பி வந்தவர்கள் தெரிவித்த தகவல்கள் எது எது என்பது குறித்தும் நேற்றைய தினம் நம்முடைய நண்பர் வீரையன் அவர்கள் எழுப்பிய பிரச்சினைக்கு நான் பதில் அளித்ததோடு உடனடியாக இலங்கையில் உள்ள இந்திய தூதரோடு நம்முடைய அரசின் சார்பில் தலைமைச் செயலாளர் தொடர்பு கொண்டு பேசினார். அவர் எடுத்துள்ள நடவடிக்கைகளின் காரணமாக நேற்று மாலையிலே வந்த செய்தியின்படி கடத்தப்பட்ட படகுகள் இலங்கைப் பகுதியிலே உள்ள கடல் ஓரத்திலே இருப்பதாகவும், ஏறத்தாழ 300-க்கும் மேற்பட்ட மீனவர்கள் எந்தவிதமான பாதகமும் இன்றி அவர்கள் சுகமாக இருப்பதாகவும் செய்தி கிடைத்தது.

இன்னும் அவர்கள் திருப்பி அனுப்பப்படவில்லை என்ற காரணத்தால் இன்று காலையிலே நானும் கொழும்புடன் தொடர்பு கொண்டேன். இங்கே வருவதற்குத் தாமதம் ஆன காரணமே கூட அதுதான். அங்கே தொடர்பு கொண்டு பேசியதில் உடனடியாக அவர்களை விடுவிப்பதற்கான முயற்சிகளில் சிங்கள அரசு ஈடுபட்டிருப்பதாக எனக்குத் தகவல் தரப்பட்டது. இன்று அல்லது நாளை அவர்கள் திரும்பி வருவதற்கான முயற்சிகள் மேற்கொண்டு இருப்பதாகவும் நிச்சயம் திருப்பி அனுப்பப்படுவார்கள் என்றும் உறுதி வழங்கப்பட்டிருக்கிறது. இது குறித்து நான் டெல்லிக்கும் தகவல் அனுப்பியிருக்கிறேன், அரசின் சார்பில். இந்தப் பிரச்சினை ஏற்படுவதற்குக் காரணம் மீன் பிடிப்பதற்கு ஒதுக்கப்பட்ட எல்லைப் பகுதியை நம்முடைய மீனவர்கள் கடந்துவிட்டது தான் என்று சொல்லப்படுகிறது. அது எந்த அளவு உண்மை என்று இன்னும் தெளிவாக்கப்படவில்லை. ஏற்கெனவே ஆந்திரப் பகுதியிலே கூட எல்லைப் பகுதியைக் கடந்த நமது மீனவர்கள் ஆந்திரத்திலே உள்ள மீனவர்களால் பிடித்து வைக்கப்பட்டு, இந்த அரசு முயற்சித்து அவர்கள் மீட்கப்பட்டிருக்கிறார்கள். அது போன்ற நிலையா அல்லது வேறு பிரச்சினையா என்கிற விவரங்கள்

இப்போது இல்லை என்றாலும் கூட அவர்கள் பத்திரமாக
திருப்பி அனுப்பப்படுவார்கள் என்ற உறுதி மொழி கிடைத்
திருக்கிற காரணத்தால் ஆறுதலாக இருக்கலாம் என்ற
நம்பிக்கையைத் தெரிவிக்கிறேன்.

**10-15 மணி**

**திரு. குமரி அனந்தன்** ; பாயின்ட் ஆப் கிளாரிபிகேஷன்;
மாண்புமிகு முதல்வர் அவர்கள் விரைந்து நடவடிக்கை எடுத்த
தற்குப் பாராட்டு, நடத்தப்பட்டது என்று சொன்னார்களே
யாரால் கடத்தப்பட்டது' இலங்கை இராணுவத்தாலா அல்லது
வேறு யாரால் கடத்தப்பட்டது என்ற தகவல்-புலிகளால் கடத்
தப்பட்டதா அல்லது வேறு போராளிக் குழுக்களால் கடத்தப்
பட்டதா என்ற தகவலை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி** ; என்னுடைய
விளக்கத்திலேயே அதைப்பற்றிச் சொல்லியிருக்கிறேன், அந்த
விவரங்கள் கிடைக்கவில்லையென்று. ஒரு வரையறைக்குட்பட்ட
இடத்திலேயிருந்து— இதுவரையிலே மீன் பிடிக்கலாம் என்று
எல்லைகள் வகுக்கப்பட்டிருக்கின்றன. ஆனால் எல்லைகள் தாண்
டப்படுகிற நேரத்தில் இதுபோன்ற பிரச்சினைகள்— இலங்கையில்
மாத்திரமல்ல; நம்முடைய இந்தியத் திருநாட்டிலேயே ஆந்திரப்
பகுதியில் பல நேரங்களிலே ஏற்பட்டிருக்கிறது. தமிழ்நாட்டு
மீனவர்கள் எல்லையைக் கடந்து ஆந்திரப் பகுதிக்குச் சென்று
விடுகிற நேரத்தில் ஆந்திராவிலே உள்ள மீனவர்கள் நம்முடைய
மீனவர்களைப் பிடித்து வைத்து அவர்களை விடுவிக்க நாம் எடுத்
துக்கொண்ட முயற்சிகள் மிக நன்றாக மாண்புமிகு உறுப்பினர்
களுக்குத் தெரியும். எனவே, அரசு கடத்தியதா அல்லது அர
சாங்க இராணுவ வீரர்கள் கடத்தினார்களா அல்லது போராளிகள்
கடத்தினார்களா அல்லது அங்குள்ள மீனவர்கள் தங்களுக்கு எதி
ராக நடத்தப்பட்ட சம்பவங்களுக்காக அவர்கள் மேற்கொண்ட
முயற்சியா என்கின்ற விவரங்கள் இன்னும் தெரியவில்லை. எப்படி
இருந்தாலும் கூட, நம்முடைய மீனவர்களைக் காப்பாற்றுகின்ற
முயற்சியிலே அரசு விரைந்து ஈடுபட்டிருக்கிறது. அவர்களை
உடனடியாக இங்கே அனுப்பி வைக்கின்ற முயற்சியிலே சிங்கள
அரசும் ஈடுபட்டு இருக்கின்றது. இதற்கான முயற்சியிலே
இலங்கையிலே இருக்கிற இந்தியத் தூதுவர் மிக முனைப்பாக
முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறார்.

**(ஈ) இலங்கையிலிருந்து திரும்பிய இந்திய இராணுவத்தினருக்கு அளிக்கப்
பெற்ற வரவேற்பு நிகழ்ச்சியில் முதலமைச்சர் கலந்து கொள்ளாதது
குறித்து.**

**திரு. சா. பீட்டர் ஆல்போன்ஸ்** ; மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, கடந்த வாரத்தில் பணி முடித்து, தாயகம்
திரும்பிய, இலங்கைப் போராளிகளிடமிருந்து மீண்டு வந்த
இந்திய இராணுவத்தினருக்கு தமிழகத்திலே அளிக்கப்பட்ட
வரவேற்பிலே நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும்,





அமைச்சர் பெருமக்களிலே ஒருவருமே கூட கலந்துகொள்ளாத
ஒரு சூழ்நிலை குறித்து ஏற்கெனவே நான் இங்கே ஒரு ஒத்தி
வைப்புத் தீர்மானம் கொடுத்திருந்தேன். விதி எண். 78-இல்
ஒரு விவாதம் கேட்டிருந்தேன். இது தொடர்பாக நமது அவை
யிலே பேசிய எங்களுடைய கட்சியினுடைய துணைத் தலைவர்
கேட்டபோது கூட, ஒரு மணி நேரம் இதற்கான விவாதம்
கேட்டார்கள். ஆனால் தாங்கள் அருள்கூர்ந்து இப்படி ஒரு
மென்ஷனுக்காவது சற்று நேரம் கொடுத்திருக்கிறீர்கள்.
ஆகவே, எனக்கு வழக்கமான நேரத்தை விட ஓரிரு மணித்துளிகள்
அதிகமாகத் தரவேண்டும் என்று உங்களிடம் முதலிலேயே
கேட்டுக்கொண்டு, ஏனென்றால் இதிலே எழுப்பப்பட்டு இருக்
கின்ற பிரச்சினைகள், நேற்று பாராளுமன்றத்திலே — 20 நிமிடங்
கள் பாராளுமன்றத்தையே ஒத்தி வைக்கக்கூடிய அளவிற்கு,
தமிழகத்திலே மட்டுமல்ல, அகில இந்திய அளவிலே ஒரு அரசியல்
முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சினையாக இது உருவெடுத்
திருக்கிறது.

ஒரு வன விலங்கு வார விழா என்றால்கூட தவறாமல் வாழ்த்
துச் செய்தி அனுப்புகின்ற நமது முதல்வர் அவர்கள்— இருபதாம்
நூற்றாண்டிலே தமிழ் சரித்திரத்தினுடைய பொன் எழுத்துக்க
ளால் பொறிக்கப்பட வேண்டிய ஒரு நிகழ்ச்சிக்கு, ஒரு வரலாற்று
முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்ச்சிக்கு அவர்கள் செல்லாதது—
நாங்கள் எல்லோரும் நினைத்திருந்தோம். முதல்வருக்கு நிறைய
வேலைப்பளு இருந்திருக்கலாம் அல்லது சில அசௌகரியங்கள்
இருந்திருக்கலாம். உடல்நலக் குறைவாக இருந்திருக்குமோ
என்று கூட பயந்து கொண்டிருந்தோம். ஆனால் முதல்வர்
அவர்கள் இந்த மாமன்றத்திலே கொடுத்த பதில், 'அப்படி
எல்லாம் அல்ல, நாங்கள் வேண்டுமென்றே அந்த ராணுவத்திற்கு
வரவேற்பு கொடுப்பதை விரும்பவில்லை' என்கிற வகையிலே
இங்கே அவர்கள் ஒரு பதிலைக் கொடுத்திருந்தார்கள்.

அந்தப் பதிலைப் பார்க்கின்றபோது, அந்தப் பதில் நமது
மாண்புமிகு முதல்வர் அவர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்
தின் தலைவராக மட்டும் இருந்திருப்பார்கள் என்று சொன்
னால், ஒரு அரசியல் நிர்பந்தத்தின் காரணமாக அவ்வாறு
சொல்கிறார்கள் என்று நாங்கள் ஏற்றுக்கொள்வோம். ஆனால்,
இன்றையதினம் நாலரைக்கோடி தமிழ் மக்களுடைய அங்கீகரிக்
கப்பட்ட தலைவராக, தமிழ் மாநிலத்தினுடைய முதல்வராக,
இந்திய அரசியல் சாசனச் சட்டம் முழுவதுமாக அங்கீகரிக்கக்
கூடிய, இந்திய அரசியல் அமைப்பில் இடம் பெற்ற ஒரு முதல
மைச்சராக இருக்கின்ற காரணத்தினால், தமிழ் பேசுகின்ற
நாலரைக்கோடி தமிழ் மக்கள் மட்டுமல்ல : இன்று இந்தியா
என்கின்ற எல்லைக்கோடு எங்கெல்லாம் இருக்கிறதோ, அங்
கெல்லாம் நமது முதல்வர். அவர்களுடைய பதில் ஒரு மிகப்
பெரிய கேள்வியை எழுப்பிவிட்டிருக்கிறது. அவர்கள் சொல்

இன்ற அந்தப் பதிலை நாம் இங்கு ஆழ்ந்து யோசித்தோம் என்று சொன்னால், அமைதிப்படை அங்கே சென்ற நோக்கத்தினையே திசை திருப்புவதாக அந்தப் பதில் இருக்கிறது என்று நான் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

'5,000 தமிழ்ச் சாதியினரைக் கொன்ற இராணுவம்' என்று அவர்கள் குறிப்பிட்டார்கள். முதல்வர் அவர்களுக்குத் தெரியாத தல்ல. இங்கே மாமன்றத்திலே இருக்கிற உறுப்பினர்களுக்குத் தெரியாதது அல்ல. முதலிலே இந்தியப் படை ஒரு அமைதிப் படையாக அங்கே சென்றது. It was neither a declaration of war nor was it a foreign invasion. ஒரு கையிலே துப்பாக்கியும், ஒரு கையிலே சமாதானக் கொடியும் ஏந்தி, அங்கே ஒரு பக்கம் சிங்களத் தீவிரவாதிகள், ஒரு பக்கம் ஆயுதம் ஏந்திய தமிழ் பேசும் பயங்கரவாதிகள், அவர்கள் மத்தியிலே இருந்து அப்பாவித் தமிழர்களைக் காப்பாற்றுவதற்காக, தமிழர்களுடைய இடங்களை ஆக்கிரமித்து இருந்த இலங்கை தீவிரவாதிகளை, தமிழ்த் தீவிரவாதிகளை விரட்டி, தமிழ் மக்கள் மத்தியிலே அமைதி விதைப்பதற்காக ஒரு அமைதிப்படையாகச் சென்றது.

10-20 மணி

துப்பாக்கியால் சுடச் சொல்லவில்லை. பாலங்களைக் கட்டினார்கள். சாலைகளைப் போட்டார்கள், ஓடாத ரயில்களை ஓட்டிவிட்டார்கள்; மூடிக் கிடந்த பள்ளிகளை திறந்து வைத்து, அந்த பள்ளியில் இருக்கின்ற மாணவர்களுக்கு அந்த இராணுவ வீரர்கள் பாடம் சொல்லிக் கொடுத்தார்கள். அங்கே இடிந்து கிடந்த கோவில்களை எல்லாம் தூசி தட்டி, அங்கே புனர் வேலைகளைச் செய்தார்கள். இதைவிட மேலாக செத்துக் கொண்டிருந்த தமிழனுக்கு இந்திய இராணுவ வீரர்கள் இரத்தம் கொடுத்து உயிரைக் காப்பாற்றிய வரலாறு அங்கே நடந்தது. தங்க நகை செய்கின்றபோது சேதாரம் வந்து விடுவதைப் போல, மோரிலிருந்து வெண்ணெய் எடுக்கின்றபோது சில துளிகள் மோர் சிதறி விடுவதைப் போல அங்கே ஒரு சில சம்பவங்களும் நடந்து இருக்கலாம், நடந்து இருக்கக்கூடும். ஆனால் அதையெல்லாம் வைத்துக்கொண்டு இந்த இராணுவம் கொலை வெறிப் பிடித்த இராணுவம், 5 ஆயிரம் தமிழ் சாதியைக் கொன்ற இராணுவம் என்று நமது முதலமைச்சர் அவர்கள் சொல்வார்கள் என்று சொன்னால், அது தமிழகத்தினுடைய அரசியல் வரலாற்றில் நிரந்தரமாக ஏற்பட்ட களங்கம் என்பதை நான் மாண்புமிகு முதலமைச்சரின் மேலான பார்வைக்குச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைப் பார்த்து கேட்கிறேன், தர்மலிங்கம் என்ன சாதி, ஆலாலசுந்தரம் என்ன சாதி, அமர்தலிங்கம் என்ன சாதி. இவர்கள் எல்லாம் தமிழர்





கள் இல்லையா? தமிழன் என்ற காரணத்தால் கொலை செய்யலாமா? தமிழன் என்ற காரணத்தால் கற்பழிக்கலாமா? தமிழன் என்ற காரணத்தால் கடைகளைச் சூறையாடலாமா? அன்றைக்கு மாண்புமிகு முதலமைச்சர், அவர்கள் சொன்னார்கள், ஒரு நாளும் வன்முறையை நான் அனுமதிக்க மாட்டேன். அவர்கள் யாராக இருந்தாலும் சரி என்று கடந்த வாரம் கூட இந்த மாமன்றத்தில் சொன்னார்கள். தமிழன் என்ற காரணத் தால், போராளிகள் என்ற காரணத்தால் தமிழ் மண்ணை யுத்த களமாக ஆக்குகின்ற முறையில் இரத்தம் தோய்வதற்கு இந்த தமிழகத்தினுடைய முதலமைச்சர் என்ற முறையில் நான் ஒரு நாளும் அனுமதிக்க மாட்டேன் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அதை தான் இந்திய இராணுவம் அங்கே செய்தது. அந்தப் பணியைத்தான் இந்திய இராணுவம் அங்கே செய்தது. இதை நான் சொல்லவில்லை, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்னது அரசியல் ரீதியாக, உண்மையின் ரீதியாக ஒரு அப்பட்டமான ** கூற்று என்பதை இன்று தேசிய முன்னணியில் அங்கம் வகிக்கின்ற முதலமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். பிரதமர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். இந்திய நாட்டினுடைய வெளியுறவுத் துறை அமைச்சர் மாண்புமிகு குஜ்ரால் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள்; மாண்புமிகு குருபாதசாமி அவர்கள் சொல்லியிருக்கிறார்கள் பாராளுமன்றத்தில், அமைதிப்படை சென்று தன் பணியை அது மாபெரும் விதத்திலே, நல்ல மனிதர் கள் பாராட்டுகின்ற வகையிலே நிறைவேற்றியுள்ளது என்று இந்திய நாட்டினுடைய வெளியுறவுத்துறை அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள்.

இன்று அருமை நண்பர் மாண்புமிகு உறுப்பினர் திரு. இரகு மான்கான் அவர்கள் பேசுகின்றபோது சொன்னார்கள். நமது அரசு, எங்கள் அரசு தேசிய முன்னணி அரசு என்று சொன்னார் கள். இந்த தேசிய முன்னணியில் அங்கம் வகிக்கின்ற நீங்கள், அதிலே பொறுப்பான பங்கு வகிக்கின்ற நீங்கள், உங்களது.....

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன்: பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசு கின்றபோது ** ** என்ற வார்த்தை பயன் படுத்தப்பட்டது. நான் ஆட்சேபிக்கிறேன். It is unparliamentary.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அந்த ** என்ற சொல்லைக் கொஞ்சம் மாற்றி வேறு வகையில் சொல்ல வேண்டும். அந்த ** அகற்றப்பெற்றது.

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

[1990 மார்ச் 30

திரு. சா. பீட்டர் ஆல்போன்ஸ்: தலைவர் அவர்களே, மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சருடைய மேலான ஆலோசனைக்கு நான் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். ** என்ற வார்த்தையை மாற்றி உண்மைக்குப் புறம்பான செய்தி என்பதை ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறேன்.

நான் கேட்கிறேன், இன்று தேசிய முன்னணியில் ஏற்பட்டு இருக்கின்ற முரண்பாடுகளுக்கு, குழப்பத்திற்கு என்ன காரணம்? you have become a bundle of contradictions. முரண்பாடுகளின் மூட்டையாக காட்சி அளிக்கிறீர்கள். இன்று நீங்கள் பங்கு ஏற்று இருக்கின்ற அரசாங்கத்திலே பணியாற்றிக் கொண்டு இருக்கின்ற வெளியுறவுத்துறை அமைச்சர் அவர்கள் இந்திய அமைதிப்படை சென்றது நியாயம் என்று சொல்லுகிறார். (மணியடிக்கப்பெற்றது).

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உறுப்பினர் அவர்கள் சில மணித் துளிகளைக் கூடக் கேட்டார்கள். அதைக் கூடக் கொடுத்து இருக்கிறேன். இப்போது குற்றம் சாட்டுகிற அடிப்படையில் இவற்றைச் சொல்லக்கூடாது. நீங்கள் இப்போது செய்தியைக் கிளப்புகிறீர்கள். அதற்குரிய விடையை எதிர்பார்க்கிறீர்கள் என்ற அளவோடு இதை முடிக்க வேண்டும்.

திரு. சா. பீட்டர் ஆல்போன்ஸ்: தலைவர் அவர்களே, நான் சில விளக்கங்களைத்தான் கேட்கிறேன், நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கின்ற பதிலில் எனக்கு இவ்வளவு சந்தேகம் இருக்கிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த சந்தேகங்களுக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், இந்த அரசினுடைய தலைவர் என்ற முறையிலே அவரது ஆளுகையில் இருக்கின்ற குடிமக்கள் நாங்கள் என்ற அடிப்படையில் அதற்கு விளக்கங்களை தெரிந்துகொள்ள ஆசைப்படுகிறேன்.

நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைப் பார்த்து நான் கேட்கிறேன். சிங்களனுக்கு ஒரு நீதி ; தமிழனுக்கு ஒரு நீதியா? அன்று தமிழ்க் கொலை என்று முரசொலியில் எழுதினீர்கள். அன்று திருமதி பண்டார நாயகா இலங்கையினுடைய பிரதமராக இந்தியாவுக்கு வந்தார். மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்கள் அப்போது முதலமைச்சராக இருக்கின்ற போது விமான நிலையத்திற்குச் சென்று வரவேற்றார்கள். அப்போது திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த சிலர் கருப்புக் கொடி காட்டினார்கள். ஜெனார்த்தனன் காட்டினார், தமிழரசன் காட்டினார் ; அவர்களை அன்றைய திராவிட முன்னேற்றக் கழக அரசு சிறையில் அடைத்தார்கள். அன்று முதல்

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.



1990 மார்ச் 30] [திரு. சா. பீட்டர் ஆல்போன்ஸ்]

மைச்சர் அவர்களைப் பார்த்து நிருபர்கள், ''இன்று எப்படி
நீங்கள் விமான நிலையத்திற்கு வந்து பண்டார நாயகாவை
வரவேற்றீர்கள், 'தமிழ்க்கொலை' என்று எழுதிய பிறகு'' என்று
கேட்டார்கள். முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள். "That
is a Protocol. நான் தமிழகத்தினுடைய முதலமைச்சர் என்ற
முறையில் வரவேற்க வந்து இருக்கிறேன். திராவிட முன்னேற்றக்
கழகத்தின் தலைவர் என்ற முறையில் அல்ல '' என்று.

நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைக் கேட்கிறேன்,
மாண்புமிகு முதலமைச்சர் அவர்களே, நெஞ்சுக்கு நீதி கேட்ட
நீங்கள் அந்த சிங்களனுக்கு ஒரு நீதி, இந்த இந்திய இராணுவத்
திற்கு ஒரு நீதியா என்று நீங்கள் பதில் சொல்ல வேண்டும், அந்த
பதிலை இன்று இந்தியா முழுவதும் எதிர்பார்த்துக் கொண்டிருக்
கிறது. இராணுவம் என்பது அது யார் ஆண்டாலும் அது
இந்திய இராணுவம் தான். அது ராஜிவ் காந்தி ஆண்டாலும்
இந்திய இராணுவம் தான், அல்லது வி. பி. சிங் ஆண்டாலும்
இந்திய இராணுவம்தான். இல்லை, எங்களது ஆசைக்கு ஏற்ப
இந்த தேசிய முன்னணி அரசு தொடர்ந்து பதவியில் இருந்து
நீங்களே பிரதமராகப் பதவி ஏற்றாலும் கூட அது இந்திய இராணு
வம்தான். நாங்கள் அதை ஒரு நாளும் ராஜிவ் காந்தி இராணுவம்,
வி.பி. சிங் இராணுவம், அல்லது திராவிட முன்னேற்றக் கழகத்
தலைவர் கருணாநிதி அவர்கள் பிரதமராக இருந்தால் இவரு
டைய இராணுவம் என்று நினைக்கவில்லை. இந்த தேசத்தை
யார் ஆண்டாலும், எவர் ஆண்டாலும் இந்திய தேசம். இந்த
தேசத்தில் யார் பிரதமராக இருந்தாலும் அது இந்திய
இராணுவம். That is a permanent institution. அது ஒரு நிரந்தர
நிறுவனம். அந்த நிறுவனத்தினுடைய மிகப் பெரிய வரலாற்றை
தியாக பாரம்பரியத்தை, ஒரு ஜனநாயக அமைப்பிலே நம்பிக்கை
யுள்ள, உலகம் முழுவதும், ஐக்கிய நாடுகள் ஏற்றுக்கொண்டிருக்
கின்ற இந்திய இராணுவத்தைப் பற்றி நமது முதல்வர் அவர்கள்
சொன்ன குறிப்பு, அது நீண்ட நெடிய வரலாற்றிலே ஒரு களங்க
மாக இருக்கிறது. அந்தக் களங்கத்தைத் துடைப்பதற்கு மாண்பு
மிகு முதல்வர் அவர்கள் விளக்கம் தர வேண்டுமென்று கேட்டுக்
கொண்டு அமைகிறேன். நன்றி, வணக்கம்.

10-25 மணி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதல்வர் அவர்கள்........

திரு. எஸ். ஆர். இராதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் கட்சியிலேயிருந்து இதே பொருள் குறித்து பேசுவதற்கு பேராசிரியர் பொன்னுசாமி அவர்கள் கொடுத்து இருக்கிறார்கள். அவரையும் நீங்கள் பேச அனுமதிக்க வேண்டும்.

*பேராசிரியர் க. பொன்னுசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனக்கு முன்னாலே இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர் பீட்டர் ஆல்போன்ஸ் அவர்கள் சொன்ன கருத்துக்களின் அடிப்படையில் ஒரு சிலவற்றை நான் வலியுறுத்த விரும்புகிறேன். இந்திய இராணுவம் என்பது தனிப்பட்ட எந்தவொரு மாநிலத்திற்கோ அல்லது எந்தவொரு மொழிக்கோ சொந்தமானதல்ல என்பதையும், இந்திய அரசின்பால் அது முழுமையான, நாணயமான பொறுப்புணர்வு கொண்டது என்பதையும் யாருமே மறந்துவிட முடியாது; மறுக்கவும் முடியாது. அப்படிப்பட்ட ஒரு சூழ்நிலையில் இலங்கை-இந்திய ஒப்பந்தத்தின் அடிப்படையில் அனுப்பப்பட்ட இராணுவம் நல்ல முறையிலே பணியாற்றி வந்திருக்கிறது என்று பல்வேறு தலைவர்கள் டெல்லியிலே மேல் சபையிலும் சொல்லியிருக்கிறார்கள்; ஒத்துக்கொண்டு இருக்கிறார்கள். மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்கள் கூட அதைப் பாராட்டி இருக்கிறார்கள். அப்படிப்பட்ட ஒரு சூழ்நிலையில் அதைத் தரம் தாழ்த்திப் பேசுகின்ற வகையிலே ஒருசில சொற்கள் வந்து விட்டதாக ஐயப்படுகின்ற அளவிற்கு தமிழகத்திலே ஒரு நிலைமை இருக்கிறது.

மாண்புமிகு முதல்வர் அவர்கள் இங்கே தெரிவித்த சில கருத்துக்கள் ஆட்சேபகரமான கருத்துக்கள் என்று வெளியிலே இருப்பவர்கள் நினைக்கின்ற அளவிற்கு பத்திரிகைகளிலே கூட செய்திகள் வந்து விட்டன. இராணுவத்தை மாண்புமிகு முதல்வர் அவர்கள் சரியான மரியாதையோடு வரவேற்கவில்லை என்ற கருத்து எல்லோருடைய மனதிலும் இப்போது ஏற்பட்டு விட்டது. இராணுவத்தை வரவேற்பது, ஒரு ப்ரோட்டோகால்—இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தின்படி மாநில முதல்வர்களாக இருப்பவர்களுக்கு என்ற கடமை இருக்கிறது; பொறுப்பு இருக்கிறது; உரிமைகள் இருக்கின்றன. அந்த 'ஆப்ளிகேஷன்ஸ்' என்ற வகையிலே அவர் சென்று இருக்க வேண்டுமென்ற கருத்தை எல்லோரும் வலியுறுத்தியிருக்கிறார்கள். அது மீறப்பட்டிருக்கிறது என்று முன்னாலே கூட சொல்லப்பட்டது. இது உள்ளபடியே தேசத்திற்கு எதிரான ஒரு கருத்து என்று கூட வெளியிலே பரவலாகப் பேசப்படுகிறது. இப்படிப்பட்ட ஒரு சூழ்நிலை இருப்பதன் காரணமாக, இந்திய எல்லைக்குள்ளேயே குழப்பம் வரக்கூடாது என்கின்ற காரணத்தினால் மாண்புமிகு முதல்வர் அவர்கள் இதற்கு சரியான விளக்கத்தைத் தரவேண்டுமென்றும், இங்கே அவர் கூறிய கருத்துக்கள்—மாண்புமிகு முதல்வர் அவர்கள் கூறிய கருத்துக்கள் உள்ளபடியே தமிழர்களை மட்டுமல்ல, இந்தியர்களையும் புண்படுத்துகிற அளவிலே இருக்கிறது என்பதையும் நான் இங்கே குறிப்பிட்டு ஆக வேண்டும்.

நேற்றுகூட ஒரு செய்தித் தாளிலே இதைப்பற்றி தலையங்கம் தீட்டப்பட்டிருக்கிறது. இந்தியர்கள் என்று எண்ணுவது சரியாக இருக்கும். அவர்களை, தமிழர், தமிழர் அல்லாதார் என்று



எண்ணுவது தவறு; இந்தியர், இந்தியர் அல்லாதார் என்ற கண்ணோட்டத்திலேதான் பார்க்க வேண்டும் என்றும், இதற்கு மத்தியிலே இருக்கிற தேசிய முன்னணி அரசு கண்டனம் தெரிவிக்க இடமிருக்கிறது என்றும் கூட அதிலே குறிப்பிட்டிருக்கிறார்கள். மேலவையிலேகூட கண்டனம் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. முதல்வர் அவர்கள் கூறிய கருத்து தவறானது என்று கண்டிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, இப்படி இந்தக் கருத்துக்களைத் தெரிவித்த மாண்புமிகு முதல்வர் அவர்கள் அதற்கான விளக்கத்தை அளிக்க வேண்டுமென்று, இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, நான் இந்த அவைக்கு வரும்பொழுது இந்தப் பிரச்சினை இன்று வரப் போவதாக எனக்குத் தெரிவிக்கப்படவில்லை. வந்த பிறகு தெரிவிக்கப்பட்ட காரணத்தால், இல்லத்திற்குச் சென்று சில குறிப்புகளை எடுத்து வரச் சொன்னேன். நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. பீட்டர் ஆல்போன்ஸ் அவர்களும், மாண்புமிகு உறுப்பினர் திரு. பொன்னுசாமி அவர்களும், ஏதோ இந்திய இராணுவத்தைப் பற்றி நான் தரக்குறைவாக சில வார்த்தைகளைச் சொன்னதாகக் குறிப்பிட்டார்கள். இது உண்மைக்கு மாறான, முற்றிலும் உண்மைக்கு மாறான தகவல்.

10-30 மணி

இது குறித்து அன்றைக்கு நம்முடைய காங்கிரஸ் கட்சியினுடைய துணைத் தலைவர் அவர்கள் பிரச்சினையை எழுப்பியபோதே அளித்த பதிலில் இந்திய இராணுவத்திற்கு நாங்கள் மரியாதை செலுத்துகிறோம். மதிப்பு அளிக்கிறோம். அதை என்றைக்கும் நாங்கள் இழிவுபடுத்த மாட்டோம் என்று அன்றைக்கே நான் கூறிய சொற்றொடர்கள் எல்லா ஏடுகளிலும் அச்சில் ஏறியிருக்கின்றன. எனவே தரக்குறைவான எந்த வார்த்தையையும் நான் பயன்படுத்தவில்லை. ஒரு வேளை அவர்களுக்கு அப்படி ஒரு வார்த்தையைப் பயன்படுத்த வேண்டும் என்ற எண்ணம் இருந்து, அதை நான் சொன்னதாகச் சொல்கிறார்களோ, என்னவோ எனக்குப் புரியவில்லை. இந்திய இராணுவத்தின்பால் எனக்கும், என்னைத் தலைவனாக ஏற்றுக்கொண்டிருக்கின்ற தி.மு. கழகத்திற்கும், திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக்கும் எந்த நேரத்திலும், மரியாதையும், மிகுந்த மதிப்பும் உண்டு என்பதை மீண்டும் ஒருமுறை இங்கே நான் திட்டவட்டமாக, திண்ணமாக அறிவித்துக் கொள்கிறேன்.

பங்களாதேஷ் போராட்டம் நடைபெற்ற போது நம்முடைய இந்திய இராணுவம் அங்கே சென்றது. பங்களாதேஷில் விடுதலைப் போராட்டம் நடத்திக் கொண்டிருந்த முக்திவாகினி போராளிகளுக்கு ஆதரவாகச் சென்று, பாகிஸ்தான் வீரர்களோடு

மோதி, அங்கே பங்களாதேஷ் உருவாகக் காரணமாக இருந்தது. எனவே இன்னொரு நாட்டோடு மோதி அங்கே விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தவர்களுக்கு உதவிய அந்த இராணுவத்தை இந்தியாவிலே உள்ள எந்த மாநில அரசும் பாராட்டாத அளவுக்குப் பாராட்டிய அரசு அன்றைக்கு இருந்த திராவிட முன்னேற்றக் கழக அரசு. (மேசையைத் தட்டும் ஒலி)

அதுமாத்திரமல்ல. இந்தியாவிலே உள்ள எந்த மாநிலமும் தராத அளவுக்கு யுத்த நிதியை தமிழ்நாடு தான் அன்னை இந்திரா காந்தி அவர்களை அழைத்து அவர்களுடைய கையிலே வழங்கியது. அப்படி வழங்கியபோது கூட நான் சொன்னேன். நீங்கள் பிறந்த மாநிலமான உத்திரப்பிரதேசத்தைவிட நாங்கள் தான் அதிக யுத்த நிதியைக் கொடுத்திருக்கிறோம் என்று சொன்னேன். அதற்கு அம்மையார் அவர்கள் பதிலளித்த போது உத்திரப்பிரதேச மாநிலம் பின்தங்கிய மாநிலம், எனவே தான் நாங்கள் குறைவாகக் கொடுத்தோம்; நீங்கள் அதிகமாகக் கொடுத்திருக்கிறீர்கள் என்று குறிப்பிட்டார்கள். எனவே இதை வைத்துக் கொண்டு திராவிட முன்னேற்றக் கழகம் அல்லது இந்த ஆட்சி தேச விரோதமானது என்று யாராவது சொல்ல முன் வருவார்களேயானால் தேச விரோதமான காரியங்கள் இந்த நாட்டில் எத்தனையோ நடைபெற்று இருக்கின்றன; அதை யார், யார் நடத்தியிருக்கிறார்கள் என்பதை எல்லாம் என்னால் புள்ளி விவரத்தோடு சொல்ல முடியும்.

திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியைப் பொறுத்தவரை யிலும் அல்லது கட்சி அமைப்பைப் பொறுத்தவரையிலும், இந்திய ஒருமைப்பாட்டை, இறையாண்மையை ஏற்றுக் கொண்டு, இந்தியாவிற்குள்ளேயே தமிழகம் ஒரு மாநிலம்; ஆனால் அது அதிகாரங்களை அதிகம் பெற்ற மாநிலமாக, உரிமைகளைப் பெற்ற மாநிலமாகத் திகழ வேண்டும் என்ற எண்ணம் உடையவர் களேயல்லாமல் வேறல்ல. பேரறிஞர் அண்ணா அவர்களுடைய காலத்திலேயே இந்தியாவினுடைய ஒற்றுமையைக் கருதியும், இந்தியாவினுடைய பலத்தைக் கருதியும் பிரிவினைக் கொள் கையை அறவே கைவிட்டுவிட்டு இந்தியாவின் இறையாண்மைக் காகப் பாடுபடுவது, பணியாற்றுவது, ஒருமைப்பாட்டுக்காக உழைப்பது என்கின்ற முடிவுகளை மேற்கொண்டவர்கள் நாங் கள். அதற்காக இதே மாமன்றத்தில் பெரியவர் பக்தவத்சலம் அவர்களுடைய பாராட்டுக்களைக் கூட பெற்றது திராவிட முன்னேற்றக் கழகம். எனவே தேச விரோதமான காரியமோ அல்லது இராணுவத்தை இழிவுபடுத்த வேண்டும் என்கின்ற எண்ணமோ, கழகத்திற்கோ, கழக அரசுக்கோ, எனக்கோ நிச்சய மாக இல்லை. வரவேற்பு நிகழ்ச்சிக்கு நான் செல்லவில்லை என்ற காரணத்தால் அவர்களை மரியாதைக் குறைவாக நடத்தி விட்டேன் என்று கூறுவது தவறாகும். ஒரு நிகழ்ச்சிக்கு நான் செல்லவில்லை என்பதால் அவர்களை மரியாதைக் குறைவாக



நடத்தி விட்டோம் என்று பொருள் அல்ல. செல்வதும், செல் லாததும் நம்முடைய விருப்பத்தைப் பொறுத்தது. அதை ஏதோ 'ப்ரோட்டாகால்' என்றெல்லாம் குறிப்பிட்டார்கள்.

மாண்புமிகு பாதுகாப்புத் துறையின் துணை அல்லது இணை அமைச்சர் அவர்களே குறிப்பிட்டார்கள். தமிழகத்தின் சார்பாக, தமிழக அரசின் சார்பாக ஆளுநர் அவர்களே வந்திருக்கிறார்கள் என்று அவர்களே கூட நிருபர்களுக்குப் பதில் அளித்திருக்கிறார் கள். ஆனால் இன்றைக்குத் திரும்பி வந்த இந்த இராணுவம் இன்றைய பிரதமர் திரு. வி.பி. சிங் அவர்களால் அனுப்பி வைக் கப்பட்ட இராணுவம் அல்ல. நான் இவைகளை எல்லாம் கிளற வேண்டாம் என்றுதான் கருதினேன். ஆனால் இங்கே பேசப் பட்டுவிட்ட பிறகு அவைகளைச் சொல்ல வேண்டிய அவசியத் திற்கு, தவிர்க்க முடியாத சூழ்நிலைக்கு என்னை ஆளாக்கியிருக் கிறார்கள்.

அமைதிக்காக அனுப்பப்பட்டது இந்த இராணுவம், திரு. ராஜீவ் காந்தி அவர்களால். மாண்புமிகு பிரதமராக இருந்த திரு. ராஜீவ் காந்தி அவர்களால் இந்த இராணுவம் அங்கே அனுப்பப்பட்ட பிறகு, இன்று நேற்றல்ல, ஏதோ எனக்கும், பிரபாகரனுக்கும் இப்போது புதிய நட்பு ஏற்பட்டு விட்டது என்றெல்லாம் யாரும் கருதத் தேவையில்லை. அன்றைக்கு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் கூடச் சொன்னார்கள், முன்பு அவரோடு விரோதமாக இருந்தேன் என்று. கொள்கை ரீதியாக அன்றைக்கு திரு. பிரபாகரன் அவர்கள் ஒரு கட்சி ஆட்சியைத் தான் நாங்கள் விரும்புகிறோம் என்று சொன்ன நேரத்தில் அதை மறுத்து அப்போதே அறிக்கை விட்டவன் நான். தமிழ் ஈழமே உருவானால் கூட அங்கே ஜனநாயக ரீதியில் தான் ஆட்சி நடை பெற வேண்டுமே அல்லாமல் சர்வாதிகார ஆட்சியாக அங்கே இருக்கக் கூடாது என்று அப்போதே சொன்னவன் நான். அது இன்றைக்கு ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிற சூழ்நிலையை தமிழ் ஈழத்தில் நாம் காண்கிறோம்.

10-35 மணி

இந்திய இராணுவம் இலங்கையிலே நடந்து கொண்டதைப் பற்றி பிரபாகரனே 1988 ஆம் ஆண்டு எனக்கு எழுதியுள்ள கடிதத்தில் உள்ள வாசகங்களை நான் இங்கே நினைவுக் கூற விரும்புகிறேன்.

" ஆள் தொகையிலும், ஆயுத பலத்திலும் எம்மைவிட 100 மடங்கு வல்லமையுடைய மிகப் பெரிய இராணுவ அழுத்தத்தை நாம் ஈழத்தில் எதிர்கொண்டு நிற்கிறோம். ஒரு புறம் இந்திய இராணுவமும், மறுபுறம் சிங்கள இராணுவமும், இன்னொரு புறம் எமது சகோதர கூலிப் படைகளுமாக பல புறத்தி லிருந்தும் நாங்கள் வேட்டையாடப்படுகிறோம். நாங்கள் யுத்தத்தை விரும்பவில்லை. இது எமது விருப்பத்திற்கு

மாறாக எம்மீது பலவந்தமாகத் திணிக்கப்பட்ட யுத்தம். தமிழ்
ஈழ சுதந்திர எழுச்சியை முற்றாக நசுக்கிவிட வேண்டுமென்ற
சிங்கள இனவாத ஆட்சியாளர்களின் நீண்டகால ஆசையை நிறை
வேற்றி வைக்கவே இந்த யுத்தம் தொடுக்கப்பட்டுள்ளது. வேறு
வழியின்றி, எம்மைப் பாதுகாத்துக் கொள்ளவே, நாம் இந்தப்
போரில் ஈடுபட நிர்ப்பந்திக்கப்பட்டோம். இந்த யுத்தம் எம்
மீது திணிக்கப்பட்ட காலத்திலிருந்தே நான் பாரதப் பிரதம
ருக்கு பல கடிதங்கள் எழுதியுள்ளேன். சமாதானத்திற்கு நாங்கள்
தயார். போர் நிறுத்தத்திற்கு நாங்கள் தயார். ஆயுதங்களை
நாங்கள் ஒப்படைக்கவும் தயார் என்று நான் பிரதமர் ராஜீவ்
காந்தியிடம் பலதடவை கூறியிருக்கிறேன். யுத்தத்தை நிறுத்தி
விட்டு, புலிகளோடு பேச்சுக்களை நடத்துமாறு தமிழீழ மக்களும்,
உலகத் தமிழ் மக்களும் கோரி வருகிறார்கள். ஆனால் இந்திய
அரசோ, அந்தக் கோரிக்கைகளையெல்லாம் நிராகரித்து வரு
கிறது. சமாதானத்தை உருவாக்குவதற்குப் பதிலாக தினமும்
பெருமளவில் படைகளைக் குவித்து யுந்தத்தை விஸ்தரித்து வரு
கிறது. விடுதலைப் புலிகளைக் கூண்டோடு அழித்து விட வேண்டு
மென்று இந்திய அரசு கங்கணம் கட்டியிருக்கும் இந்த இராணுவ
வாதக் கொள்கையால் இந்தியாவின் நலனோ, ஈழத் தமிழர்
களின் நலனோ பேணப்படப் போவது இல்லை. நாங்கள் இந்தி
யாவின் எதிரிகள் அல்லர். இந்திய வெளி விவகாரக் கொள்
கைக்கு விரோதமானவர்கள் அல்லர். நாங்கள் இந்தியாவின்
நண்பர்கள். இன ரீதியாக, கலாச்சார ரீதியாக, வரலாற்று
ரீதியாக பாரதத்தோடு பின்னிப் பிணைந்தவர்கள்.
இனப் படுகொலைக்கு ஆளாகி வந்த ஈழத் தமிழ் மக்களைப்
பாதுகாத்து அவர்களின் விடிவுக்காக எங்கள் உயிரைப் பணயம்
வைத்துப் போராடி வந்ததைத் தவிர நாங்கள் இந்தியாவுக்கு
எந்தத் துரோகத்தையும் செய்துவிடவில்லை. நாங்கள் இந்தி
யாவின் உண்மையான விரோதிகளுக்கு எதிராக உலகின் நாச
கார சக்திகளுக்கு எதிராகவே போராடி வந்தோம். இதை நன்கு
உணர்ந்துதான் இந்திய அரசு எமது ஆயுதப் போராட்டத்திற்கு
அன்று உதவி புரிந்தது. ஆனால், இன்று பழைய எதிரிகளை
நண்பர்களாக்கி, உண்மையான நண்பர்களை பகைவர்களாகக்
கருதி இந்திய அரசு எம்மீது இந்த அபாயமான யுத்தத்தைத்
தொடுத்து, எம்மை அழித்து வருகிறது. தமிழீழ விடுதலைப்
புலிகளை அழித்து விடுவதால் தமிழ் ஈழ மக்களின் நலன்கள்
எந்தவிதத்திலும் பேணப்படப் போவதில்லை. தமிழீழ மக்களின்
ஒரேயொரு பாதுகாப்பு அரணாக இருந்து வந்த எம்மை ஒழித்துக்
கட்டுவதால் எம் மக்களின் எதிர்காலம் பெரிய ஆபத்திற்கு
ஆளாக்கப்படும் என்று நாங்கள் கருதுகிறோம்.''

இந்த வாசகங்களை ஒரு முறை எண்ணிப்பார்த்தால், ராஜீவ்
காந்தி ஆட்சிக்காலத்தில் இராணுவம் எப்படி அங்கே இந்த
உணர்வுகளை நசுக்குவதற்காகப் பணி ஆற்றியிருக்கிறது என்பதை





நாம் மறந்துவிட முடியாது. அந்த உணர்வு என்னை ஆட்படுத்தி
யிருக்கின்ற காரணத்தாலேதான் அந்த நிகழ்ச்சிக்கு நான் செல்ல
இயலவில்லை. ஆனால், இன்றைக்கும் சொல்கின்றேன், இந்திய
இராணுவத்தின் மீது எங்களுக்கு சகலவிதமான மரியாதையும்
உண்டு. இந்தியாவுக்கு எதிராக எந்த ஒரு அன்னிய நாடு போர்
தொடுத்தாலும், ஆக்கிரமிப்பு செய்தாலும்—சீனப் போரின்
போது சிறைச்சாலையில் இருந்த அண்ணா அவர்கள், நாம் சிறை
யில் இருந்தாலும் கூட, தம்பீ, வீடு இருந்தால்தான் ஓடு மாற்றிக்
கொள்ள முடியும், எனவே நாம் சிறையில் இருக்கிறோம்,
இந்த அரசுதானே நம்மைச் சிறையில் வைத்திருக்கிறது என்பதற்
காக, ஆட்சியில் இருப்பது காங்கிரஸ்காரர்கள் அல்லவா என்
பதற்காக ஆட்சியை யாரும் பகைத்துக் கொள்ளக் கூடாது;
அனைவரும் ஓரணியில் நின்று, பண்டித நேருவின் கரத்தைப்
பலப்படுத்த வேண்டுமென்று அன்றைக்கு அண்ணா அவர்கள்
சொன்னாரே, அந்த எண்ணமும், அதைப் போலவே பாகிஸ்தான்
ஆக்கிரமிப்பின் போது ஏற்பட்ட பங்களாதேஷ் போராட்டத்தில்
அன்னை இந்திராகாந்தி அவர்களுக்கு எல்லாவிதமான நிலை
யிலும் நாங்கள் அனைத்து கருத்து மாறுபாடுகளையும் மறந்து
விட்டு எப்படி ஓரணியில் நின்றோமோ, அதைப் போல எந்த
அரசு மத்தியிலே இருந்து இந்தியாவை ஆண்டாலும், அது திரு.
வி.பி. சிங் அவர்களுடைய ஆட்சியாக இருந்தாலும், அல்லது
வேறு அரசாக இருந்தாலும், இந்தியாவினுடைய நன்மைக்குப்
பாதகமாக எந்த ஒரு அன்னிய நாட்டின் ஆக்கிரமிப்பு இருந்தா
லும் அதை திராவிட முன்னேற்றக் கழகமோ, தி.மு.க. அரசோ
ஏற்றுக் கொள்ளாது என்பதையும்,—இந்திய இராணுவம் நல்ல
இராணுவம், ஆனால், அதைத் தகாத முறையில், பயன்படுத்தி
னார்கள் முன்பிருந்த ஆட்சியாளர்கள் என்ற அந்த வருத்தத்தின்
காரணமாகத்தான் அதன் விளைவுகள் என்னைத் துன்புறுத்திய
தன் காரணத்தால்தான் அந்த நிகழ்ச்சிக்கு நான் செல்லவில்லை
என்பதை நான் மீண்டும் தெரிவித்துக் கொள்கிறேன்.

10–40 ம

திரு. எஸ். ஆர். இராதா : நான் இதை வாதமாக ஆக்க
விரும்பவில்லை. பேரவைத் தலைவர் அவர்களே, இது விதியின்
கீழ் நடைபெறுகிறது அல்ல. தயவு செய்து இப்படிப் பேசி
நானும் என்னுடைய உணர்ச்சிகளைக் காட்டவேண்டிய நிலை
மைக்கு ஆளாக்காதீர்கள் (குறுக்கீடுகள்). பேரவைத் தலைவர்
அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்களிடத்திலே இந்த விளக்
கத்தைக் கேட்க வேண்டுமென்ற நிலை ஏற்பட்டதற்குக் கார
ணம், இங்கே தெரிவிக்கப்பட்ட கருத்துக்கள் பத்திரிகையிலே
வெளிவந்து, இந்தியா முழுவதும் இது எதிரான கருத்துக்கள்
என்று இன்றைக்கும் ஆகி, இந்தக் கருத்துக்களுடைய எதிரொலி
யாக நாடாளுமன்றத்திலே இந்தப் பிரச்சினை எழுப்பப்பட்டு
நாடாளுமன்றத்திலேகூட முதலமைச்சர் அவர்களுடைய பேச்
சுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கின்ற அளவுக்கு அங்கே இருக்கின்ற

[திரு. எஸ். ஆர். இராதா] [1990 மார்ச் 30

அமைச்சர்களே, இன்று பொறுப்பானவர்களே சொல்கின்ற அள
வுக்கு ஒரு நிலைமை வந்திருக்கிறது. ஆனால், நான் வேதனை
யோடு குறிப்பிடுகிறேன். பிரபாகரனுடைய நடவடிக்கையை
விமரிசிக்கவோ, ஆதரிக்கவோ அல்லது எதிர்க்கவோ நான் போக
வில்லை. ஆனால், இந்திய இராணுவத்தை நாம் கேட்டத
னாலே அனுப்பினார்கள். போனதற்குப் பின்னாலே விளைவு
மாறி இருக்கிறதா, இல்லையா என்பது விவாதத்திற்கு உரிய
ஒன்று. ஆனால், நாம் தருகின்ற வரிப்பணத்திலே கோடிக்கணக்
கான ரூபாய்களைச் செலவு செய்து இந்திய இராணுவம் அங்கே
பணியாற்றி இருக்கிறது. இந்திய இராணுவத்திலே செத்தவர்
களிலே தமிழர்களும் இருக்கிறார்கள். போராளிகள் எத்தனை
பேர் தமிழர்கள் செத்தார்கள் என்று கணக்குப் பார்க்கிற அதே
நேரத்திலே இந்திய இராணுவத்திலே போன தமிழர்கள் பலர்
செத்திருக்கிறார்கள். அவர்கள் இந்தியர்கள், செத்திருக்கின்
றார்கள் என்ற உணர்வோடு நான் பார்க்கிறேன். ஆனால்,
பிரபாகரனுடைய கடிதத்தை இங்கே படிக்கின்ற நேரத்தில்
மாண்புமிகு முதல்வர் அவர்கள் குறிப்பிட்டுக் காட்டினார்கள்.
எந்த ராஜீவ்காந்தி, எந்த இந்திராகாந்தி அவர்கள் மீது குறை
சொல்லப்படுகிறதோ அதே இந்திராகாந்தி, ராஜீவ்காந்திதான்
போராளிகளுக்கு உதவிகள் செய்ய வேண்டிய நேரத்தில் எல்லாம்
கோடிக்கணக்கான ரூபாய்களுக்கான உதவிகளைச் செய்திருக்கி
றார்கள்: இந்திய அரசு செய்திருக்கிறது என்பதை யாராலும்
மறுக்க முடியாது.

நான் ஒன்றை இங்கே குறிப்பிட்டுக் கூற விரும்புகிறேன்.
மாண்புமிகு ராஜீவ்காந்தி இராணுவத்தை அனுப்புகிற நேரத்திலே
எடுத்துக்கொண்ட கொள்கையும் அங்கே போனதற்குப் பின்
னாலே ஏற்பட்ட விளைவுகளும் பல்வேறு வகையிலே மாறி
யிருக்கலாம். அது விவாதத்திற்குரிய பிரச்சினை. அதிலே
போகவேண்டிய அவசியம் இல்லை. ஆனால், நீங்கள் இன்று
சொல்லியிருக்கக்கூடிய பிரச்சினை இருக்கிறதே, அது இந்திய
இராணுவத்தை வரவேற்கவில்லை என்ற நிலையோடு நின்றிருந்
தாலும்கூட பரவாயில்லை, கவர்னர் போனார், அதுவே நாங்கள்
போனது மாதிரி என்று சொல்லியிருந்தாலும்கூட நிச்சயமாக இது
விவாதத்திற்குரிய பிரச்சினையாக ஆகி இருக்காது. அடிப்படை
யிலே சொன்னது, இந்திய இராணுவம் போய் தமிழர்களைக்
கொன்றது, அதனாலே அதை நாங்கள் எதிர்க்கிறோம் என்று
சொன்னால், இந்திய இராணுவத்திற்குத் தருகிற மரியாதையை
இந்தியாவிலே, தமிழ்நாட்டிலே இன்றைக்குப் படுகொலை
செய்வது நமக்கு நாமே செய்துகொள்கிற மிகப் பெரியபடு
கொலையாகும். நான் பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன்.
மொரீசியஸ் தீவுக்கு இந்திய இராணுவம் போனது சரியா,
தப்பா என்று உலக நாட்டிலே யார் விமரிசனம் செய்தாலும்,
இந்தியாவிலே இருக்கின்றவர்கள் நாம் ஏற்றுக்கொண்டுதான் ஆக



1990 மார்ச் 30] [திரு. எஸ். ஆர். இராதா]

வேண்டும். கிழக்கு வங்காளத்திற்குப் போனால் இராணுவம்
என்ன காரியங்களைச் செய்தது, எவ்வளவு கோடி ரூபாய் செல
வாயிற்று, இந்த ஏழை நாடு தாங்குமா என்ற விவாதம் இருந்
தாலும் இந்தியாவிலே இருந்து இந்த நாட்டு இராணுவம் போ
கிறது என்றால் இந்தியாவில் இருக்கின்ற ஒரு தமிழ்க் குடிமகன்,
இந்தியக் குடிமகன் என்றால் அந்த நிலையை எடுத்தே ஆகவேண்
டும் என்ற நிலை இருக்கிறது. அதுவும் நம் மீது, திராவிட நாடு
விட்டதற்குப் பின்னாலே ஏற்பட்ட சந்தேகம், இருக்கின்ற
சந்தேகம் தீருகின்ற நேரம் வருகின்ற நேரத்தில் இப்படி நீங்
களே மறுபடியும் பிரச்சினைகளை உண்டாக்கி இந்திய இராணு
வத்திற்குக் களங்கம் உண்டாக்கினால், அது நிச்சயமாக மிகப்
பெரிய களங்கம். அந்தக் களங்கத்தைத் தவிர்ப்பதற்கு நீங்கள்
முயற்சி எடுக்க வேண்டும் என்று நான் வற்புறுத்தி வலியுறுத்திக்
கூறுகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே, ஏதோ திராவிட நாடு பிரிவினை
விட்டுவிட்ட பிறகு நாம் பேசுவதும், செயல்படுவதும் சந்தே
கத்தை ஏற்படுத்தக்கூடாது என்று சொன்னார்கள். ஆனால்
அன்றைக்கு பட்ஜெட் உரையினுடைய பொது விவாதத்திலே,
எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பேசும்போது நீங்கள் ஏன்
மத்திய சர்க்காரைக் கேட்பது, நீங்களே நெய்வேலி நான்காவது
நிலக்கரிச் சுரங்கத்தை ஜெயங்கொண்டத்திலே ஏன் ஏற்படுத்தக்
கூடாது என்று கேட்டார். அதுதான் பிரிவினை வாதம்,
எனவே, அப்படிப் பேசக்கூடாது என்று தம்பி இராதாவுக்குச்
சொல்லிக்கொள்கிறேன். அதுதான் பிரிவினை வாதமே தவிர
இது பிரிவினை வாதம் அல்ல. அவர்கள் ஒன்றைச் சொன்னார்
கள். இந்திய வீரர்களும் இறந்திருக்கிறார்கள் என்று. நான்
அதை மெத்த வேதனையோடு ஏற்றுக்கொள்கிறேன். 4 ஆயிரம்,
5 ஆயிரம் பேர்கள் அங்கே அப்பாவித் தமிழர்கள் இறந்திருக்கிறார்
கள். விடுதலைப் புலிகள் இறந்திருக்கிறார்கள். நண்பர்
பொன்னுசாமி அவர்கள், ஒரு பத்திரிகையிலே தலையங்கம் கூட
எழுதி இருப்பதாகக் குறிப்பிட்டார். அந்தப் பத்திரிகையை நன்
றாகப் படித்துப் பார்த்தால் தெரியும். அதிலே, அந்தப் பத்திரிகை
என்னைக் கண்டித்திருக்கிறது. அது கண்டிக்க வேண்டும். கண்
டிக்காமல் அந்தப் பத்திரிகையால் இருக்க முடியாது. ஆகவே,
கண்டித்திருக்கிறது.

10-45 மணி

ஆனால், அந்தப் பத்திரிகையின் தலையங்கத்தின் முன் பகுதி
யைப் படித்துப் பார்த்தால், அங்கே அப்பாவித் தமிழர்களை
இந்திய இராணுவம் கொன்றது உண்மைதான் என்பதையும் அதே

பத்திரிகையின், அதே தலையங்கத்தில் ஒத்துக்கொண்டிருக்கிறது. அதையும் நாம் மறந்துவிடக்கூடாது. எதிர்க்கட்சித் தலைவர் திரு. இராதா அவர்கள் குறிப்பிட்டதுபோல, தமிழர்கள் அங்கே கொல்லப்பட்டது மட்டுமல்லாமல், தமிழர்கள் உள்ளிட்ட இந்திய இராணுவத்தினரும் கிட்டத்தட்ட 1,800 பேர் கொல்லப்பட்டிருக்கிறார்கள். எனவே, அமைதிப் படை என்கிற பெயரால் எங்குமே நிகழாத சம்பவமான, 1,800 இந்திய இராணுவ வீரர்கள் கொல்லப்படுவதும், 5 ஆயிரம் தமிழர்கள் கொல்லப்படுவதும்—இவைகளுக்கு எல்லாம் காரணமாக முன்னாள் பிரதமர் திரு. ராஜீவ்காந்தி அவர்கள் இருந்தார்கள் அல்லவா, அந்த ராஜீவின் செயலைக் கண்டித்து தான் நான் அந்த விழாவுக்குச் செல்லவில்லை.

திரு. குமரி அனந்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,...............

திரு. கே. ரமணி; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, On a point of order. இந்தக் கேள்வி நேரம் முடிந்து வரக்கூடிய "ஜீரோ அவர்" என்று சொல்லக்கூடிய அப்படி ஒரு "அவர்" இல்லையென்ற வாதம் இருந்தாலும், ஜனநாயக ரீதியில் தாங்கள் சில விஷயங்களைச் சொல்ல அனுமதிக்கிறீர்கள். அந்த விஷயத்தையே வேறு தலைவர்கள் தலையிட்டு, அதையே விவாதமாக்குகிற அளவிற்கு வளர்க்கும்படியான ஒரு முறையை ஏற்படுத்தினால் அந்த உரிமை எங்களுக்கும், மற்றவர்களுக்கும் தரப்பட வேண்டும். இப்படி செய்வதானது இதுவே ஒரு ரெகுலர் நடவடிக்கையாக ஆகிவிடும். இந்த முறை தொடர்ந்து கையாளப்பட்டால் எங்களுக்கும் இங்கே பேசப்பட்டதற்கு பதில் பேச வாய்ப்பு அளிக்க வேண்டும். இப்போது மாண்புமிகு உறுப்பினர் திரு. குமரி அனந்தன் பேச விரும்புகிறார். அவர் பேசுவதில் எங்களுக்கு ஆட்சேபணையில்லை. அந்த முறையைத் தொடர்ந்தால் தொடர்ந்து எங்களுக்கும் நேரத்தை ஒதுக்கி நாங்களும் பேச வாய்ப்பு அளிக்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உறுப்பினர் திரு. குமரி அனந்தன் அவர்கள் ஒன்றைக் கவனிக்க வேண்டும். எதிர்க்கட்சித் தலைவர் என்ற முறையில் அவர் தன்னுடைய கருத்துக்களைச் சொல்லிவிட்டார். அதிலே, தொடர்ந்து விவாதங்களுக்கு இடமில்லை என்பதால் நீங்கள் வேறு ஒரு வாய்ப்பில் கருத்துக்களைச் சொல்லலாம். உங்களுடைய கட்சியில் இருக்கிற ஓர் உறுப்பினருக்குப் பேசுவதற்கு வாய்ப்புக் கொடுத்திருக்கிறேன். அதே நேரத்தில் தலையாய எதிர்க்கட்சியின் உறுப்பினர் பேராசிரியர்





பொன்னுசாமி அவர்களுக்கும் வாய்ப்புக் கொடுத்திருக்கிறேன் இரண்டு பேர்தான் "Mention" வேண்டுமென்று கேட்டவர்கள். தாங்கள் ஒரே வரியில் அதை முடித்தால் அனுமதிப்பேன்.

திரு. குமரி அனந்தன்: மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, ............... (குறுக்கீடு).

திரு. கே. ரமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய உரிமையைப் பாதுகாக்கவேண்டியது தாங்கள் தான். You are the custodian of the House. You have to protect our rights. இவ்வளவையும் சொல்லி, ஒரே வரியில் முடிப்பது என்று சொன்னால் ஒரே வரியில் சொல்வதிலும் ஓர் அர்த்தம் உண்டு இல்லையா? அதிலும் ஒரு பொருள் இருக்கும் அல்லவா? அதை நீங்கள் அனுமதிக்கிறீர்களா? அப்படியானால் எங்களுடைய உரிமையை நீங்கள் எப்படித் தவிர்க்க முடியும்? எங்களுடைய உரிமை மட்டுமல்ல, இந்த அவையினுடைய உரிமை. When a thing has been placed it becomes the property of the House. அந்த உரிமை இருக்கிறதா? நியாயம் இருக்கிறதா? அதற்கு தாங்கள் பதில் கொடுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். I request you to reply my question.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மதிப்பிற்குரிய உறுப்பினர் திரு. ரமணி அவர்கள் சரியான வினாவைக் கேட்டிருக்கிறார்கள். பல உறுப்பினர்கள் 55ஆவது விதியின் கீழ் சில கவன ஈர்ப்புத் தீர்மானங்களை, 56ஆவது விதியின் கீழ் சில ஒத்திவைப்புத் தீர்மானங்களை, 78ஆவது விதியின் கீழ் ஒரு மணி நேர விவாதங்களைத் தொடர்ந்து கேட்கிறார்கள். அவற்றை எல்லாம் ஒரேயடியாக நான் ஒட்டுமொத்தமாக ஏதாவது ஒரு காரணத்தைக் காட்டி மறுத்துவிட வாய்ப்பு இருக்கிறது. என்றாலும் சில உறுப்பினர்கள் குறிப்பிடத்தக்க பிரச்சினைகளை அவையில் இந்த நேரத்தில் எழுப்பி, சில விடைகளை அமைச்சர்களிடமிருந்து பெற்றுக் கொண்டால், அது நாட்டுக்கு நல்லது என்ற பொதுக் கருத்தின் அடிப்படையில் நாம் அனுமதிக்கிறோம். அப்படி வருகிறபோது ஒரு செய்தியைச் சொல்வதற்கு முறையாக அறிவிப்புக் கொடுத்தவர் திரு. பீட்டர் ஆல்போன்ஸ் அவர்கள். அதே நேரத்தில் நேற்று திரு. பொன்னுசாமி அவர்களும் அது தொடர்பாகவே ஒரு அறிவிப்பைக் கொடுத்திருக்கிறார்கள். எனவே, அவற்றை நான் 78 என்ற விதியின் கீழோ, 74 என்ற விதியின் கீழோ அனுமதிக்காமல், இந்த நேரத்தில், ஒரு மணித்துளி அளவில் அதைச் சொல்லி முடிக்கட்டும், அரசின் தரப்பிலும் பதிலைப் பெற்றுக்கொள்ளட்டும் என்ற அடிப்படையில் ஓர் இளகிய எண்ணத்தோடு தான் அதை அனுமதித்திருக்கிறேன். நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. ரமணி அவர்கள் இதைச் சரியாக..................... (குறுக்கீடு).

மாண்புமிகு திரு. துரைமுருகன் : மாண்புமிகு பேரவைத் தலைவருக்கு ''பாயின்ட் ஆப் ஆர்டர்''.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைத் தலைவருக்கு என்ன ''Point of order''?

மாண்புமிகு திரு. துரைமுருகன் ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவைத் தலைவருக்கு அல்ல, எனக்கு பாயின்ட் ஆப் ஆர்டர் எழுப்ப உரிமை உண்டு. தலைவர் சொல்வதால் உட்காருகிறேன். But it is a relevant point of order. I am not questioning the Chair. It is my submission to the Chair.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சொல்லுங்கள்.

மாண்புமிகு திரு. துரைமுருகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நானும் இந்த அவையில் நீண்ட நாட்களாக இருந்திருக்கிறேன். பொதுவாக, தவிர்க்கமுடியாத ஏதாவது ஒரு காரணத்தை ஒட்டித்தான் இப்படி ஒரு சிறிய விஷயத்தை எழுப்புவது வழக்கம்.

10-50 மணி

ஆனால் நித்தம் நித்தம் ஒன்றுக்கு மேற்பட்ட பல்வேறு பிரச்சினைகளை இப்படிக் கிளப்புவதற்கு நீங்கள் அனுமதி கொடுக்கிற காரணத்தால் அவையினுடைய மற்ற நடவடிக்கைகள் பாதிக்கப்படுகின்றன என்பதை நீண்ட நாட்கள் இந்த அவையிலே இருந்தவன் என்பதால், தங்கள் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன், அவ்வளவுதான்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தாங்கள் கவனத்திற்குக் கொணர்ந்ததை நினைவில் வைத்து, இனிமேல் தமிழ்க்குடிமகன் இதுபோன்ற பிரச்சினைகளில் இறுக்கமாகவே இருப்பான் என் பதை உங்களுக்கு நெருக்கமாகவே தெரிவித்துக்கொள்கிறேன். இப்போது அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைப் பற்றி (குறுக்கீடு) உட்காருங்கள் ஒரு வரியிலே சொல்லி முடியுங்கள். (குறுக்கீடு) எல்லோரும் உட்காருங்கள் திரு. குமரி அனந்தன். (குறுக்கீடு)

திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, மாண்புமிகு முதல்வரவர்கள் சொல்கிறபோது இராணுவம் அங்கே எப்படி நடந்து கொண்டது என்ற செய்தியினை இங்கே எடுத்து வைக்கிறபோது, வங்காள தேசத்திலே பாகிஸ்தான் படையோடு மோதியதையும் அவர்கள் குறிப்பிட்டு, இலங்கையிலே சிங்கள இராணுவத்தோடு மோதியிருந்தால் அதைப்பற்றி (குறுக்கீடு).



மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. குமரி அனந்தன் அவர்கள் முதல்வர் சொன்னது தொடர்பாக ஏதாவது சுருக்கமாகச் சொல்வதாக இருந்தால் சொல்லலாம். இல்லாவிட்டால் உட்காரச் சொல்ல வேண்டியதாக இருக்கும். (குறுக்கீடு).

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, இதுபோன்ற '' ஜீரோ ஹவர் '' பிரச்சினைகளை எழுப்ப ஒருவருக்குத்தான் அனுமதிக்கிறீர்கள். அந்த ஒருவர் பேசியதற்கு முதலமைச்சரோ அல்லது தொடர்புடைய அமைச்சரோ பதிலளிக்கிறார்கள். இப்படித்தான் ஜீரோ ஹவரில் பிரச்சினைகள் எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கின்றன. இன்றைக்கு அ.தி.மு.க. சார்பில் ஒருவரும், காங்கிரஸ் சார்பில் ஒருவரும் அப்படி அனுமதிக்கப்பட்டார்கள். அதற்கு நான் பதிலளித்த நேரத்தில், அதுபற்றிச் சில சந்தேகங்களை எதிர்க்கட்சித் தலைவர் என்ற முறையில் அவர் கேட்க விரும்பினார். அவருக்கு அந்தச் சந்தர்ப்பத்தை அளித்திருக்கிறீர்கள். அது, எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்கு இருக்கின்ற தனி உரிமையாகும். அது அளிக்கப்பட்டிருக்கிறது. நண்பர் திரு. ரமணி அவர்கள் கேட்டது மாதிரி, தொடர்ந்து அனைவருக்கும் இப்படி அனுமதிக்கப்பட்டால் இன்றையதினம் நடைபெற வேண்டிய துணை மானியக் கோரிக்கை விவாதம் மாலையிலேதான் நடைபெற வேண்டிய அவசியம் ஏற்படும். இதைத் தாங்கள் கவனத்தில் கொள்ள வேண்டும். (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : டாக்டர் எஸ். சுந்தரராஜ், திரு. எஸ். டி. உகம்சந்த் ஆகியோர் ஒரே பொருள் குறித்துக் கவன ஈர்ப்புக் கொடுத்துள்ளனர். அவர்களில் ஒருவர் மாண்புமிகு சட்டத்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருவார். இருவரில் ஒருவர்.

திரு. குமரி அனந்தன் : தலைவர் அவர்களே.........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நாளைக்குப் பேசலாம். வாய்ப்பு வரும்போது பேசிக்கொள்ளலாம். (குறுக்கீடு) நீங்கள் உட்காருங்கள். நான் வாய்ப்புக் கொடுக்கிறேன். (குறுக்கீடு) பின்னாலே வாய்ப்பு வரும். (குறுக்கீடு) இல்லை, இல்லை, இதிலே விவாதம் வேண்டாம். என்னுடைய தீர்ப்பு, இதிலே விவாதத்திற்கு அனுமதிக்கப்போவதில்லை, அவ்வளவுதான். (குறுக்கீடு) முதல்வர் அவர்கள் அதற்கு விளக்கம் சொல்லி விட்டார்கள். எதிர்க்கட்சித் தலைவர் என்ற முறையில்தான் அவருக்குக்கூட சிறப்பு அனுமதி கொடுக்கப்பட்டது. அதாவது, கொடுத்ததைப் பயன்படுத்திக்கொள்வதில் பிரச்சினை வந்தால், ''point of order'' வந்தால், அது குறித்து வெளிப்படுத்த வேண்டியது என்னுடைய கடமை. இப்போது கவன ஈர்ப்பு, டாக்டர் எஸ். சுந்தரராஜ்.

[1990 மார்ச் 30

திரு. குமரி அனந்தன் : உங்களுடைய தீர்ப்பைச் சொன்னதற்குப் பின்னாலே................(குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உட்காருங்கள். (குறுக்கீடு) டாக்டர் சுந்தரராஜ் அவர்கள் பேசவில்லை என்றால் அடுத்த உறுப்பினரைக் கூப்பிட்டு விடுவேன். (குறுக்கீடு).

திரு. கே. ரமணி : On a point of order. (குறுக்கீடு) We cannot introduce disorder here. ஏற்கெனவே நான் சொல்லி, நீங்கள்........ (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : டாக்டர் எஸ். சுந்தரராஜ். (குறுக்கீடுகள்).

டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே............(குறுக்கீடுகள்).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மற்றவர்கள் அமரலாம். டாக்டர் எஸ். சுந்தரராஜ். (குறுக்கீடுகள்).

**10-55 மணி**

## 3. கவன ஈர்ப்பு

### திருவாரூரில் ஏற்பட்டுள்ள குடிநீர்ப் பற்றாக்குறை குறித்து

திரு. வி. தம்புசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''திருவாரூர் நகரம் முழுவதும் குடிநீர்ப் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்), இந்த அறிக்கையை இந்த அவையின் முன்னால் வைக்கிறேன். திருவாரூர் நகராட்சி, தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ள முதல் நிலை நகராட்சிகளில் ஒன்றாகும். தற்போது நடைமுறையில் உள்ள குடிநீர்த் திட்டம் 1972-ஆம் ஆண்டில் நிறைவேற்றப் பட்டது. திருவாரூர் நகராட்சியிலிருந்து 7 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள அம்மையப்பன் கிராமத்தில் உள்ள ஓடம்



1990 மார்ச் 30]

[டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி]

போக்கி ஆற்றின் கரையில் அமைந்துள்ள 3 ஆழ்துளைக் கிணறுகளில் இருந்து 15 குதிரைத் திறன் கொண்ட நீர்மூழ்கி நீரேற்று மூலம் 11.25 இலட்சம் லிட்டர் கொள்ளளவில் நீர்த்தேக்கத் தொட்டிக்கு நீர் ஏற்றப்பட்டு, பகிர்மானக் குழாய்கள் மூலம் தினசரி காலை 6 மணி முதல் 8 மணி வரையிலும் மாலை 3 மணி முதல் 4 மணி வரையிலும் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. இங்கு தண்ணீர்ப் பற்றாக்குறை காரணமாக குடிநீர் விநியோகம் பாதிக்கப்படவில்லை. என்றும் 3-3-1990 முதல் 12-3-1990 வரை கடந்த 10 நாட்களாக மின்சக்தி மிகவும் குறைவான அழுத்தத்தில் கிடைக்கப்பெற்றதால், குடிநீர் தலைமை நீரேற்று நிலையத்திற்கு தனி மின் பாதை இருந்தும் நீரேற்று இயந்திரங்கள் சரிவர வேலை செய்யாத காரணத்தால் குடிநீர் மிகவும் குறைவாக வழங்கப்பெற்று வந்தது என்றும், இதற்கு நெய்வேலியில் டிரான்ஸ்பார்மர் பழுதடைந்துள்ளதுதான் காரணம் என்றும் அந்த கராட்சி ஆணையாளர் தெரிவித்து உள்ளார்.

(அ.இ.அ.தி.மு.க. உறுப்பினர்கள் வெளிநடப்புச் செய்தனர்).

தற்போது 13-3-1990 முதல் சரியான மின் அழுத்தம் கிடைக்கப்பெற்று நகரில் வழக்கம்போல் நபர் ஒருவருக்கு 40 லிட்டர் வீதம் மொத்தம் 20.80 இலட்சம் லிட்டர் அளவிற்கு குடிநீர் வழங்கப்படுகிறது. இது தவிர நகரில் பல்வேறு இடங்களில் 30 ஆழ்துளைக் குழாய்க் கிணறுகள், 147 கைப் பம்புகள் நல்லமுறையில் இயங்கி வருகின்றன.

(காங்கிரசு கட்சி உறுப்பினர்கள் வெளி நடப்புச் செய்தனர்).

எனவே அடுத்த மாதம் நடைபெறவுள்ள தேர்த் திருவிழாவின் போதும் நகருக்கு வழக்கம்போல் குடிநீர் வழங்க இயலும் என்றும் நகராட்சி ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

*திரு. வி. தம்புசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவாரூர் நகரம் ஒரு பெரிய நகரம். அந்த நகருக்கு வழங்கப்படக்கூடிய நீர் போதவில்லை. எனவே, அந்நகர மக்கள் அனைவருக்கும் குடிநீர் வழங்கப்பெறவில்லை. ஒரு பகுதியினருக்குத்தான் வழங்கப்படுகிறது. குடிநீர் அந்த நகரம் முழுவதற்கும் விஸ்தரிப்பதற்காக 1984-ஆம் ஆண்டு நகராட்சி மூலம் பணம் கட்டப்பட்டும், அத்திட்டம் நிறைவேற்றப்படவில்லை. அங்குள்ள கைப் பம்புகள், ஆழ்துளைக் கிணறுகள் சரிவர செயல்படவில்லை. அங்கு குடிநீர்ப் பற்றாக்குறை தொடர்ந்து நீடிக்கின்றது. குடிநீர் அந்நகரம் முழுவதும் விஸ்தரிக்க வேண்டுமென்று சொன்னால் 65.5 இலட்சம் ரூபாய் இருந்தால் தான் குடிநீர் விஸ்தரிக்க முடியும் என்று நகராட்சி தீர்மானம் நிறைவேற்றி இருக்கிறது. அந்தத் தீர்மானத்தின் அடிப்படையில் அந்நகராட்சிக்கு அந்தத் தொகையைக் கடனாக

[திரு. வி. தம்புசாமி] [1990 மார்ச் 30

வழங்கி அந்நகராட்சியினுடைய குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்க்க வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள் கிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : பேரவைத் தலைவர் அவர்களே, இது குறித்து ஒவ்வொரு மாவட் டத்தினுடைய சட்டமன்ற உறுப்பினர்களையும் கலந்து பேசி முடிவு எடுக்க இருக்கிறோம். அதற்கான தேதி கூட நிர்ண யிக்கப்பட்டு இருக்கிறது. எனவே அங்கு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தனது கருத்துக்களைத் தெரிவித்தால் அது குறித்து ஆலோசித்து முடிவுகளை எடுக்க முடியும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

4. அறிக்கை அளித்தல்.

பொது நிறுவனங்கள் குழு.

திரு. சா. சிவசுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொது நிறுவனங்கள் குழுவின் சார்பாக குழுவின் 41-வது அறிக்கையைப் பேரவைக்கு அளிக்கின்றேன்.

5. அறிவிப்புகள்.

(அ) கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள், 1989-90—மொழிதல் (ஆ.இ.)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 1989–90 ஆம் ஆண்டின் கூடுதல் மானியங்களுக்கான கோரிக்கைகள் பேரவையில் மொழிவது குறித்து ஆளுநர் அவர் களிடமிருந்து கீழ்க்கண்ட செய்தி வரப்பெற்றுள்ளது.

" In pursuance of Art. 205 Clause 2 read with Article 203 clause 3 of the Constitution of India, I, P.C. Alexander, Governor of Tamil Nadu hereby give my recommendation to the moving in the Tamil Nadu Legislative Assembly of the Demand for Further Grants for the year 1989–90.''

6. இறுதி துணை நிதிநிலை அறிக்கை, 1989-90—பொது விவாதம் மற்றும் கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள், 1989-90 —பொது விவாதமும் வாக்கெடுப்பும்.

திரு. எல். கணேசன் : முதலமைச்சரின் ஆட்சி மன்றச் செயலாளர் :மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:



1990 மார்ச் 30] [திரு எல். கணேசன்]

''1989–90 ஆம் ஆண்டின் கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள் அடங்கிய, 28–3–1990 தேதியிடப் பெற்ற அறிவிப்பில் குறிப்பிடப் பெற்றுள்ள துணை மானியக் கோரிக் கைகள் ஒவ்வொன்றுக்கும் எதிரே குறிப்பிடப்பெற்றுள்ள தொகைகளுக்கு மேற்படாத தொகைகள் 1989–90 ஆம் ஆண்டிற்கான கூடுதல் செலவிற்காக அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்.''

திரு. கோ. வீரையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு கடன் நிவாரணப்படி வழங்க வேண்டிய அவசியம் குறித்து விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழி கிறேன்:

''1989–90 ஆம் ஆண்டிற்கான இறுதித் துணை நிதிநிலை அறிக்கை மானியக் கோரிக்கை எண் 41-ல் இயற்கைச் சீற்றம் குறித்த துயர் தணிப்பு என்பதற்கான ரூ. 4,19,76,000 ஒதுக் கத்தில் ரூபாய் 1 குறைக்க வேண்டும்.''

11-00 மணி

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு முதலமைச் சரின் ஆட்சிமன்றச் செயலாளரின் தீர்மானமும், வெட்டுத் தீர்மானமும் பேரவைமுன் விவாதத்திற்கு வைக்கப்பட்டுள்ளன. பேரவையின் விதிகளின்படி, இன்று விவாதமும் பதிலுரையும் ஒரு மணிக்குள் முடிந்து, வாக்கெடுப்பு எடுத்துக் கொள்ளப் படவேண்டும். இது தவிர, ஒரு சட்டமுன்வடிவும் நிறைவேற்றப் படவேண்டும். எனவே, விவாதத்தில் கலந்து கொள்ளும் உறுப்பினர்கள், சுருக்கமாகப் பேச வேண்டுகிறேன்.

திரு. எஸ். ஆர். சிவலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வெண்தாடி வேந்தர் தந்தைப் பெரி யாரின் வழியிலே, பேரறிஞர் அண்ணா அவர்களின் கொள்கை களைச் செயலாற்றிக் கொண்டிருக்கும், தமிழின் ஊனாக உயிராக வாழ்ந்து வரும் எங்கள் ஒப்பற்ற தலைவர் டாக்டர் கலைஞர் அவர்கள், ''தமிழைப் பழித்தவனை தாய் தடுத்தாலும் விடேன்'' என்ற வரியின் வடிவமாக, தமிழாக வாழ்ந்து கொண் டிருக்கிற எங்கள் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்கள் கொண்டு வந்திருக்கின்ற இறுதி துணை மதிப்பீடுகளை வரவேற்று சில கருத்துக்களை இந்த மாமன்றத்திலே வைக்கிறேன்.

[திரு. எஸ். ஆர். சிவலிங்கம்] [1990 மார்ச் 30

மங்கலத்திலும், காட்டுவேப்பிலைப்பட்டியிலும் நீர்த்தேக்கங்கள் உருவாக்கி விவசாயிகளின் குறையைப் போக்கித் தருமாறு மிகுந்த அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, அயோத்தியாபட்டிணம் விவசாயிகளின் குறை களைப் போக்குவதற்காக அங்கே உற்பத்தியாகும் தக்காளிக் காக தக்காளி ஜாம் பேக்டரி ஒன்றை ஏற்படுத்தித் தர வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, சேலம் மாவட்டத்திலே மரவள்ளிக் கிழங்கு அதிகமாக பயிராக்கப்படுகிறது. கிழங்கு அறவை மில் முதலாளிகள் அந்தச் சிறு விவசாயிகளிடத்திலே குறைந்த விலைக்கு வாங்கி அவர்கள் நிறைந்த இலாபம் அடைகிறார்கள். அதை நீக்குவதற்காக மாண்புமிகு முதல்வரவர்கள் சேலத்தின் மீது கருணை உள்ளத்தோடு அங்கு கூட்டுறவு சேக்கோ மில் நிறுவுவதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று இந்த நேரத்திலே மிகுந்த பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

1989–90 ஆம் ஆண்டுக்கு தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக் கழகத்திற்கு ரூபாய் 1.25 கோடி ஒதுக்கப் பட்டுள்ளதை வரவேற்கிறேன்.

சேலம் மாவட்டத்தில் ஏழை விவசாயிகள் ஏதாவதொரு கால்நடைப் பராமரிப்புப் பணியில் தங்களை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டு வாழ்ந்து வருகிறார்கள். உதாரணத் திற்காகச் சொல்ல வேண்டும் என்றால், மேச்சேரி செம்மறி ஆடுகள், கோழிப் பண்ணைகள், முயல் பண்ணை கள், கறவை மாடுகள் தமிழகத்திலே அதிகம் உள்ள இடம் எங்களது சேலம் மாவட்டம். எங்கள் சேலம் மாவட்ட மக்களின் பொதுநலன் கருதி புதிதாக உருவாகிக் கொண்டிருக்கும் நாமக்கல் கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலைய வளாகத்திற்குள்ளேயே இந்தியாவின் முதல் கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக் கழகத்தை— தலைமையிடத்தை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென்று மாண்புமிகு தமிழக முதல்வரவர் களையும் மாண்புமிகு கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச் சரவர்களையும் கேட்டுக்கொள்கிறேன். இந்தக் கருத்தை வலி யுறுத்துவதன் நோக்கம், ஒரு கல்லூரி அமைய நிலங்கள் கையகப்படுத்தி கட்டிடங்கள் கட்ட தொடக்க நிலையில் இருக்கும் பொழுது அதே வளாகத்திற்குள் கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக் கழகத்தின் தலைமையிடம் ஏற்படத் திட்டங்கள் வகுப்பது எளிது. மேலும் இதன் மூலம் எங்கள் சேலம் மாவட் டத்திற்கு ஓர் பல்கலைக் கழகம் இல்லையே என்ற குறையை மாண்புமிகு தமிழக முதல்வரவர்கள் போக்கி, கோவை



1990 மார்ச் 30] [திரு. எஸ். ஆர். சிவலிங்கம்]

வேளாண்மைப் பல்கலைக் கழகமும், வேளாண்மைக் கல்லூரியும் இணைந்து சிறந்த சேவை செய்வதைப்போன்ற நிலையைச் சேலம் மாவட்டத்திற்கு ஏற்படுத்தித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல வாணியம்பாடி, ஆம்பூர், பேரணாம்பட்டு, இராணிப்பேட்டை, திண்டுக்கல், திருச்சிராப்பள்ளி ஆகிய இடங் களிலுள்ள தோல் பதனிடும் தொழிற்சாலைகளின் கழிவுகளைச் சுத்திகரிப்பதற்காகத் தமிழ்நாடு தோல் பொருள் வளர்ச்சிக் கழகத்திற்கு அரசு ரூபாய் 3.69 கோடி அனுமதித்துள்ளது. தொழில் மற்றும் வணிக இயக்ககத்தின் மூலம் வட்டியில்லா விற்பனை வரிச்சலுகை திட்டத்தை செயல்படுத்துவதற்காக கூடுதலாக ரூபாய் 2 கோடி கோரப்பட்டுள்ளது. அதை நான் வரவேற்கின்றேன்.

11-10 மணி

அதேபோல, எங்களது சேலம் மாவட்டத்தில் மரவள்ளிக் கிழங்கு அறவை மில் போன்ற? சாயப்பட்டறை போன்ற கழிவு நீரையெல்லாம் வெளியேற்றுகின்ற அந்த நேரத்திலே பல ஆண்டுக் காலமாக அவைகளைக் கேட்பாரற்றுக் கிடக்கிறது. அதையும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கருணையுள்ளத் தோடு பரிசீலித்து, அவைகளையும் சுத்திகரிப்பதற்கு தனிக் கவனம் செலுத்த வேண்டுமென்று பணிவோடு கேட்டுக் கொள்கிறேன். பல்வேறு கோரிக்கைகள் கீழ் தேவைப்படுகிற கூடுதல் நிதி ஒதுக்கீடு மதிப்பீடுகளை, இறுதித் துணை நிலை மதிப்பீடுகளை வரவேற்று, அளித்த வாய்ப்பிற்கு நன்றி கூறி, அமர்கிறேன்.

*திரு. ஆலவயல் சுப்பையா : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1989-90 ஆம் ஆண்டிற்கு உரிய இறுதித் துணை நிதிநிலை அறிக்கை மற்றும் துணை மானியக் கோரிக்கை களை வரவேற்று பேசுகின்ற நல்ல வாய்ப்பினைத் தந்த தமிழ கத்தின் தளநாயகன், தமிழக முதல்வர், தலைவர் கலைஞர் அவர்களுக்கு திருமயம் தொகுதி மக்களின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

வளர்ந்து வரும் தமிழகத்தின் முன்னேற்றத்திற்காக துணை நிதிநிலை மானியக் கோரிக்கைகள் உருவது நாட்டின் வளர்ச் சிக்கு மிகவும் இன்றியமையாதது, பாராட்டத்தக்கது. தமிழக முதல்வர் தலைவர் கலைஞர் அவர்கள் பல்வேறு மக்கள் நலத் திட்டங்களைத் தமிழகத்திற்கு தந்ததை தமிழக மக்கள் மறந்து

விடவில்லை. இதில், ஏழை எளியோர் பயன்பெறும் நலத் திட்டங்கள் அதிகம் இருந்ததை இந்த அவையோர் நன்கு அறிவர்.

அரசு ஊழியர்கள் மிக ஆவலுடன் எதிர்பார்த்து இருந்த அகவிலைப்படியினை அதிகமாக வாரி வழங்கியும், நீண்ட பல ஆண்டுகளாக மத்திய அரசு ஊழியர்களுக்கு இணையான சம்பளம் கிடைக்க வேண்டுமென்ற ஏக்கம் கொண்ட அரசு ஊழியர் மீது பற்றும் பாசமும் கொண்ட தமிழக முதல்வர் தலைவர் கலைஞர் அவர்கள் மத்திய அரசு ஊழியர்களுக்கு இணையான சம்பளத் தினை, வேறு எந்த அரசும் வழங்காத, வழங்க முடியாத மாபெரும் சாதனைப் பட்டியலை அறிவித்து, அரசு ஊழியர்களின் நிலை யான நல்லெண்ணத்தினை பெற்ற தமிழக அரசினை அரசு ஊழியர்களுடன் இணைந்து வாழ்த்துகிறேன்.

''பாலைவனம் சோலைவனம் ஆக வேண்டும்
பசுங்கிளிகள் அங்கிருந்து பாட வேண்டும்.''

என்ற தமிழ் அறிஞரின் கூற்றுக்கு இணங்க தமிழகம் பசுமைப் புரட்சி அடைந்திட வேண்டும் என்ற நல்லெண்ணத்தோடு, முயற் சிகள் பல மேற்கொண்டு விவசாயத்தைப் பெருக்குவதற்கு சிறப்பு உணவு உற்பத்தித் திட்டத்தின் மூலமாக புதுக்கோட்டை மாவட்டத்தில் ஏழை எளிய விவசாயிகளுக்கு இலவச விதை, உரம், பூச்சிக்கொல்லி மருந்துகள் வழங்கியதோடு விவசாயிகள் இந்நாட்டின் முதுகெலும்பு என்று வர்ணிக்கப்பட்டாலும், உற் பத்திக்கு ஆகும் செலவினை ஈடுகட்டும் பொருட்டு விவசாயிகள் நலன்கருதி இந்த அரசு குவிண்டால் ஒன்றுக்கு 35 ரூபாய் நெல் விலையினை உயர்த்தி விவசாயிகளின் நல் இதயத்தில் இடம் பெற்று விளங்குகிறது.

புதுக்கோட்டை மாவட்ட விவசாயிகள் பயன் பெறும் வகை யில் காவிரியின் உபரி நீரை புதுக்கோட்டை மாவட்டத்திற்கு பாசனத்திற்கு கொண்டு வர வேண்டுமென்று மாண்புமிகு முதல்வர் அவர்களை கேட்டுக் கொள்கிறேன்.

கைத்தறி வளர்ச்சியில் அக்கறை கொண்ட கழக அரசு தள்ளு படித் தொகையினை நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு முழுமையாக வழங்கி நெசவாளர் வாழ்வில் வசந்தம் வீசச் செய்த தனை நெஞ்சாரப் பாராட்டுகிறேன். எனது தொகுதியில் பொன்னமராவதியில் மட்டும் ஏறத்தாழ 3,000 கைத்தறி நெச வாளர்கள் வாழ்கிறார்கள். அவர்களுக்கு வீட்டு வசதி மற்ற சலுகைகள் கிடைக்க உதவிட வேண்டுமென்று மாண்புமிகு முத லமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.



ஆள் பாதி, ஆடை பாதி என்றும், ஆடை இல்லா மனிதன் அரை மனிதன் என்றும் சொல்லப்படுவதனை அறிந்த தமிழக முதல்வர் தலைவர் கலைஞர் அவர்கள், ஏழை எளிய மக்களுக்கு இலவச கைத்தறி சேலை, வேட்டிகளை வழங்கி அவர்களின் இதயங்களில் நீங்கா இடம் பெற்றதினை இந்நாட்டு மக்கள் நன்கு அறிவர்.

'ஆலைகள் அமைப்போம், தொழிற்சாலைகள் அமைப்போம்' என்ற கவி வரிகளை நன்கு அறிந்த தமிழக முதல்வர் அவர்கள், தமிழ்நாடு தோல் பதனிடும் தொழிலுக்கு பல்வேறு சலுகை களைச் செய்து, தோல் பதனிடும் தொழிலாளர் மத்தியில் நல்லெண்ணத்தினைப் பெற்றுள்ளார்.

தெலுங்கு—கங்கைத் திட்டத்தின் மூலமாக சென்னை நக ருக்கு குடிநீர் தேவையினை பூர்த்தி செய்து, நிலையான உத்தர வாதத்தினை தந்து, நகர மக்களின் நல்லெண்ணத்தினை இந்த அரசு பெற்றுள்ளது. புதுக்கோட்டை நகருக்கு சிறப்பு குடிநீர் வழங்கல் திட்டத்தில் இடமளித்து புதுக்கோட்டை நகரத் தண் ணீர் பிரச்சினையைத் தீர்க்கும் தமிழக முதல்வர் அவர்களுக்கு நன்றி கூறிக் கொள்கிறேன்.

புயல், வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பல்வேறு மாவட்ட மக்களுக்கு வெள்ள நிவாரணப் பணிகளை இந்த அரசு முறையாக செய்ததை இந்த நாட்டு மக்கள் நன்கு அறிவார்கள். வீடு இல்லாத ஏழை எளியோருக்கும், அரசு ஊழியர்களுக்கும் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின் மூலமாக வீடு கட்டும் திட்டத்தினை துவங்கி, பல்வேறு சலுகைகளை அளித்து வரும் தமிழக அரசினை பாராட்டி வரவேற்கிறேன். அதோடு, திருமயம் தொகுதியில் வீடு இல்லாத ஏழைகள் அதிகமாக இருக்கிறார்கள் என்பதையும் தெரிவிக்க விரும்புகிறேன். அவர்களுக்கு வீடுகள் கிடைக்க தமிழக முதல்வர் அவர்கள் உதவிட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

'குற்றம் புரிந்தவன் வாழ்க்கையில் நிம்மதி அடைவதெங்கே' என்ற வரியின் அடிப்படையில் தமிழக முதலமைச்சர் அவர்கள் சிறைக் கைதிகளுக்கு சிறப்பு மருத்துவ வசதியினை மனிதாபி மானத்தோடு வழங்கி இருக்கிறார்கள்.

இத்தனை பல நலத்திட்டங்களை செய்த தமிழக முதல்வர், எனது தலைவர், டாக்டர் கலைஞர் அவர்களை இத்தருணத்தில் வேண்டிக்கொள்வது, எனது திருமயம் தொகுதியில் கடந்த பல ஆண்டுகளாக மூடிக்கிடக்கும் லெட்சுமி சண்முகா நூற் பாலையினை திறந்து, வாடிக் கிடக்கும் தொழிலாளர் நலம்

பேணவும், பொன்னமராவதியை தலைமையிடமாகக் கொண்டு தனி தாலுகா ஆக்கித் தரவும், பொன்னமராவதியில் பிற்பட்டோர் மாணவர் மற்றும் மாணவிகள் இல்லமும், அரிமளத்தில் மாணவியர் இல்லம் திறந்திடவும், அரிமளத்தில் தைல மரக் காடுகள் அதிகமாக உள்ளதால், அப்பகுதியிலேயே தைல எண்ணெய் தயாரிக்கும் தொழிற்சாலை மற்றும் மரக்கூழிலிருந்து காகிதம் தயாரிக்கும் தொழிற்சாலை அமைத்துத் தருவதோடு திருமயத்தில் பேருந்து நிலையத்தினை விரிவுபடுத்தித் தரவேண்டும் எனக் கேட்டு, தொடர்ந்து மக்கள் நலத் திட்டங்களை செயலாற்றிவரும் தமிழக முதல்வர், டாக்டர் கலைஞர் அவர்களுக்கும், கழக அரசிற்கும் எனது இதயபூர்வமான நன்றியினைத் தெரிவித்து அமர்கிறேன், வணக்கம்.

11—15 மணி

திரு. எஸ். ஏ. தங்கராஜன் ; மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1989—90 ஆம் ஆண்டு துணை மானியக் கோரிக்கையின் மீது மார்க்சிஸ்ட் கட்சியின் சார்பில் சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். கூடுதலான செலவுத் தொகை கிட்டத்தட்ட 1,000 கோடி ரூபாய்க்கு இங்கே அனுமதி கோரப்பட்டு இருக்கிறது. அதற்கு சபை அனுமதி அளிக்க வேண்டும் என்று நான் கூறுவதோடு இந்தச் செலவு குறித்து சில கருத்துக்களைக் கூற நான் விரும்புகிறேன்.

குறிப்பாக பொது விநியோக முறையில், ஏழை எளியவர்களுக்கு இலவச அரிசி வழங்கப்படுவதாக அரசு அறிவித்து ஒரு கணிசமான அளவுக்கு செலவைச் செய்ய முனைந்திருக்கிறது. அதே நேரத்தில், அதே ஏழை எளிய மக்களுக்கு, பெரும்பான்மையான மக்களுக்கு, அரிசியின் விலையை உயர்த்தி இருக்கிறது என்பதை அரசின் கவனத்திற்கு நான் கொண்டு வர விரும்புகிறேன். ஒரு நல்ல பணியை, நாட்டுப் பணியைச் செய்கின்றபோது, அதே மக்களின் மீது ஏற்படும்படியான இந்த துயரத்தையும் தமிழக அரசு மறு பரிசீலனை செய்யவேண்டும். இந்த இலவச அரிசி வழங்கப்படுவதன்மூலம் பெரிய இழப்பு அரசுக்கு ஏற்படுகிறது, அந்த இழப்பை ஈடுகட்டுவதற்கு அரிசி விலையை உயர்த்துவது என்பது பெரும்பான்மையான மக்களின் மீது இந்தச் சுமையை சுமத்துவதாகும். எனவே அரிசியின் விலையைக் குறைப்பதற்கு, இலவச அரிசி வழங்குவதை அரசு மறு பரிசீலனை செய்ய வேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்தில் நான் கேட்டுக்கொள்கிறேன்.





நியாயவிலைக் கடைகள், நியாயவிலைக் கடைகளாக நடத்துவதற்கு அரசு முன்வரவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். எத்தனை ஆண்டுக்காலத்திற்கு இந்த நியாயவிலைக் கடைகளின் மூலம் நாட்டு மக்களுக்கு இழைக்கப்படுகின்ற வேதனை, துன்ப துயரத்தை நாம் சகித்துக்கொள்வது? எத்தனை மணி நேரம் இந்த நியாய விலைக் கடைகளின் முன்னால், மக்கள் நின்று கொண்டிருப்பது? வரிசையாக நிற்பது என்பது கொடுமையிலும் கொடுமையானது. தமிழக அரசின் உணவுத் துறை அமைச்சர் அவர்கள் நியாயவிலைக் கடைகளில் இருக்கும்படியான கார்டுகளின் எண்ணிக்கையை குறைப்பதற்கு இரண்டு, மூன்று அறிவிப்புகளைத் தந்திருக்கிறார்கள். ஒரு கடைக்கு 500 கார்டுகள் என்றார்கள். பின்னர் 800 கார்டுகள் என்றார்கள். இந்த இரண்டு அறிவிப்புகளும் அமுல்படுத்தப்படாத நிலைமைதான் நீடித்துக் கொண்டு இருக்கிறது. எனவே நான் இந்த அவையிலே வற்புறுத்திக் கேட்டுக்கொள்கிறேன், கடைசியாக நீங்கள் அறிவித்த இந்த 800 கார்டுகளுக்கு ஒரு கடை என்பதை நீங்கள் உறுதிப்படுத்தி, உத்தரவாதப்படுத்தி, உடனடியாக நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

கார்டு இல்லாத மக்களுக்கு புதிய ஆய்வு நடத்தி, புதிய நியாயவிலைக் கடைகளின் மூலமாக கார்டுகள் வழங்குவதாகக் கூறினார்கள். அந்த ஆய்வு அரையும் குறையுமாக நிற்கிறது. அதை முழுமைப்படுத்தி கார்டுகளை வழங்கவேண்டும். கார்டுகளை அதிகமாக வழங்கவேண்டும் என்ற நோக்கத்திற்காக நான் இதைக் கூறவில்லை. போலியான கார்டுகள் ஏராளமாக இருக்கின்றன. எனது சொந்த அனுபவத்திலிருந்து நான் சொல்வேன். திண்டுக்கல் மாவட்ட ஆட்சித் தலைவருக்கு எழுத்து பூர்வமாக நான் புகார் கொடுத்து, எடுக்கப்பட்ட நடவடிக்கையின் மூலம் போலியான கார்டுகள் ஒரு வார்டில் மட்டும் 600 கார்டுகள் கைப்பற்றப்பட்டன. கடந்த கால ஆட்சி முறையின் கொடுமையினாலும், தவறான மக்கள் விரோதக் கொள்கையின் காரணமாகவும், இந்த நியாய விலைக் கடைகளில் நடக்கும்படியான அநீதி தொடர்ந்து நீடிக்கிறது.

கடத்தல், நிறுத்தல் அளவு குறைவு என்பது தொடர்ந்து நீடித்துக் கொண்டு இருக்கிறது. இந்த அவையில் நான் ஏற்கனவே இதைப் பற்றி வற்புறுத்தியிருக்கிறேன். இந்த நிறுத்தல் அளவில் ஏற்படுகின்ற குறையைத் தீர்ப்பதற்கு, நீதி போதித்தால் மட்டும் போதாது, நடைமுறைக் கொள்கையை அனுசரிப்பதன் மூலமாகத்தான், இந்த நிறுத்தல் அளவில் ஏற்படுகிற குறைவைப் போக்க முடியும். ஆகவே பிளாஸ்டிக் பைகளில் நியாய விலைக் கடைகளில் உணவுப் பொருட்களை வழங்கவேண்டும் என்பதை நான் வற்புறுத்திக் கேட்டுக்கொள்கிறேன். அமைச்சர் அவர்கள்

ஒருசமயம் பதில் சொல்கின்றபோது, பிளாஸ்டிக் பைகளில்
பொருட்கள் வழங்கப்பட்டால், அடைக்கப்பட்ட பொருட்கள்
வழங்கப்பட்டால், சிறிது விலை கூடாதா என்று கூறினார்கள்.
நான் உணர்கிறேன். 25 பைசா அல்லது 30 பைசா கூடலாம்.
ஆனால் நிறுத்தல் அளவு குறைவதன் மூலமாக ரூ. 2, ரூ. 3
என்ற அளவில் குறைந்து போவதற்கு பதிலாக இந்த பிளாஸ்டிக்
பையில் கொடுப்பதானால் பாதகம் இருக்காது. நிவாரணம்
இருக்கும் என்பதை நான் நினைவு படுத்த விரும்புகிறேன்.

11-20 மணி

மேலும் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். கேரள மாநிலத்
தில் இருக்கும்படியான நியாய விலைக் கடைகளில் மக்களுக்குத்
தேவையான அனைத்துப் பொருட்களையும் அரசே கொள்
முதல் செய்து குறைந்த விலையில் விநியோகம் செய்வதனால்
வருமானம் கூடுகின்றது. அதனால் நியாய விலைக் கடைகளில்
பணிபுரியும் ஊழியர்களின் ஊதிய விகிதமும் கூடுகின்றது.
மக்களுக்குக் குறைந்த விலையில் நல்ல பொருட்கள் கிடைக்க
ஏதுவாக இருக்கின்றது. எனவே தமிழகத்திலுள்ள கழக அரசு
இதை ஆய்வு செய்து தமிழகத்தில் இருக்கும்படியான நியாய
விலைக் கடைகளிலும்கூட மாநில அரசே இத்தகைய அன்றாட
மக்களின் தேவையான பொருட்களை கொள்முதல் செய்து
குறைந்த விலையில் விநியோகிப்பதற்கு முன்வரவேண்டுமென்
பதை நான் வற்புறுத்தி கேட்டுக் கொள்கிறேன்.

மேலும் ஒன்றை நான் இங்கே சொல்ல விரும்புகிறேன். வரு
வாய்த் துறையில் பணிபுரியும் அரசு ஊழியர்கள் வேலை
நிறுத்தம் நீடித்துக் கொண்டே இருக்கிறது. அவையில் மாண்பு
மிகு அமைச்சர் அவர்கள் கூறுகின்றபோது, பேச்சுவார்த்தை
யின் கதவு திறந்து இருக்கிறது, பேசுவதற்கு நான் தயாராக
இருக்கிறேன் என்று கூறினார். நான் இந்த அவைக்குச் சொல்
வேன். கதவு திறந்து இருக்கின்றது என்பது உண்மைதான்.
திறக்கப்பட்ட கதவின் முன்னால் அரசு ஊழியர்கள் உட்கார்ந்து
பேட்டி காண்பதற்கு, பேச்சு வார்த்தை நடத்துவதற்கு காத்துக்
கிடக்கின்றார்கள் என்பதும் உண்மைதான். எனவே நான்
இங்கே வற்புறுத்துவது, அரசு திறந்து வைத்த கதவின் முன்னால்
பேச்சு வார்த்தை நடத்த, அரசே ஏற்றுக் கொள்ளக் கூடிய
கோரிக்கைகளை ஏற்றுக் கொண்டு பிரச்சினையை பேச்சு
வார்த்தையின் மூலம் தீர்வு காண்பதற்கு போராடுகின்ற,
வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டிருக்கின்ற ஊழியர்கள் தயாராக
இருக்கின்ற நிலையில், அரசு முன் முயற்சி எடுத்து தீர்வு காண
வேண்டுமென்று கேட்டுக் கொண்டு, வேலை நிறுத்தம் செய்கின்ற
ஊழியர்களுக்கு ஆதரவாக மேலும் ஊழியர்கள் வேலை
நிறுத்தத்தில் தினசரி அதிகரித்துக் கொண்டு வருவதையும்
நான் அரசின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.



மேலும் இந்த உப மானியக் கோரிக்கையின்போது, தோல்
பதனிடும் தொழிற்சாலைகளிலிருந்து வெளியேறுகின்ற கழிவு
நீரின் ஆபத்தை உணர்ந்து கழிவு நீர் சுத்திகரிப்பு ஆலையைக்
கட்டுவதற்கு அரசு முன் வந்திருப்பதை நான் வரவேற்பதோடு
200 ஆண்டு காலமாக ஓடிக் கொண்டிருக்கின்ற இந்தக் கழிவு
நீர் சாகுபடி நிலங்களை பாழாக்கி விட்டது. நிலத்தடி நீரைப்
பாழாக்கி விட்டது. இதனால் கோடிக்கணக்கான மக்களின்
வாழ்க்கை பாதித்திருக்கிறது. இதை இந்த அரசு உணர்ந்து
ஆக்கபூர்வமாக எடுத்திருக்கும்படியான நடவடிக்கைகளை
நான் வரவேற்பதோடு சென்னை-செங்கை மாவட்டத்தைப்
பொறுத்தவரையில் இந்த கழிவு நீர் சுத்திகரிப்பு ஆலைகளின்
பட்டியலில் சேர்க்கப்படாமல் இருப்பதை அரசின் கவனத்திற்குக்
கொண்டு வந்து இந்த சென்னை-செங்கை மாவட்டத்தையும்
சேர்த்து இந்த கழிவு நீர் சுத்திகரிப்பு ஆலையை விரைவில்
துரிதப்படுத்தி, அமல் நடத்துவதற்கு முன் வரவேண்டுமென்று
நான் கேட்டுக் கொள்கிறேன். அதே சமயம் சாகுபடி நிலங்
களிலிருந்து சாகுபடியை இழந்திருக்கும் விவசாயிகளுக்கு நிவா
ரணம் அளிக்கக் கூடிய நடவடிக்கைகளையும் அரசே மேற்
கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதே
சந்தர்ப்பத்தில் ஒரு குடிநீர்த் திட்டம் நிறைவேறுகின்றபோது
பாதாள சாக்கடைத் திட்டத்தையும் சேர்த்து நிறைவேற்ற
வேண்டுமென்பது அரசாங்கத்தின் ஒரு ஜனநாயகக் கடமை.
ஒரு நாகரீக அரசு செய்யக் கூடிய கடமை. ஆனால் தமிழ்
மாநிலத்தில் பல்வேறு நகரங்களில் குடிநீர்த் திட்டம் நிறை
வேறிய பிறகும் கூட, பாதாள சாக்கடைத் திட்டம் நிறை
வேற்றப்படாததால் கழிவு நீர் நகரத்திற்குள்ளேயே தேங்கி
நாசக் கேட்டை ஏற்படுத்தி, பொது சுகாதாரத்தை பாதித்திருக்
கிறது.

எனது தொகுதியிலும் கூட, திண்டுக்கல் குடிநீர்த் திட்டம்
நிறைவேற்றப்பட்டது. பாதாள சாக்கடைத் திட்டம் இல்லாத
காரணத்தினால் நகரத்திற்குள்ளேயே பல்வேறு குளங்களாக
தேங்கி, அரண்மனைக் குளம், ஐயன்குளம், பாரக்குளம் என்ற
குளங்களில் தேங்கி துர்நாற்றம் வீசி நகர மக்களுடைய பொது
வாழ்க்கையை நாசமாக்கிக் கொண்டிருக்கிறது. எனவே இந்தக்
குடிநீர்த் திட்டம் நிறைவேறுகிறபோதே பாதாள சாக்கடைத்
திட்டத்தையும் அரசு நிறைவேற்ற வேண்டுமென்பதை இந்தச்
சந்தர்ப்பத்தில் நான் வற்புறுத்திக் கேட்டுக் கொள்கிறேன்.
இந்தக் குடிநீர்ப் பிரச்சினை 43 ஆண்டுகளுக்குப் பின்னாலும்
இந்த நாட்டு மக்களின் வாழ்க்கையில் ஒரு வேதனையாக இருப்
பதை இந்த அவையின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்பு
கிறேன்.

11-25 மணி

தமிழக அரசு எண்ணற்றப் பிரச்சினைகளுக்கு தீர்வு காண் பதற்கு ஆக்கப் பூர்வமான நடவடிக்கைகளை மேற்கொண்டு இருப்பதை வரவேற்கின்ற அதே நேரத்தில் அந்த ஆக்கப் பூர்வமான நடவடிக்கைகளை அமல் நடத்தும்படியான அரசு இயந்திரம், அரசு ஊழியர்கள் அரசு நடவடிக்கைகள் மெத்தன மாக இருந்து கொண்டிருக்கிறது என்பதை எடுத்துக் கூறி மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய சமுதாயப் பார்வை சமுதாயத்தின் சிந்தனை சீரிய நிலையில் இருந்தாலும் கூட, அந்தச் சிந்தனையும் உணர்வும் அந்த அரசு இயந்திரத்திற்கு இருக்கிறதா என்றால் இல்லை. அதை மாற்றாமல் ஆட்சியில் பல சீரிய திட்டங்களை நாம் நிறைவேற்றிக் கொண்டே சென் றால் அந்தக் கொள்கைகளை நிறைவேற்ற வேண்டிய நிர்வாகத் துறை நிறைவேற்றாமல் போகிறது என்பதை இந்தச் சந்தர்ப் பத்திலே எடுத்துக் கூறி, சென்னை நகரத்திற்கு ஏற்பட்டிருக்கும் படியான குடிநீர் தட்டுப்பாடு பிரச்சினை மிகப் பெரும் பிரச் சினையாக ஆகிக் கொண்டிருக்கிறது. தெலுங்கு கங்கை திட்டத்தை நிறைவேற்றுவதற்கு முன்னமே ஒரு முன்னோடி திட்டத்தை அரசு ஆய்வு செய்து இந்த நகரத்தின் குடி தண்ணீர் பிரச்சினைக்கு தீர்வு காண வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

மேலும் ஒன்றைச் சொல்ல நான் விரும்புகிறேன். பல தொழிலாளர் நலச் சட்டங்களை இந்த கழக அரசு நிறைவேற்றி யிருக்கிறது. ஆனால் நிறைவேற்றப்பட்ட சட்டங்கள் கிடைக்க வேண்டிய உழைப்பாளி மக்களுக்கு கிடைக்காத நிலை நீடிக் கிறது. குறிப்பாக கைத்தறி நெசவுத் தொழிலாளர்கள்; பீடி சுருட்டுத் தொழிலாளர்களுக்கு பாதுகாப்புச் சட்டம் இருக்கிறது. குறைந்த பட்சக் கூலி ஊதியச் சட்டம் இருக்கிறது. சட்டம் நிறைவேற்றி பல ஆண்டுகள் ஆனதற்குப் பின்னாலும் அந்தச் சட்டங்களை அந்த தொழில் அதிபர்கள் அமல் நடத்தாத நிலை இருக்கிறது. அதன் காரணமாக லட்சக்கணக்கான உழைப்பாளி மக்கள் சட்ட ரீதியாகவும் சமூக ரீதியாகவும் கிடைக்க வேண்டிய உரிமைகள் கிடைக்கச் செய்யாமல் அந்த தொழில் அதிபர்கள் இன்றைக்கு குறுக்கே நிற்பதை அரசு உணர்ந்தும் அரசுக்கு எடுத்துக் காட்டியும் அதற்கு தீர்வு கொள்ளாமல் இருப்பது, ஒரு அரசு நிறைவேற்றிய ஒரு சட்டம் அமலாக்கப்படவில்லை என்று சொன்னால் ஆட்சியாளர்கள் மீது ஒரு தவறான நோக்கம் மக்களுக்கு ஏற்படுவதற்கு ஏதுவாக இருக்கிறது. எனவே ஆட்சி யாளர்கள், கழக அரசு, மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் இதற்கு ஆக்கப்பூர்வமான நடவடிக்கையை மேற் கொண்டு இந்தக் கைத்தறி மற்றும் பீடி சுருட்டு தொழிலாளர்



களுக்கு, இந்த அவையில் நிறைவேற்றப்பட்ட குறைந்த பட்சக் கூலிச் சட்டத்தையும் தொழிலாளர் நல பாதுகாப்புச் சட்டத்தை யும் நிறைவேற்றுவதற்கு ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைய சிறைச்சாலையின் சீர்திருத்தங்களைப் பற்றி பல்வேறு உறுப்பினர்கள் பேசினார்கள். குறிப்பாக நமது அருமை காங்கிரஸ் கட்சியின் உறுப்பினர்கள் கூறினார்கள். அதிலும் குறிப்பாக நமது மாண்புமிகு உறுப்பினர் பொன்னம்மாள் அவர்கள், ''நான் 5 நாள்தான் இந்தக் கழக அரசின் ஆட்சியில் சிறைச்சாலையில் இருந்தேன். எனது சொந்தக் கட்சியின் சுதந்திரப் போராட்டத்தில் கூட நான் சிறைக்குச்செல்லவில்லை'' என்ற வார்த்தையைப் போட்டார்கள். உள்ளபடியே நானும் வருத்தப்படுகிறேன். எனது குறைந்தபட்ச அரசியல் வாழ்க்கையில் நான் 7 ஆண்டுக் காலம் சிறைக்குச் சென்றிருக்கிறேன். காங்கிரஸ் கட்சியின் ஆட்சிக் காலத்தில் நீண்ட நெடுங்காலம் சிறையில் இருந்திருக்கிறேன். எனது சிறை வாழ்க்கையில் அரிசி சாதம் சாப்பிட்டதே இல்லை. காங் கிரஸ்காரர்கள் ஆட்சி நடத்திய காலத்தில் அதே வெள்ளைக் காரன் காலத்தினுடைய விதிமுறைகளைத்தான் அமல் நடத்தி னார்கள். சோளச் சோறும், கேப்பைக் கூழும்தான் கொடுத் தார்கள். மாண்புமிகு உறுப்பினர் பொன்னம்மாள் அவர்கள் இன்றைக்கு சிறைச்சாலையிலே கழக ஆட்சியின் நிர்வாகத்தின் கீழ் அரிசி சாதத்தை முதல் வகுப்புக் கைதியாக சாப்பிட்டிருக் கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அவர்கள் இப்போது இந்த அவையில் இல்லையே என்று நான் வருத்தப்படுகிறேன். எத்தனையோ மாற்றங்கள் ஏற்பட்டிருக்கின்றன.

மேலும் இந்த அவையில் பெருந்தலைவர் காமராசர் அவர் களின் பெயரைச் சொல்லி பல்வேறு ஆதரவையும் வருத்தங் களையும் தெரிவித்துக் கொண்டார்கள் மாண்புமிகு காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள். நான் கேட்கிறேன், காமராசரின் பெயரை மறைமலை நகருக்கு வைக்க வேண்டும் என்று அவர்கள் வற்புறுத்தியது உள்ளபடியே காங்கிரஸ் கட்சியினுடைய பெருந் தலைவர் காமராசர் அவர்கள் மீது இருக்கிற நல்ல எண்ணத் தாலா என்று நான் கேட்க ஆசைப்படுகிறேன். அவர் இறக் கின்ற கடைசி நேரத்தில் 4 அணா காங்கிரஸ் கட்சி உறுப்பினர் பதவியில் கூட நான் வைத்துக் கொள்ள மாட்டேன் என்று அன்றைய பாரதப் பிரதமர் இந்திரா காந்தி அவர்கள் காங்கிரஸ் கட்சியின் தலைவராக இருந்தபோது, பெருந்தலைவர் காம ராசர் அவர்களை காங்கிரஸ் கட்சியிலிருந்து வெளியேற்றினார் கள். பெருந்தலைவர் காமராசர் அவர்கள் மரணப் படுக்கையில் இருந்தபோது டெல்லியிலே இருந்த பாரதப் பிரதமர்

[திரு. எஸ். ஏ. தங்கராஜன்] [1990 மார்ச் 30

பறந்து வந்து காமராசர் அவர்களைப் பார்த்தார்களா ?
அல்லது அவர்கள் மறைந்து அவரது இறுதி ஊர்வலம் சென்ற
போது வந்து பார்த்தார்களா ? அல்லது அகில இந்திய
காங்கிரஸ் கட்சியின் தலைவராக இருந்த பெருந்தலைவர்
காமராசர் மறைந்து விட்ட பிறகு இந்திய நாடு முழுவதும்
அவர்களுக்கு மரியாதை தெரிவிக்கின்ற முறையில் ஒருநாள்
விடுமுறை அளித்து துக்கம் அனுஷ்டித்தார்களா ?

11-30 மணி

டாருக்கெல்லாம் நீங்கள் செய்தீர்கள் ? நான் தவறு என்று
.சொல்லவில்லை. அந்த மனித நேயம், பெருந்தலைவர் காமராசலர
பொருத்தவரையில்இல்லாமல்போனதுஏன்(மணியடிக்கப்பெற்றது)
அதைச் செய்யாது, நீங்கள் இன்று காமராஜரின் மீது அனுதாபம்
காட்டுவது அபத்தமானது. அரசியல் நோக்கத்திற்கானது.
நீங்கள் ரெயில்வே நிலையத்தினுடைய டிக்கெட்டுக்கு பெயர்
வைக்கவேண்டுமென்று கூறினீர்கள். தமிழக சட்டமன்றத்தி
னுடைய முதலமைச்சர் அவர்கள், ''நீங்கள் தமிழகம் முழுவதும்
காமராஜர் பெயர் அறிய வேண்டுமென்று சொன்னீர்கள் ; நான்
உலகம் முழுவதும் காமராஜர் பெயரை அறிமுகப்படுத்துவதற்கு,
விமான நிலையத்திற்கே பெயர் வைக்கிறேன் '' என்று கூறி
னார்கள். அதற்குப் பிறகும் நீங்கள் மறியல் செய்வது என்பது
உங்கள் அரசியல் நலனே தவிர, நாட்டு நலனோ, தேசபக்தி
நலனோ இல்லை என்பதைக் கூறி என் உரையை முடித்துக்
.கொள்கிறேன்.

திரு. தூ. ச. சுப்பிரமணியம் : மாண்புமிகு பேரவைத்
துணைத் தலைவர் அவர்களே, 1989-90 ஆம் ஆண்டிற்கான
இறுதி துணை மதிப்பீடுகள் பேரில், பேச சந்தர்ப்பம் அளித்த
சட்டப்பேரவைத் தலைவருக்கு முதலிலேயே நன்றி கூறி,
தமிழினத்தைக் காக்கவும், தமிழ் மொழியைக் காக்கவும்,
தந்தைப் பெரியார் வழியிலே, அறிஞர் அண்ணா வழியிலே,
துணை மானியக் கோரிக்கையில் ஏழை எளிய மக்களுக்கு, பாட்
டாளி மக்களுக்கு, நடுத்தர மக்களுக்கு, விவசாயிகளுக்கு,
விவசாயத் தொழிலாளர்களுக்கு என்று பல்வகையான நல்வாழ்வுத்
திட்டங்களை அறிவித்திருக்கின்ற தானைத் தலைவர், தமிழக
முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களை என் நெஞ்சார வாழ்த்தி
வரவேற்கிறேன். உண்ண உணவு அளித்து, உடுக்க உடை அளித்து
ஊட்டச்சத்துக்கு முட்டையும், வைட்டமின் மாத்திரைகளும்
அளித்த, ஏழை எளிய மக்கள் பள்ளிச் செல்ல பஸ் பாஸையும்
அளித்த தமிழக முதல்வர் அவர்களை நெஞ்சார இந்த நேரத்திலே
கிராமப்புற மக்களின் சார்பாக—என் தொகுதி மக்களின் சார்



1990 மார்ச் 30] [திரு. தூ. க. சுப்பிரமணியம்]

பாகப் பாராட்டுகிறேன். அதைப்போல, எந்த விதத்திலே கல்வி
கற்பது என்று கிராம மக்கள் எல்லாம் துடித்துக் கொண்டிருக்கிற
நேரத்தில் இந்த பஸ் பாஸ் என்பது ஒரு சிறந்த வரப்பிரசாதம்
ஆகும்.

ஏழை எளிய மக்கள் காலிலே செருப்பு இல்லாமல் நடந்து
சென்று, தொலை தூரங்களுக்கு—5, 6 கிலோ மீட்டர் தூரத்
திற்கு நடந்து சென்று, பள்ளிகளிலே கல்வி கற்க வேண்டிய
நிலை இருந்து வந்தது. அவர்களையும் நடந்து செல்லாமல் பஸ்
களிலே சென்று கல்வியைக் கற்க வசதி ஏற்படுத்தித் தந்த தமிழக
முதல்வர் அவர்களை நெஞ்சாரப் பாராட்டுகிறேன். ஏழை எளிய
மக்களின் குடும்பத் தலைவன் இறந்தால், ரூபாய் 2,000 என்று
இருந்ததை ரூபாய் 3,000 ஆக மாற்றி கிராமங்களிலே வாழ வழி
இன்றி, ஒரு குடும்பத் தலைவர் இறந்து விட்டால், துடித்துக்
கொண்டிருந்த அவர்களின் கண்ணீரைத் துடைத்த, தமிழக
முதல்வர் அவர்களுக்கு நெஞ்சார பாராட்டுத் தெரிவித்துக்கொள்
கிறேன். இலவச வேட்டி, சேலை வழங்கி வேட்டி, சேலை
இல்லாமல் கந்தல் துணிகளைக் கட்டிக் கொண்டிருந்த பல்லாயிரக்
கணக்கான மக்களுக்கு. இலவச வேட்டி, சேலை வழங்கி அவர்
களையும் இந்த நாட்டின் குடிமக்களாக, நல்லவர்களாக வீதி
யிலே நடக்கச் செய்த தானைத் தலைவர் தமிழக முதல்வர்
அவர்களுக்கு நெஞ்சார நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சிறையிலே மருத்துவ வசதி இல்லாமல் கஷ்டப்பட்டுக்கொண்
டிருந்த மக்களுக்கு இந்தத் துணை மானியக் கோரிக்கையிலே,
மறுபடியும் நிதி ஒதுக்கித் தந்த, தானைத் தலைவர் தமிழக
முதல்வர் அவர்களை நெஞ்சாரப் பாராட்டுகிறேன். அரசு
ஊழியர், ஆசிரியர்களுக்கு தேர்வு நிலை, சிறப்பு நிலை சலுகை
களை அளித்திருக்கிறது தமிழக அரசு. விவசாயிகளுக்கு என்று
கொள்முதல் விலையிலே, நெல்லுக்கு ரூபாய் 35 உயர்த்தி, விவ
சாயிகளின் நெஞ்சங்களிலே நீங்காத இடம் பெற்றிருக்கிறார்
டாக்டர் கலைஞர். அதைப் போல, கரும்புக்கு ரூபாய்
50 உயர்த்தி, விவசாயிகளின் நெஞ்சங்களில் நீங்காத நிலை
பெற்றிருக்கிறார். மக்கள் நலப் பணியாளர்கள் என்று கிராமப்
புறங்களிலே ஏறத்தாழ பத்தாயிரம் பேர்களுக்கு வேலை
கொடுத்து, வேலையில்லாத திண்டாட்டத்தைப் போக்கி இருக்
கிறது தமிழக அரசு. ஏழை எளியவர்களுக்கு அடுக்கடுக்கான
நல்வாழ்வுத் திட்டங்களை அள்ளித் தந்த, தானைத் தலைவர்
டாக்டர் கலைஞர் அவர்களையும், தமிழக அரசையும்
நெஞ்சாரப் பாராட்டுகிறேன்.

அதே நேரத்திலே, நெசவாளர் மக்கள் படும் துயரங்கள்
கொஞ்ச நஞ்சம் அல்ல. அவர்கள் கடந்த காலத்திலே,
ஏறத்தாழ திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிக்கு

வருவதற்கு முன்னே—அவர்களுக்கு என்று, தானைத் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்களும், பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்களும், பேராசிரியர் பெருந்தகை அவர்களும், கைத்தறி துணிகளை, தோள்களிலே சுமந்து வீதி வீதியாகச் சுற்றித்திரிந்து விற்றார்கள். அப்படிப்பட்ட தமிழக அரசில் பணியாற்றிக் கொண்டிருக்கிற அமைச்சர் பெருமக்களும், முதலமைச்சர் அவர்களும் இன்று, அவர்களுக்கு என்று அதிக நிதி ஒதுக்கித் தந்திருக்கிறார்கள். இது நெஞ்சார பாராட்டக்கூடிய விஷயம்.

அதைப் போலவே, பொது விநியோக முறையிலே, பல சீர்திருத்தங்கள் செய்து கிராமங்களில் இருக்கின்ற, ஏழை எளிய மக்கள், மலையில் இருக்கின்ற மக்கள் ஆகியோருக்கு, பொது விநியோகம் நல்ல முறையிலே நடைபெற வேண்டுமென்ற எண்ணத்திலே அதற்கு மறுபடியும் நிதி ஒதுக்கித் தந்த தானைத் தலைவர் அவர்களை நெஞ்சாரப் பாராட்டுகிறேன்.

11-35 மணி

வேளாண்மையில் பசுமைப் புரட்சியை ஏற்படுத்தியதோடு, வேளாண்மைப் பல்கலைக் கழகம் ஏற்படுத்திய கலைஞர் அவர்கள் கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக் கழகத்தை ஏற்படுத்தி விவசாய பெருமக்கள் வாழ்வில் ஒளி விளக்காக திகழ்கிறார்.

பெரியார் மாவட்டத்தில் உழவருக்கான பயிற்சி நிலையம் ஒன்று பவானியில் செயல்பட்டுக்கொண்டு வருகிறது. அங்கே அதற்கு கட்டிடம் இல்லாமல் அவதிப்படுகிறார்கள். அதற்காக இந்த நேரத்தில் கட்டிடங்கள் கட்டித் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து எனது தொகுதியைப் பற்றி ஒருசில வார்த்தைகளை இங்கே கூற விரும்புகிறேன். எனது தொகுதியில் ஒரு பகுதி சிறந்த பகுதியாகவும், ஒரு பகுதி காடு, மலை உள்ள வனாந்தரம் நிறைந்த பகுதியாகவும் இருக்கிறது. சத்தியமங்கலம் பகுதியிலும், தாளவாடி மலைப் பகுதியிலும் ஏறத்தாழ காடுகள் அதிகமாக இருக்கின்றன. அங்கே வாழ்கின்ற மக்கள் பின்தங்கிய மக்களாக அதிகமாக வாழ்கிறார்கள். அங்கே எந்தவிதமான வசதியும் இல்லை. தாளவாடிப் பகுதி, சத்தியமங்கலம் பகுதி நேராக தமிழ்நாட்டில் இணைக்கின்ற சாலை வசதி அங்கே இல்லை. குறிப்பாக கர்நாடக மாநிலத்தின் எல்லைக்குச் சென்றுதான் தாளவாடி செல்லவேண்டிய சூழ்நிலை இருக்கிறது. கடந்த காலத்தில் திப்பு சுல்தான் ஆண்டபோது திப்பு சுல்தான் பாதை என்று அங்கே ஒரு பாதை அமைக்கப்பட்டு இருந்தது. அது முன்பு இயங்கிக்கொண்டு இருந்தது. இப்போது அந்தப் பாதை



தடைபட்டு இருக்கிறது. ஆகவே அதை மறுபடியும் செப்பனிட்டு தமிழ்நாட்டுக்கு நேரடியாகச் சென்று வர பாதை வசதி செய்து தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல் கர்நாடக மாநிலத்தை ஒட்டி உள்ள பகுதி சத்தியமங்கலம் தொகுதி. இங்கே உள்ள மக்கள் எல்லாம் ஏறத்தாழ வறுமைக் கோட்டுக்குக் கீழே இருக்கிற மக்கள்தான் அதிகமாக இருக்கிறார்கள். கன்னட மொழி பேசுகின்ற சிறுபான்மை மக்கள் அங்கே இருக்கின்ற காரணத்தால் அவர்கள் வாழ்வு வளம் பெற, அந்தப் பகுதி மக்கள் ஏற்றம் பெற அங்கே சிறப்புத் திட்டம் ஒன்றை உருவாக்கி அந்த மக்களின் நல வாழ்வில் அக்கறைக் கொள்ளவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

கடந்தக் காலத்திலே கன்னடப் பகுதியில் இருந்த சிலர் வந்து அங்கே தகராறு செய்தார்கள். இப்போது அவரே எனது பகுதியை ஒட்டி உள்ள சாம்ராஜ்யம் தொகுதியில் சட்டமன்ற உறுப்பினராக ஆகியிருக்கின்ற காரணத்தால் நீங்கள் தனிக் கவனம் செலுத்தி அந்தப் பகுதி முன்னேற வழிவகை செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். தாளவாடிப் பகுதி ஒட்டாத பகுதியாக இருப்பதால் சத்தியமங்கலம் வந்து போக ஏறத்தாழ 25, 30 ரூபாய் செலவாகின்ற காரணத்தால் அந்த தாளவாடியை தனி தாலுக்காவாக ஆக்கித்தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அதேபோல் அங்கே மின்சார வசதி அதிகமாக இல்லை. கடந்த திராவிட முன்னேற்றக் கழக சர்க்கார் ஆண்டபோதுதான் அந்தப் பகுதியில் மின் கம்பங்கள், கம்பிகள் போடப்பட்டு சிறிய சிறிய ஊர்களுக்கு மின் வசதி செய்து தரப்பட்டது. ஆனால் இது வரை மறுபடியும் அந்த மின் கம்பங்கள், கம்பிகள் மாற்றப்படாமல் அங்கே மின்சாரம் சரியாக செல்லாமல் அங்கே இருக்கின்ற விவசாயிகளும், வியாபாரிகளும் பெரும் தொல்லைக்கு உள்ளாகி இருக்கிறார்கள். உடனடியாக அங்கே துணை மின் நிலையம் அமைத்து தர ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

எனது தொகுதி மலையைச் சேர்ந்த பகுதியாகும். அந்த மலையைச் சார்ந்த பகுதியில் பல காட்டு ஆறுகள் வருகின்றன. கடந்த காலத்தில் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் இருக்கும்போதுதான் அங்கே குண்டேறிப்பள்ளம், பெரும்பள்ளம் நீர்த்தேக்கம் திட்டம் நிறைவேற்றப்பட்டது. இப்போது அங்கே இன்னும் பல நீர்த்தேக்கத் திட்டங்கள் இருக்கின்றன. குறிப்பாக கணக்கம்பாளையத்தில் வேதபாறைத் திட்டம், புதுபெரும் கடலூரில் கோழிப்பள்ளம் திட்டம், சிக்கரேசம்பாளையத்திலே கணவாய்தும் திட்டம் இப்படிப்பட்ட முறையில்

தாளவாடியில் இருந்து போகின்ற ஆறுகள் எல்லாம் வீணாக கர்நாடகத்தில் இருக்கின்ற சிக்கொல்லா டாம்க்கும் சொர்ணாவதி டாம்க்கும் தண்ணீர் செல்கிறது. அதையெல்லாம் ......

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : தயவு செய்து மற்ற உறுப்பினர்கள் அமைதி காக்கவும். ஒரு உறுப்பினர் பேசுகின்றபோது மற்ற உறுப்பினர்கள் நடமாடுவதைத் தயவு செய்து தவிர்க்கவும்.

திரு. தூ. க. சுப்பிரமணியம் : தமிழகத்திலிருந்து செல்கின்ற தண்ணீர் எல்லாம் அங்கே உள்ள சொர்ணாவதி டாம்க்கும், சிக்கொல்லா டாம்க்கும் செல்கிறது. அதை தடுத்து சிறு சிறு அணைகளாகக் கட்டி தாளவாடி....

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒரு உறுப்பினர் பேசும்போது மற்ற மாண்புமிகு உறுப்பினர்கள் நடமாடக்கூடாது என்று ஆணையிடக் கூடாது. மாண்புமிகு உறுப்பினர் பேசுகின்றபோது அவரை இடைமறித்துச் செல்லக்கூடாது அதுதான் நடைமுறையில் இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறிய கருத்தைத்தான் நானும் வலியுறுத்தினேன்.

திரு. தூ. க. சுப்பிரமணியம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அங்கே தண்ணீர் எல்லாம் வீணாகிக்கொண்டு இருக்கிறது. அதை தடுத்து சிறு சிறு அணையாகக் கட்டி பின்தங்கிய பகுதியாக உள்ள தாளவாடியில் இருக்கின்ற மக்கள் எல்லாம் பயன்பெறுகின்ற வகையில் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல் கடம்பூர், குஜ்ஜாலம் மலைப் பகுதியிலே பல மக்கள் வசித்து வருகிறார்கள். அதிலே மலை வேளாளர் என்ற ஒரு பகுதியினர் இருக்கிறார்கள். அவர்கள் உண்மையில் பின்தங்கிய மக்கள். அவர்களை மிகவும் பின்தங்கிய பட்டியலில் சேர்க்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

எனது பகுதியில் கல்லூரி இல்லை. பெரியார் மாவட்டத்தில் அரசாங்க கல்லூரிகள் இல்லை.





11.40 மணி

பெரியார் மாவட்டத்திலே இருக்கின்ற பண்ணாரியையும் பவானி சாகரையும் சுற்றுலாத்தலமாக ஆக்கினால் அங்கே அதிகமான பயணிகள் வந்து செல்ல ஏதுவாக இருக்கும். பன்னாரி தேவஸ்தானத்திலே ஏறத்தாழ 1 கோடி ரூபாய்க்குமேல் பணம் இருக்கிறது. எனது பகுதியிலே கல்லூரி இல்லை. அங்கே இருக்கின்ற மக்களெல்லாம் படிப்பதற்கு கோவைக்கோ ஈரோட்டுக்கோ செல்லவேண்டிய சூழ்நிலை இருக்கிறது. அந்தப் பகுதி மிகவும் பின்தங்கிய பகுதியாக இருக்கின்ற காரணத்தால் அந்தப் பகுதியிலுள்ள மக்கள் படிப்பதற்கு பன்னாரி தேவஸ்தானத்திலே ஏறத்தாழ $1\frac{1}{4}$ கோடி ரூபாய் பணம் இருக்கின்ற காரணத்தால், எப்படி பழனி தேவஸ்தானத்தில் கல்லூரி நடத்துகின்றார்களோ, அதைப்போல பன்னாரி தேவஸ்தானம் மூலம் ஒரு கல்லூரி நடத்துவதற்கு ஏற்பாடு செய்து எங்கள் பகுதி மக்கள் வளம்பெற முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன்.

இப்படி பல்வேறு நல்வாழ்வுத் திட்டங்களை இந்த நாட்டிற்கு அளித்த தமிழினத் தலைவர், தானைத் தலைவர் கலைஞர் அவர்களின் இந்த துணை மானியக் கோரிக்கையை வரவேற்று, இன்னும் ஒரே ஒரு கருத்தை மட்டும் சொல்லி முடித்துக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதி மிகவும் பின்தங்கிய பகுதியாக இருக்கின்ற காரணத்தால் அந்தப் பகுதியிலே இருக்கின்ற அறக்கண் கோட்டை, தடைப்பள்ளை வாய்க்கால் பல்லாண்டுக் காலமாக தூர் எடுக்கப்படாமல் இருக்கிறது. அந்த வாய்க்காலை அந்தியூர் பகுதிக்கும் விஸ்தரித்துத் தரவேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன். அந்தியூர் எம்.எல்.ஏ. அவர்கள் உடனடியாக இதைச் சொல்லவில்லையே என்று நினைக்கின்றார்கள். எனவே அதையும் செய்து தரவேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியிலே சாலை வசதிகள் சரியாக இல்லை. மலைமேலே இருக்கின்ற பகுதிகளிலே எல்லாம் பல ஊர்களுக்குச் சாலை வசதிகள் இல்லை. குன்று என்ற கிராமத்திற்கு சாலை வசதியே கிடையாது. அங்கே உணவுப் பண்டங்களை எடுத்துச் சென்று பொது விநியோகம் செய்ய முடியாத சூழ்நிலை இருக்கிறது. ஆகவே அந்த இடத்திற்கு சாலை வசதியை ஏற்படுத்தித் தர வேண்டும். ஆகவே, பல்வேறு நல்வாழ்வுத் திட்டங்களை, ஏழையெளிய மக்கள், விவசாயத் தொழிலாளர்கள், பாட்டாளி மக்கள், வியாபாரிகள் இன்னும் பல்வேறு

[திரு. தூ. க. சுப்பிரமணியம்] [1990 மார்ச் 30

இனத்தைச் சேர்ந்தவர்களுக்கெல்லாம் பயன்படுகின்ற திட்டங்களை அளித்த தமிழினத் தலைவர், தானைத் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கு எனது நெஞ்சார்ந்த நன்றியைக் கூறி விடை பெறுகிறேன். நன்றி, வணக்கம்.

திரு. கோ. பூவராகன் : மாண்புமிகு சட்டப் பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, துணை மானியக் கோரிக்கையின் மீது என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். குறிப்பாக இந்த நிதி ஒதுக்கியதிலே கிட்டத்தட்ட 815 கோடி ரூபாய்க்கு ஏற்கெனவே ரிசர்வ் வங்கியிலே, சில்லரைச் செலவினங்கள் முன்பணமாக வாங்கிய பணத்தைத் திருப்பிக் கொடுப்பதற்காக பணம் கேட்கப்பட்டிருக்கிறது. குறிப்பாக இந்த ஓராண்டு காலத்திலே நிதிநிலை இலாக்காவிலே குறிப்பிட்ட அளவிற்கு ஒரு மாற்றம் ஏற்பட்டிருக்கிறது. அதை நான் வரவேற்கிறேன். குறிப்பாக ஒரு திட்டத்திலிருந்து இன்னொரு திட்டத்திற்கு பணத்தை எடுத்து விடுவது, பிறகு திரும்பிப் போடுவது என்ற நிலையை அறவே நீக்கிவிடவேண்டுமென்று என்னைப் பொறுத்த அளவிலே நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன். இரண்டு முறை கன்டின்ஜன்சி ஃபண்டு என்று நீங்கள் கேட்ட போதெல்லாம் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதற்கு மேலே இப்போது துணை மதிப்பீட்டிற்கும் பணம் கொடுக்கிறோம்.

இந்தத் துணை மதிப்பீட்டிலே குறிப்பாக, பொது விநியோகத்திற்கு மட்டும் 87 கோடி ரூபாய் அதிகமாகக் கேட்டு இருக்கிறார்கள். பொது விநியோக முறை நல்லமுறையிலே நடக்கவேண்டுமென்றுதான் கருத்துக்கள் கூறப்பட்டிருக்கின்றன. பொதுவாக, இந்தப் பொது விநியோகம் சரியாக இருந்தால் விலைவாசியைக் கட்டுப்படுத்த முடியும். இந்த பொது விநியோகத்திற்கு நீங்கள் கொள்முதல் செய்கின்ற நெல்லுக்கு அதிக அளவிலே விலை கொடுத்து வாங்குகிறீர்கள். குறைந்த விலையிலே மக்களுக்கு அதை விநியோகம் செய்கிறீர்கள். இதனாலே இழப்பு ஏற்படுகிறது என்பது தெரியும். இருந்தாலும் பொது விநியோகத்தை இன்னும் சீராகச் செய்யவில்லை என்பது பொதுவாக எல்லா இடங்களிலும் இருக்கின்ற குறைபாடு. ஒவ்வொரு இடத்திலும் நியாய விலைக் கடைகள் இருக்கின்றன. அந்த நியாய விலைக் கடைகளிலே வழங்குகின்ற பொருள்கள் தரமுள்ளதாகவும் இருக்க வேண்டும்; எடை குறையாமலும் இருக்க வேண்டும்; அளவு குறையாமலும் இருக்க வேண்டும். எந்தக் கடையிலாவது அளவு குறையாமல், தரமுள்ளதாக விற்கப்படுகிறதா என்று பார்த்தால். அளவு குறையாமல் இருப்பதற்குச் சந்தர்ப்பமே இல்லை.



1990 மார்ச் 30] [திரு. கோ. பூவராகன்]

இந்த எடை அளவுக்காக ஒரு தனி இலாக்காவே இருக்கிறது. அவர்கள் எந்த இடங்களிலாவது, இந்தப் பொது விநியோகக் கடைகளுக்குச் சென்று, அந்தக் கடைகளைத் திடீரென்று சோதனையிட்டு, எடை குறைவதற்கான காரணத்தைக் கண்டுபிடித்து, யாருக்காவது தண்டனை வழங்கியிருக்கிறார்களா என்று பார்த்தால், அதுபோன்ற இலாக்கா ஒன்று இருப்பதாகவே தமிழ்நாட்டிலே நாம் சொல்லிக் கொள்ள முடியாத ஒரு சூழ்நிலை இருப்பதை பார்க்கிறோம். பொது விநியோகத்திலே எடை குறையாமல் பார்த்துக்கொள்ள வேண்டியது நம்முடைய தமிழக அரசினுடைய மிகப் பெரிய பொறுப்பாக இருக்கிறது. சாதாரணமாக ஏழை மக்கள் இதை நம்பியே இருக்கிறார்கள். ஏழை மக்கள் 5 கிலோ வாங்குகிறார்கள் என்று சொன்னால், 3 கிலோ தான் இருக்கிறது. 1 லிட்டர் எண்ணெய் வாங்குகிறார்கள் என்றால் ¾ லிட்டர் எண்ணெய்தான் இருக்கும். இப்படி பலவிதமான இழப்புகள் பொது மக்களுக்கு ஏற்படுகிறது. பொது விநியோக முறையில் குறைந்த விலையில் விற்கிறீர்கள் என்று சொன்னால், கணக்கு பார்க்கின்றபோது அந்தப் பொருட்கள் குறைந்த விலையில் இல்லை என்றே நான் சொல்ல முடியும். அளவு சரியாக இருந்து, நல்லவிதமாகப் பொருட்களைக் கொடுத்து, காலாகாலத்திலே, அவர்களுக்கு பொருள்கள் வேண்டுமென்றபோது, அந்தந்த இடங்களிலே நீங்கள் விநியோகம் செய்வீர்கள் என்று சொன்னால் தற்போது உயர்த்தியுள்ள விலையைக் கூட பொருட்படுத்தாமல் தரம் நன்றாக இருந்தால் விலையைக் கூட பொருட்படுத்தாமல் உணவுப் பொருட்களை வாங்குவதற்குத் தயாராக இருப்பார்கள். பொது விநியோக முறையில் வழங்கப்படும் பொருட்களின் விலையை அரசாங்கமே உயர்த்திவிட்டது. ஆனால் பொது விநியோக முறையில் சரியாக செயல்படவில்லை என்ற கருத்தும் இருக்கிறது. 800 அல்லது 600 குடும்பங்கள் இருந்தால்தான் அந்தப் பகுதியில் நியாயவிலைக் கடைகள் அமைக்கப்படும் என்பதை மாற்றி, எங்கெங்கே நியாயவிலைக் கடைகள் திறக்க வேண்டுமென்று மக்கள் விரும்புகிறார்களோ அங்கேயெல்லாம் நியாயவிலைக் கடைகள் திறக்கப்படவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

11-45 மணி.

இந்த அரசு நெல் கொள்முதலில் அக்கறை காட்டுகிறது. ஆனால் கொள்முதல் செய்கிறபோது நெல் கொள்முதல் செய்யப்படும் இடத்தில் அறவைக்கான வசதியில்லை. அந்த நெல்லை

அறவைக்கு வேறு இடத்திற்கு எடுத்துச் சென்று, திரும்பவும்
கோடவுனுக்கு அரிசியைக் கொண்டு செல்கிறபோது இது ஒருவ
ரிடமே பொறுப்பாக இருப்பதால் பல தவறுகள் நடக்கின்றன
என்பதை நான் பட்ஜெட் பொது விவாதத்தின்போதே சுட்டிக்
காட்டினேன். அதைப் போக்குவதற்கு அரசு முயற்சி எடுக்க
வேண்டும்.

சாதாரணமாக நெல் அவியல் செய்து அறவை செய்தால்
கண்டுமுதல் அதிகமாக இருக்கும். ஆனால் அரசாங்க கொள்
முதல் நிலையங்களைப் பொறுத்த வரையில், அவியல், சேதாரம்,
காய்ச்சல் என்று பலவிதங்களில் ஒரு குவிண்டாலுக்கு 10 கிலோ
வரை நெல் எடை குறைந்துவிடுகிறது. இப்படி குறைவதற்கு
யார் காரணம்? யார் பொறுப்பு? இந்தப் பொறுப்பு உணவுத்
துறைக்கு இல்லையா? கொள்முதல் செய்கிற இடத்திலிருந்து
வெகு தூரத்திற்கு வந்து, அதை அவித்து அறைவைசெய்து மறு
படியும் அந்த அரிசியைக் கொண்டு வந்து விநியோக நிலையங்
களுக்கு வரும்போது, கணக்கு எடுத்துப் பார்த்தால் குறைகிறது.
இந்த நிலை ஏனென்றால், கணக்கு எழுதுவதற்கு தான் பயன்
படுகிறது. அதற்குத்தான் அந்தத் துறை இருக்கிறது. ஆகவே,
ஒவ்வொரு மாவட்டத்திற்கும், எவ்வளவு அரிசி தேவை, எவ்
வளவு நெல் தேவை, எப்படி கொள்முதல் செய்கிறோம், அறவை
எங்கே செய்கிறோம். எங்கே கோடவுன் இருக்கிறது என்பதை
அடிக்கடி சரிபார்க்க வேண்டும். பொதுவாக, நியாய விலைக்
கடைகளுக்கு அரிசி வருகிறபோது, இரவில் 6-7 மணிக்கு மேல்
தான் வருகிறது. இப்படி இரவில் லாரி வருவதால், 10 மூட்டை
அரிசி இறக்குவதற்குப் பதிலாக 9 மூட்டையை இறக்கிவிட்டு
10 மூட்டைக்கான கையெழுத்தை வாங்கிவிடக் கூடிய சந்தர்ப்
பம் இருக்கிறது. ஆகவே, லாரியில்வரும் அரிசியை பகலில்தான்
இறக்க வேண்டும். இரவில் இறக்கச் கூடாது என்று தடைவிதிக்க
வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இப்படிப் பல குறை
பாடுகள் இருக்கின்றன. நேரம் இல்லாத காரணத்தால் அவை
களை நான் ரொம்பவும் நீடிக்க விரும்பவில்லை.

அடுத்து பொது விநியோக முறையில் நாம் இன்னும் சற்று
கவனமாக இருந்தால் விலைவாசி கட்டுக்குள் இருக்கும் என்பதைச்
சொல்லி, எடை குறைவு, பொருட்களின் தரம் உயர்வு போன்ற
வற்றில் நாம் கவனமாக இருக்கவேண்டுமென்று இந்த சந்தர்ப்
பத்தில் கேட்டுக்கொள்கிறேன்.



விவசாயத்தில் ஈடுபட்டிருக்கிற விவசாயப் பெருங்குடி
மக்களுக்கு கரும்பு, நெல் விலைகளை ஏற்றிக் கொடுத்திருக்கிறார்
கள். அது வரவேற்கப்பட வேண்டிய விஷயம். நெல், கரும்பு
ஆராய்ச்சிப் பிரிவில் அதிகமான தொகை செலவு செய்தாலும்
பரவாயில்லை. நெல் உற்பத்தி பாதிக்கப்படாத வகையில் தர
மான விதைகள், தரமான உரம் மற்றும் பூச்சிக் கொல்லி
மருந்துகளை நல்ல முறையில் உற்பத்தி செய்து விநியோகம்
செய்ய அதிகமான தொகை ஒதுக்கவேண்டுமென்று கேட்டு
கொள்கிறேன். இப்போது நெல் பயிரிலும் பூச்சி வெட்டு அதிக
மாக இருக்கிறது. நெற்பயிருக்கு இதனால் பல நோய்கள் வந்து
விடுகின்றன. இதனால் உற்பத்தி வீணாகிறது. அதைப் போல
கரும்பில் அதிக சர்க்கரைச் சத்து உள்ள ரகங்களை உற்பத்தி
செய்யவும், விவசாயத் துறையில் உள்ள ரிசர்ச் மற்றும் டெவலப்
மெண்ட் பிரிவு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்
கொள்கிறேன். கரும்பு, நெல் உற்பத்தியில் அந்தப் பிரிவினர்
முனைந்து ஆராய்ச்சிகள் செய்து உற்பத்தியைப் பெருக்குவதற்கு
தீவிரமான ஆலோசனைகளைச் சொல்லவேண்டுமென்று கேட்டுக்
கொள்கிறேன்.

(11-50 மணி)

அடுத்ததாக, சென்னை குடிநீர் பிரச்சினை. குடிநீர் வசதிக்காக
அதிகமாக பணம் ஒதுக்கியிருக்கிறார்கள். அதை வரவேற்கிறேன்.
அது வரவேற்கத்தக்க ஒன்று. சென்னை மாநகரத்தின் குடிநீர்ப்
பிரச்சினை என்பதைத் தீர்ப்பதற்காகத்தான் நாம் இருக்
கிறோம் என்பதை எண்ணிப்பார்க்க வேண்டும். ஆனால் இப்படி
ஆண்டுதோறும் 30 கோடி, 35 கோடி என்று சொல்லிக்
கொண்டே போனால் இப்படி காலத்தை நீட்டிக்கொண்டே
போனால், அதாவது திட்டத்தை விரைந்து செயல்படுத்தாத
காரணத்தால் பின்னால் அதிகமான அளவுக்கு பணத்தைச்
செலவிடக்கூடிய அளவுக்கு நம்மைத் தள்ளிவிடக் கூடிய சூழ்நிலை
ஏற்பட்டுவிடும். அங்கே ஆட்சி மாறுகிறது; இங்கே ஆட்சி
மாறுகிறது என்ற நிலைமைகள் எல்லாம் ஏற்படுகின்ற காரணத்
தால் இதிலே நம்முடைய கவனத்தை அதிகமாக ஈடுபடுத்த
முடியாத நிலைமைகள் எல்லாம் ஏற்படுகின்றன. எனவே
விரைந்து செயல்பட்டு எவ்வளவு அதிகமான பணத்தை இதற்
காக ஒதுக்க முடியுமோ அதாவது இதற்குத் தேவையான பணம்
எந்த அளவுக்கு நம்மால் ஒதுக்க முடியுமோ அந்த அளவுக்கான
பணத்தை உடனடியாக இந்த ஆண்டே ஒதுக்கி சென்னை
மாநகருக்குக் குடிநீர் வருவதற்கான சந்தர்ப்பத்தைத் தேடித்தர
வேண்டும். போதிய நிதி ஒதுக்கம் செய்யவேண்டும்.

இதற்காகத் தனி இலாக்கா இருப்பதை அதிக அளவில் ஊக்குவித்து அந்த அரசோடு தொடர்பு கொண்டு நல்லவிதமாக விரைவில் தண்ணீர் சென்னை மாநகருக்குக் கொண்டு வர ஏற்பாடு செய்யவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

கோடை காலங்களில் லாரிமூலமாக தண்ணீர் கொடுப்பதாக அறிவித்திருக்கிறார்கள். இந்தப் பணம் போதாது. ஏனென்றால் கடுமையான அளவுக்கு வறட்சி ஏற்படுகின்ற நிலைமை ஏற்பட்டிருக்கிறது. மழை இல்லை. சென்னை நகரிலும் அதையொட்டி இருக்கின்ற பகுதிகளிலும் மழை இல்லை. வெளியே இருக்கின்ற நீர்த்தேக்கங்களில் தண்ணீர் வரவில்லை. அதை உணர்ந்து சம்பந்தப்பட்ட அமைச்சர் அவர்கள் இப்போதே அதிகமான நிதியினை ஒதுக்குவதற்கு ஏற்பாடுசெய்து அதன்மூலம் அதிகமான லாரிகளை அமைத்து எங்கெங்கிருந்தெல்லாம் தண்ணீர் கொண்டுவர முடியுமோ அங்கிருந்தெல்லாம் தண்ணீரைக் கொண்டு வந்து மக்களுக்கு வழங்க ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும்.

சென்னை கடற்கரை ஓரமாக திருவான்மியூரிலிருந்து நான்கைந்து கிராமங்களில் அனுமதி இல்லாமல் நிறைய கட்டிடங்கள் வந்திருக்கின்றன. பெரிய, பெரிய கட்டிடங்கள் எல்லாம் ஏற்பட்டிருக்கின்றன. 500,600க்கு மேற்பட்ட பங்களாக்கள் எல்லாம் வந்திருக்கின்றன. கொட்டிவாக்கத்திலே இருந்து அங்கே கடைசி வரையில் உள்ள நான்கைந்து கிராமங்களில் இப்படி ஏற்பட்டிருக்கின்றன. அந்த கிராமங்களிலிருந்துதான் இங்கே தண்ணீர் வந்துகொண்டிருந்தது. இவ்வாறு கட்டிடங்கள் கட்டப்பட்டிருப்பது பற்றி நம்முடைய இன்டியன் எக்ஸ்பிரஸ் பத்திரிகை கூட ஒரு குறிப்பினைத் தந்து கண்டனத்தைத் தெரிவித்திருக்கிறது. இன்றையதினம் பல இடங்களில் கட்டிடங்கள் அனுமதி இல்லாமல் கட்டப்பட்டு நிலத்தின் நீரை எடுத்துப் பயன்படுத்துவதால் அந்த பகுதிகளில் ஏற்கெனவே இருக்கின்ற மக்களுக்கு வாய்ப்பு வசதி குறைந்து அவர்கள் கஷ்டப்படுகிற நிலைமை ஏற்பட்டு இருக்கிறது. எனவே இதைத் தவிர்க்கின்ற வகையில் நம்முடைய அரசு உடனடியாக நல்ல நடவடிக்கை எடுத்து தடுத்து நிறுத்துவதற்கான முயற்சிகளில் ஈடுபட வேண்டும் என்று நான் இந்தச் சமயத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

இந்த நிதிநிலை அறிக்கை அடுத்த ஆண்டு வருகிறபோதாவது, இதிலே இருந்து எடுத்து அதிலே போடுவது, அதிலே இருந்து எடுத்து இதிலே போடுவது என்ற நிலைமை இல்லாமல் எந்தெந்த இனங்களுக்காக எப்படி எப்படி நிதி ஒதுக்கம்



செய்யப்படுகிறதோ அந்தந்த இனங்களுக்காகவே அந்தப் பணத்தைச் செலவிடுவதற்கான வழிவகைகளைக் காணவேண்டும் என்று சொல்லி என்னுடைய வார்த்தைகளை நிறைவு செய்கிறேன்.

7. விதி 110-ன் கீழ் உணவு அமைச்சரின் அறிக்கை.

தமிழ்நாட்டிற்கு மத்திய அரசு கூடுதல் அரிசி ஒதுக்கீடு செய்துள்ளது குறித்து.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இப்போது விதி 110ன்படி மாண்புமிகு உணவு அமைச்சர் அவர்கள் ஓர் அறிக்கையினை அளிப்பார்கள்.

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்று மத்திய உணவுத்துறை அமைச்சரோடு நம்முடைய மாநில முதல்வர் மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்கள் பேச்சுவார்த்தை நடத்தி, அதன்மூலம் தமிழகத்திற்கு இதுகாறும் வழங்கி வந்த 60,000 மெட்ரிக் டன் அரிசியை மேலும் உயர்த்தவேண்டும் என்ற தமிழக அரசினுடைய வேண்டுகோளை ஏற்றுக்கொண்டு இருக்கிறார்கள். மத்திய அரசின் சார்பாக 75,000 மெட்ரிக் டன் அரிசியை மாதந்தோறும் தமிழகத்திற்கு வழங்குவதற்கு மத்திய அரசு உணவுத்துறை அமைச்சர் மூலமாக ஏற்றுக் கொண்டு இருக்கின்றது என்ற நல்ல செய்தியை இந்த அவையிலே அறிவித்து அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

6. <u>இறுதி துணை நிதிநிலை அறிக்கை, 1989–90 பொது விவாதம் மற்றும் கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள், 1989–90 பொது விவாதமும் வாக்கெடுப்பும் (தொடர்ச்சி)</u>

திரு. பி. எச். பாண்டியன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1989–90 ஆம் ஆண்டுக்கான துணை நிதிநிலை மானியக் கோரிக்கையின்கீழ் என்னுடைய கருத்துக்களை வெளியிடுவதற்கு வாய்ப்பு கொடுத்ததற்காக நான் நன்றியைச் சொல்லிக்கொள்கிறேன்.

துணை மானிய நிதிநிலை அறிக்கையைக் கொண்டுவரும் போது நம்முடைய தமிழக அரசின் நிதிப்பற்றாக்குறையையும் நிர்வாகத்தில் சில நேரங்களில் ஏற்பட்ட குறைபாட்டையும்

முதலில் அரசாங்கம் களைந்தாக வேண்டும். குறிப்பாக வரு
வாய்த்துறை, விற்பனை வரித்துறை ஆகிய இரண்டு துறையின்
மூலமாகத்தான் அரசாங்கத்திற்கு அதிகமான வருவாய் வரக்
கூடிய ஒரு வாய்ப்பு இன்றைக்கு ஏற்பட்டிருக்கிறது. விற்பனை
வரித்துறையை எடுத்துக்கொள்வோமேயானால் சுமார் 400
கோடி ரூபாய் வெளி மாநில லாட்டரிச் சீட்டு உரிமையாளர்
கள் தமிழக அரசுக்குச் செலுத்தவேண்டிய வரியைச் செலுத்
தாத காரணத்தால் பெருத்த பாதிப்பு ஏற்பட்டிருக்கிறது.
நீதிமன்றத்திலே பல ஆண்டுகளாக தடை உத்தரவை வாங்கி
இன்றைக்கு இங்கே இருந்து தொழில் செய்கின்ற காரணத்தால்
400 கோடி ரூபாய் அளவுக்கு இன்றைக்கு நம்முடைய அரசாங்
கத்திற்கு வரவேண்டிய பணம் வராமல் நின்றுகொண்டிருக்கிறது

11-55 மணி

வெளி மாநிலத்தவர்களால். இதை எல்லாம் வசூலிக்க வேக
மாக தமிழக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். நடவடிக்கை
எடுத்து அந்த 400 கோடி ருபாய்களைப் பெற்று பற்றாக்குறை
இல்லாமல், இதுபோல, சப்ளிமெண்டரி எஸ்டிமேட்டே போடக்
கூடா அளவுக்கு நீங்கள் உடனே நடவடிக்கை எடுக்க வேண்டும்
என்று கேட்டுக்கொள்கிறேன்.

ஒரு சாதாரண ஏழை ஐ.ஆர்.டி.பி. கடன், ஏதாவது ஒரு
சிறிய கடன் வங்கியிடம் இருந்து வாங்கியிருப்பானேயானால்
செலுத்தவில்லையென்றால் வீட்டிலே நாம் ஜப்தி செய்கிறோம்.
அவர்களுடைய வீட்டிலே இருக்கின்ற பொருட்களை ஜப்தி
செய்து எடுத்துக்கொண்டு செல்கிறோம். ஆனால் இப்படிப்
பட்டவர்கள் அதுபோன்ற நடவடிக்கைக்கு ஆளாவது கிடையாது.
காரணம் அவர்களுக்கு அரசாங்கம் கடிதங்களை எழுதிக்கொண்
டிருக்கும். 'உங்களுடைய வரியை செலுத்துங்கள். இவ்வளவு
நிலுவை இருக்கிறது. இதை ஏன் செலுத்தக் கூடாது என்று'.
உடனே சம்பந்தப்பட்டவர்கள் நீதிமன்றத்தில் தடையாணை
வாங்கியிருக்கிறோம். செலுத்த இயலாது என்று பதில்
சொல்லிக்கொண்டிருப்பார்கள். ஆகவே குறைவாக கடனை
வாங்கியவர்கள் இன்றைக்கு கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்
கள். இன்னும் சொல்லப்போனால் அடக்குமுறை நடவடிக்கை
க்கு அவர்கள் ஆளாகிறார்கள். அரசாங்கத்தினால்கூட,
ஆனால் அதிகமான தொகையை செலுத்த வேண்டியவர்கள் மீது
கடுமையான நடவடிக்கை இல்லை. அந்த கடுமையான நட
வடிக்கையை எடுக்க வேண்டும் என்பதுதான் நான் இந்த நேரத்
தில் எடுத்து வைக்கக்கூடிய வாதமாகும். பெரிய பெரிய வரி



ஏய்ப்பாளர்களை, விற்பனைவரி ஏய்ப்பாளர்களை அதிகாரிக
ளோடு, போலீஸ் துணையோடு. இன்னும் சொல்லப்போனால்,
டி.ஸ்.பி, மலபார் போலீஸ் என்றெல்லாம் வைத்துக்
கொண்டிருக்கிறோமே அவர்களை வைத்து பிடிக்கலாம்.
இன்றைக்கு கலவரத்திற்கு மட்டும் பயன்படுத்திக்கொண்டிருக்
கிறோம். அவர்களை எல்லாம் அழைத்துக்கொண்டு போய்
அவர்கள் வீட்டின் முன்னால், அவர்கள் அலுவலகத்திற்கு முன்
னால் நிறுத்துவோமானால், வெட்கப்பட்டாவது அவர்கள்
அந்தப் பணத்தைச் செலுத்துவார்கள் கேவலத்திற்கு அஞ்சி.
ஆகவே நம்முடைய விற்பனை வரி துறை இதுபோன்ற கடுமை
யான நடவடிக்கை எடுக்க வேண்டுமென்ற வேண்டுகோளை தெரி
வித்துக்கொள்கிறேன். அந்த 400 கோடி ரூபாய் வருமானால்
இன்னும் எத்தனையோ திட்டங்களை நிறைவேற்ற முடியும். இது
ஒன்று இன்றைக்கு நம்முடைய அரசாங்கத்தின் சார்பில் பல்வேறு
நல திட்டங்களை நிறைவேற்றிக்கொண்டிருக்கிறோம். நிறைவேற்
றும்போதுதான் சில வரையறுக்கப்பட்ட திட்டங்களுக்கு நம்மால்
கூட சில நேரங்களில் நிதியை ஒதுக்கமுடியவில்லை. அப்பேர்ப்
பட்ட திட்டங்களுக்கு நிதியை வருவாயை சேர்ப்பதற்கு இது
போன்ற நடவடிக்கை தேவை.

இங்கே சென்னை நகரத்தில் ஜெமினி மேம்பாலத்திற்கு அருகா
மையில் இருக்கக்கூடிய உட்லண்ட்ஸ் ஓட்டலுக்கு அரசாங்க
நிலத்தை நீண்ட கால குத்தகைக்குக் கொடுக்காதீர்கள்.
வேண்டுமென்றால், அதை விற்று நம்முடைய தமிழ் மக்களுக்கு
நிதியைத் திரட்டுவோம். யாரோ ஒருவன் சம்பாதிப்பதற்கு
யாரோ ஒருவன் தொழில் நடத்துவதற்கு ஜெமினி அருகாமையில்
இருக்கக்கூடிய அந்த உட்லண்ட்ஸ் ஓட்டல் இடத்தை இனிமேல்
நீட்டித்துக் கொடுக்காதீர்கள் என்பதை இங்கே நான் தெரிவித்
துக்கொள்கிறேன். நீங்களும் நானும் அங்கே ஓட்டல் வைக்க
வேண்டுமென்றால் வைக்க முடியாது. வேண்டுமென்றால் நம்மு
டைய மாண்புமிகு அமைச்சர் திரு. துரைமுருகன் போன்றவர்கள்
அங்கே போய் டிபன் வேண்டுமானால் காசு கொடுத்து சாப்பிட்டு
விட்டு வரலாம். இது தமிழருக்கு தமிழருடைய நிலை இவ்வளவு
தான். இப்படி தமிழ்நாட்டிலே இருக்கக்கூடிய சொத்தில் வெளி
யிலே இருந்து வரக்கூடியவர்கள் எப்படியெல்லாம் அனுபவிக்கிறார்
கள் என்பதற்கு இது ஓர் எடுத்துக்காட்டு. இதுபோல நம்முடைய
நகரத்தின் பல இடங்களில் இருக்கக்கூடிய அரசாங்கச்
சொத்துக்களை கையகப்படுத்தி வேண்டுமென்றால்
விற்று நம்முடைய ஏழை மக்களுக்கு சாப்பாடு
போடுவோம். தனி மனிதன் சாப்பிட்டு வளருவதை தடுக்க
வேண்டும் என்பதற்காகத்தான் நான் சொல்கிறேன். இது
போன்று பல இடங்களில் இருக்கின்றது. நம்முடைய
உட்லண்ட்ஸ் ஓட்டல் இடம் மட்டுமல்ல, நம்முடைய சென்னை

நகரத்தில் இன்னும் சில ஓட்டல்களும் இருக்கின்றன. இன்னும் தொழில் அதிபர்களும் பெரிய பெரிய சொத்துக்களை கையிலே வைத்து இருக்கிறார்கள். அதை கையகப்படுத்தி அதை மக்களுடைய நலனுக்காக செயல்படுத்த முடியவில்லை என்றாலும் அதிக விலைக்கு விற்றாவது திட்டங்களை நிறைவேற்றுவோம். சில பேர் விற்றுச் சாப்பிட்டுக்கொண்டிருப்பார்கள். இது விற்கவும் இல்லை. யாரோ ஒருவர் அனுபவிப்பதைப் பார்த்துக்கொண்டிருக்க முடியவில்லை என்பதற்காக நான் இதை இங்கே சொன்னேன்.

12–00 மணி

இன்றைக்கு கடுமையான நடவடிக்கையை அரசு எடுக்க வேண்டுமென்று நான் சொல்வதற்குக் காரணம், கடுமையான நடவடிக்கைஎடுக்கவில்லையென்றால் நிதி பற்றாக்குறை இருக்கிற நிலையில் வேறு நிதி வருவாய் மூலம் வருவாயை அதிகரிக்க வாய்ப்பு இல்லை. ஆகவே, இதைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, என்னுடைய தொகுதியில் ஜம்பு நதித் திட்டம், ராம நதித் திட்டம் ஆகிய இரண்டு திட்டங்களையும் நிறைவேற்றி தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நிதி நிலை அறிக்கை விவாதத்தின்போது இதை நான் சொல்ல முடியவில்லை. ஆகவே, எங்கள் பகுதியில் இருக்கிற வெள்ளம்பட்டி, புங்கம்பட்டி, வடமலைப்பட்டி, தெற்கு மடத்தூர், அழகியசிங்க பெருமாள்புரம், செல்லப்பிள்ளையார் குளம். கோயிலூற்று போன்ற 7 ஊர்களுக்கு விவசாயிகள் பயன்படக்கூடிய அளவுக்கு இந்த ஜம்பு நதித் திட்டத்தையும், ராம நதித் திட்டத்தையும் இந்த ஆண்டிலேயே நிறைவேற்றித் தர வேண்டுமென்று நான் மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, எங்கள் பகுதியில் ஒவ்வொரு பகுதியிலும் பல்வேறு தேவைகள் இருக்கின்றன. கல்லிடைக்குறிச்சி அருகிலே பொட்டல் என்ற கிராமமும், அதற்கு அருகில் மலையகுளம் என்ற ஊரும் இருக்கிறது. அங்கே கோரை ஆற்றுக்குக் குறுக்கே ஒரு சிறிய பாலம் இருக்கிறது. நிதிநிலை அறிக்கையில் பல திட்டங்களை தீட்டியிருக்கிறீர்கள். அந்தப் பாலத்தையும் கட்டித்தர வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, இங்கே ஆதி திராவிட மக்களுக்கு மேலைச் செவல் என்ற நகரப் பஞ்சாயத்துக்கு உட்பட்ட சோலியத் தெரு ஊரில் இலவசப் பட்டா வழங்கப்படவில்லை என்றும், அதை



வாங்கித் தாருங்கள் என்றும் கேட்டிருக்கிறார்கள். நகரப் பஞ் சாயத்துக்களுக்கு அந்தத் திட்டங்கள் விஸ்தரிக்கப்படவில்லை. ஆதி திராவிட மக்களுக்கு வீடு கட்டித் தருவதைப் பொறுத்தவரை யில் நகரப் பஞ்சாயத்துக்களுக்கு அந்தத் திட்டம் விஸ்தரிக்கப் படவில்லை என்று சொல்கிறார்கள். அதையும் சேர்த்து, அந்த மக்களுக்கு திட்டங்களை நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதே நேரத்தில் இதுபோன்ற திட்டங்களை நிறைவேற்றும்போதுதான் பல்வேறு எதிர்ப்புக்கு ஆளாகக்கூடிய அளவுக்கு ஓர் ஆட்சி இருந்துகொண்டிருக்கிறதுஎன்பதையும் நான் உணர்ந்திருக்கிறேன். சர்வாதிகாரியைத் தான் எதிர்ப்பார்கள். ஒரு தனி சர்வாதிகாரியை எதிர்த்துதான் போராட்டம் நடத்து வார்கள், உண்ணாவிரதம் இருப்பார்கள். இது வரலாற் றைப் படித்தவர்களுக்குத் தெரியும். ஜனங்களால் தேர்ந்தெடுக் கப்பட்ட ஓர் ஆட்சியை ஜனங்களே எதிர்க்கமாட்டார்கள். சர்வாதிகார ஆட்சியைத் தவிர மற்றபடி மக்களாட்சியில் விவாதம் எல்லாம் சட்டமன்றத்தில்தான் பேசி முடிவெடுக்க வேண்டு மென்று அரசியல் சட்டத்திலேயே வழிவகை செய்யப்பட்டிருக் கிறது. எனவே, எல்லோரும் நல்லமுறையில் தங்கள்தங்கள் கட மையைச் செய்தால் இதுபோன்ற நிலைமைகள் உருவாகாது.

ஒரு சாதாரண சத்துணவு அமைப்பாளர் 11 மணிக்கு அவரு டைய இடத்தை விட்டு வெளியே சென்றால் உடனே நடவடிக்கை எடுக்கிறோம். ஆனால் பெரிய பெரிய பொறுப்பிலே இருப்பவர் கள் நாம் நம்மையே பார்த்துக்கொள்வோம், நாம் என்ன முழுமையாக சட்டமன்றத்தில் அமர்ந்துகொண்டா இருக் கிறோம். நாம் வெளி நடப்பு செய்தால் நடவடிக்கை கிடை யாது. அரசு அதிகாரிகள் வெளிநடப்பு செய்தால் (வெளியே போனால்) விடுவோமா? வருவாய்த்துறை அலுவலர்கள் வேலை நிறுத்தம் செய்தால் விட்டுவிடுவோமா? உடனே நடவடிக்கை. அவர்களும் அரசாங்கத்தில் இருந்துதான் சம்பளம் வாங்கு கிறார்கள். நாமும் அரசாங்கத்தில் இருந்துதான் சம்பளம் வாங்குகிறோம். ஆகவே, நாட்டு மக்கள் நலம் கருதி, எல்லோ ரும் குறிப்பிட்ட காலம் வரை உழைக்க வேண்டுமென்றுதான் நம்முடைய அரசியல் சட்டமே வழிவகை செய்கிறது. (மணி யடிக்கப் பெற்றது).

இறுதியாக, இந்த இறுதித் துணை மதிப்பீடுகள் குறித்த அறிக்கை மீது என்னுடைய கருத்துக்களைச் சொல்ல வாய்ப்பு தந்தமைக்கு நன்றி சொல்லி அமர்கிறேன். நன்றி.

திரு. ஜி. பழனிச்சாமி; மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1989–90 ஆம் ஆண்டுக்கான இறுதித் துணை மதிப்பீடுகள் குறித்த அறிக்கையின் மீது என்னுடைய

கருத்துக்களைச் சொல்ல நான் முன்வருகிறேன். இன்றைய
தினம், தமிழக அரசு ஏழையெளிய நலிவுற்ற மக்களுக்கு, நீண்ட
நாட்கள் இருண்டு கிடந்த தமிழகத்தில், நல்ல பல திட்டங்களைப்
பற்றி அறிவித்திருக்கிறார்கள். இந்த நல்ல நேரத்தில் இந்த
இறுதித் துணை மதிப்பீடுகள் குறித்த அறிக்கையை வரவேற்று, ஆத
ரித்து ஒருசில கருத்துக்களை மட்டும் சொல்ல நான் விரும்பு
கிறேன். இன்றைக்கு, நாட்டிலே இருக்கிற பல்வேறு ஏழை
யெளிய மக்களுடைய பிரச்சினைகளை ஆராய்ந்து, எதிர்
காலத்தில் அவற்றுக்கு தீர்வு காண துரித நடவடிக்கை எடுக்கப்
பட வேண்டும் என்பது என்னுடைய வேண்டுகோள் ஆகும்.

**12-05 மணி**

அதோடு இன்றைக்கு வளர்ந்துவரக்கூடிய நகரங்களிலும்,
கிராமப்புறங்களிலும்கூட குடிநீர்ப் பிரச்சினை மிகவும் தீவிர
மாக இருந்து கொண்டிருக்கிறது. தொடர்ந்து குடிநீர்ப் பிரச்
சினையைத் தீர்ப்பதற்காகப் பல்வேறு திட்டங்கள் தீட்டப்பட்
டிருந்த போதிலும் கூட, குடிநீர்ப் பிரச்சினை தீர்க்க முடியாமல்
இருக்கிறது. அதேபோன்று கிராமப்புற வளர்ச்சியைப் பார்க்
கின்றபோது, நகர்ப்புற வளர்ச்சியோடு அதை ஒப்பிட்டுப் பார்க்
கின்றபோது, கிராமப்புறங்களில் படுமோசமான சூழ்நிலை இருக்
கிறது. சுகாதாரத்தை எடுத்துக்கொண்டாலும், குடிநீர்ப்
பிரச்சினையை எடுத்துக்கொண்டாலும், சாலை வசதிகளை
எடுத்துக்கொண்டாலும் இன்றைக்கு கிராமப்புறங்களில் அப்
படிப்பட்ட பிரச்சினைகள் தீர்க்கப்பட முடியாமல் இருக்
கின்றன. குறிப்பாகச் சொல்ல வேண்டுமானால் என்னுடைய
தொகுதியான திருத்துறைப்பூண்டியில் அநேகமாக எல்லா இடங்
களிலும் குடிநீர்ப் பிரச்சினை தலை தூக்கி இருக்கிறது. ஒவ்
வொரு ஆண்டும் மாவட்ட ஆட்சித் தலைவர் மூலமாக குடிநீர்
வழங்கி, அந்தப் பகுதி மக்களுடைய குடிநீர்ப் பிரச்சினையைத்
தீர்க்கும் நிலைமை இருக்கிறது.

அடுத்து, தஞ்சை மாவட்டத்தை எடுத்துக் கொண்டால் அது
விவசாயத்தை நம்பியிருக்கக்கூடிய மாவட்டமாகும். அங்
எந்த ஒரு தொழிலும் துவக்கப்படாத நிலைமை இருக்கிறது.
தமிழகத்தில் முதலமைச்சரவர்கள் சொந்த மாவட்டமாக அது
இருக்கிற காரணத்தால், அந்த மாவட்டத்திலே தொழில்களைத்
துவக்கி, அங்கே படித்திருக்கும் பல்வேறு பட்டதாரிகளுக்கும்
வேலைவாய்ப்பு அளிக்கின்ற வகையில் முயற்சிகளை எடுக்க
வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்கிறேன்.
அதோடுமட்டுமல்லாமல் தஞ்சை மாவட்டத்தில் இன்றைக்கு
நெல் அதிகமாகக் கொள்முதல் செய்யப்பட்டிருக்கிறது.





அப்படி நேரடிக்கொள்முதல் செய்யப்பட்டிருக்கிற நேரத்தில்,
அவற்றை வைக்க சரியான பாதுகாப்பான கிடங்குகள் இல்லை.
தெருக்களிலும், ரோடு ஓரங்களிலும், பொது இடங்களிலும்
ஆயிரக்கணக்கான, லட்சக்கணக்கான மூட்டைகளை வெயிலில்
அடுக்கி வைத்திருப்பதைப் பார்க்கும்போது வேதனையாக இருக்
கிறது. பல்வேறு இடங்களில் தனியார் கிடங்குகள் கட்ட திட்ட
மிருந்தும் இன்றைக்கு முழுமையாக அவற்றைச் செயல்
படுத்தாத நிலைமை இருக்கிறது.

அடுத்து எண்ணெய் எரிவாயு எடுக்கின்ற ஓ.என்.ஜி.சி.
நிறுவனத்தின் பல்வேறு வாகனப் போக்குவரத்து அதிகமாக நடை
பெற்றுக் கொண்டிருக்கிறது. மேலும் நேரடிக் கொள்முதல் கார
ணமாகவும் அதிகமான வாகனப் போக்குவரத்து நடைபெறுகிறது.
இதனால் அங்கே இருக்கக்கூடிய நகர்ப்புற கிராமப்புறச் சாலைகள்
மிகவும் பழுதடைந்த நிலையில் இருக்கின்றன. அதைச் சீர் செய்து,
செப்பனிட உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று
இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து காவல் துறையை எடுத்துக்கொண்டால், இன்றைக்குத்
தமிழகத்திலே காவல் துறைக்கு உள்ள மிகப் பெரிய மரியாதை
நாளுக்கு நாள் குறைந்துகொண்டே வருகிறது. இன்றைக்குத் தமிழ
கத்தில் சமூக விரோதிகள் தலை தூக்கும் விதத்தில் போலீஸ்
துறை இருக்கிறது. எங்கே எடுத்துக்கொண்டாலும் இரவிலும்,
பகலிலும் வழிப்பறிக் கொள்ளை என்பது தொடர்ந்து நடைபெற்
றுக் கொண்டிருக்கிறது. தஞ்சை மாவட்டத்தில், மன்னார்குடிக்கு
அருகாமையில் வியாபாரிகள் வியாபாரத்தை முடித்து விட்டு
இரவில் வீட்டுக்கு வரும்போது, வழிப்பறிக் கொள்ளைக்காரர்கள்
அவர்களின் கை, கால்களைக் கட்டி, வாயை கட்டி, வயலிலே அவர்
களைத் தூக்கிப் போட்டுவிட்டு, அவர்கள் சென்ற ஸ்கூட்டர்,
பைக்கை எடுத்துக்கொண்டதோடு, அவர்களிடமிருந்த பணத்தை,
60,000 ரூபாய்க்கு மேலான பணத்தை கொள்ளை அடித்திருக்
கிறார்கள். இதுபோன்ற சம்பவம் நடந்து 3 மாதங்களுக்கு
மேலாகியும் இன்றைய தினம் வரை குற்றவாளிகளைக் கண்டு
பிடிக்க முடியாத சூழ்நிலை இருக்கிறது. நேற்றைய தினம் இது
போன்று நாகைக்கும் தலைஞாயிறுக்கும் இடையில் அலுவலர்கள்
தங்கள் பணியை முடித்துவிட்டு, வீடு திரும்பும்போது, அவர்கள்
வந்த வாகனத்தைக் கொள்ளையர்கள் வழி மறித்து, அவர்களிட
மிருந்து பணத்தைப் பறித்து, அவர்களைக் கட்டிப் போட்டு
விட்டுச் சென்றிருக்கிறார்கள். இன்றைக்கு தஞ்சை மாவட்டத்
தில் தனி வீடுகளில் இருக்கக்கூடிய அரசு ஊழியர்கள், தங்களு
டைய வீடுகளுக்குக் காவலர்களைப் போட்டுவிட்டு, அலுவலகம்

போகும் அளவுக்கு அச்ச நிலைமை, பதட்ட நிலைமை இருந்து கொண்டிருக்கிறது. இப்படி கொள்ளைகள், படுகொலைகள் பல இடங்களில் நடைபெறுகிறது. இதையெல்லாம் குறித்து காவல் துறையில் சரியான நடவடிக்கை இல்லாததால் இன்றைக்கு சமூக விரோதிகளின் கைகள் மேலோங்கி இருப்பதை நம்முடைய முதலமைச்சரவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். (மணி அடிக்கப்பெற்றது).

12-10 மணி

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இன்னும் ஒரு மணித்துளியில் முடித்து விடுங்கள்.

திரு. ஜி. பழனிச்சாமி : தமிழகத்தில் இந்த நிலைமையை நம்முடைய முதலமைச்சர் அவர்கள் கட்டுப் படுத்துவதற்குரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக் கொள்கிறேன். இந்த மாநிலத்தில் மக்கள் அச்சமின்றி தங்களுடைய வாழ்க்கையை நடத்துவதற்கு அரசு முயற்சி செய்ய வேண்டுமென்றும் கேட்டுக் கொள்கிறேன்.

திருப்பத்தூரிலே இது போன்று ஒரு சம்பவம் நடந்து இருக்கிறது. கவுண்டம்புத்தூர் என்ற கிராமத்தில் சாதாரண ஏழை எளிய குடும்பத்தைச் சார்ந்த விவசாயத் தொழிலாளரின் வீட்டு அரிசனப் பெண் தங்கம்மாள் என்பவர் கற்பழிக்கப்பட்டு கிணற்றிலே தூக்கிப் போடப்பட்டு இருக்கிறார். அங்கு அக்கம் பக்கத்தில் இருந்தவர்கள், அந்த பெண் கொலைசெய்யப்பட்டார் என்று சொல்லிய போதும் கூட, அங்கு இருக்கிற காவல் துறையினர் இது வரையிலும் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. என்னுடைய தொகுதியில் கூட சத்துணவு அமைப்பாளர் சாவித்திரி கொலை வழக்கு நடந்தது. இது வரையிலும் அதில் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. தமிழகத்தில் சமூக விரோதிகள் இப்படிப்பட்ட நிலைமைகளை ஏற்படுத்தி, இந்த ஆட்சி கொண்டு வரும் நல்ல பல திட்டங்களுக்கு ஒரு கெட்ட பெயரை ஏற்படுத்த வேண்டும் என்பதற்காக, இப்படிப் பல் வேறு இடங்களில் நடத்தி வருகிறார்கள். இது போன்ற சம்பவங்களைத் தடுப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று இந்த சந்தர்ப்பத்திலே நான் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து அரிசி விலை, அது பற்றி எனக்கு முன்னர் பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் குறிப்பிட்டது போல இன்றைக்கு அது அதிக விலைக்கு விற்கப்படுகிறது. இந்த அரசு பல்வேறு திட்டங்களை ஏழைகளுக்காக அமல்படுத்துகிறது. இன்றைய



தினம் 8 ஆம் வகுப்பு வரையிலும் மாணவர்கள் இலவசமாக பஸ்ஸிலே செல்வதற்கு பல கோடி ரூபாய் செலவையும் எதிர் பாராமல் ஒரு நல்ல திட்டத்தை இந்த அரசு அறிவித்து இருக்கிறது. இருப்பினும், சாதாரண ஏழை மக்கள் வாங்கிச் சாப்பிடும் அரிசியின் விலை அதிமாக இருக்கிறது. மிகச் சன்ன ரக அரிசிதான் கடைகளிலே கிடைக்கிறதே தவிர, விலை குறைவாக இருக்கக் கூடிய அரிசி எந்தக் கூட்டுறவு அங்காடிகளிலும் இன் றைக்கு கிடைக்க வில்லை. இதனால் அரிசியின் விலை உயர்ந்து இருக்கிறது. ஆகையினால் அரிசியின் விலையைக் குறைப்ப தற்கு, அரசு மறு பரிசீலனை செய்ய வேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்திலே கேட்டுக் கொண்டு இந்த துணை மானியக் கோரிக்கை மீது பேச வாய்ப்பு அளித்த துணைத் தலைவருக்கு நன்றி கூறி அமர்கிறேன்.

திரு. எம். முகமது சித்திக் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தத் துணை மானியக் கோரிக்கை மீது இங்கே நான் பேசுவதற்கு வாய்ப்பு அளித்தமைக்காக நான் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். டாக்டர் கலைஞர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்று, ஏழை எளிய மக்கள் மற்றும் அனைத்து சமுதாய மக்கள், சிறுபான்மை மக்கள் ஆகிய அனைவரும் பயன்படத்தக்க வகையிலே, பாராட்டுகின்ற வகையிலே இன்றைக்கு நல்ல பல திட்டங்களை எல்லாம் உருவாக்கி, அவைகளைச் செம்மையாகச் செயல்படுத்திக் கொண்டு இருக்கிறார்கள். இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையிலே போட்டிருக்கிற திட்டங்கள் அனைத்தும் அனைத்துத் தரப்பு மக்களும் பாராட்டு கின்ற வகையில் இருப்பதை நான் பெரிதும் வரவேற்கிறேன்.

இஸ்லாமிய சமுதாயத்தின் பாதுகாவலராக விளங்குகின்ற டாக்டர் கலைஞர் அவர்கள் பல்வேறு சிறப்பான பணிகளைச் செய்து உள்ளார். குறிப்பாக நேற்றைய தினம் எங்களுடைய தலைவர் அப்துல் லத்தீப் அவர்கள் இங்கே பேசிய போது டாக்டர் கலைஞர் அவர்கள் அதற்குப் பதிலளித்துப் பேசுகையில், அவர் களுடைய உரையானது தமிழகத்தில், உலகத்தில் வாழ்கின்ற இஸ்லாமிய சமுதாயப் பெருமக்களுடைய மனதில் பால் வளர்க்கக் கூடிய அளவில் இருந்தது. அதை நினைக்கும் போது நானும் என்னைச் சார்ந்த இஸ்லாமிய சமுதாயப் பெருமக்களும் கலைஞர் அவர்களை மனதாரப் பாராட்டி வரவேற்கின்றோம்.

கண்ணியத்திற்குரிய காயிதே மில்லத் அவர்களை இந்த நாட்டின் துரோகி என்று பலரால் வர்ணிக்கப்பட்டபோது எங்கள் மனம் எல்லாம் புண் பட்டு வேதனைகளை அடைந்து

[திரு. எம். முகமது சித்திக்] [1990 மார்ச் 30

நாங்கள் சிறுபான்மை சமுதாயத்தினராக இருக்கின்றோம் என்ற
காரணத்தால் அப்படிக் கூறுகின்றார்களோ என்னவோ தெரிய
வில்லை. அப்படிப்பட்ட எங்களுக்கு எல்லாம் பாதுகாவலராக
இருக்கின்ற டாக்டர் கலைஞர் அவர்களை நான் மீண்டும் பாராட்டு
கின்றேன். காயிதே மில்லத் இந்தியாவிற்குத் துரோகி அல்ல.
பாகிஸ்தான் பிரிவினையின்போது கோரிக்கை வைத்து, அந்தப்
பிரிவினைக்கு எதிராக நின்று பாராளுமன்றத்திலே இந்தியாவின்
பக்கமே அவர் பேசியவர். இந்து-முஸ்லீம் ஒற்றுமைக்காக அவர்
பாராளுமன்றத்திலே பேசியவர். அதற்காகப் பாடுபட்டவர்.
தமிழகத்தில் இந்தி புகுத்தப்பட்டபோது தமிழ் மொழிக்
காக குரல் கொடுத்தவர். அது மட்டுமல்லாமல் தந்தை பெரி
யார், அண்ணா ஆகியோரால் மிகவும் பாராட்டப்பட்டு, கண்ணிய
மிக்க காயிதே மில்லத் என்று அழைக்கப்பட்டவர்.

12-15 மணி

அவர் பெயரை பாலத்திற்கும், கல்லூரிக்கும் டாக்டர் கலைஞர்
அவர்கள் வைத்தார்கள். அது போலவே, திண்டுக்கல் மாவட்டத்
திற்கு காயிதே மில்லத் அவர்களுடைய பெயரை வைத்தார்கள்.
தமிழ் மண்ணில் இதற்கெல்லாம் வரவேற்பு அளிக்காமல், பாராட்டு
கூறாமல் இன்றைக்கு வகுப்புக் கலவரங்களைத் தூண்டி விடுபவர்
மீது தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு,
இதற்காக டாக்டர் கலைஞர் அவர்கள் நேற்று அளித்த
பதிலுரையை நான் மீண்டும் மீண்டும் பாராட்டுவதோடு,
இஸ்லாமிய சமுதாய மக்களின் சார்பாக நான் பாராட்டி
வரவேற்கிறேன்.

அதுமட்டுமல்ல, டாக்டர் கலைஞருடைய ஆட்சியில் ஏழை
எளிய மக்களின் நம்பிக்கை நட்சத்திரமாகப் பல திட்டங்களை
உருவாக்கியிருக்கிறார்கள். சத்துணவு என்ற பெயரிலே சத்
துணவாக இல்லாமல் அளிக்கப்பட்ட சத்துணவை இன்றைக்கு
உண்மையான சத்துணவாக வழங்கப்பட்டு வருகிறது. ஏழை
எளிய மக்கள் மனதார இன்றைக்குப் பாராட்டுகிறார்கள்.
உண்மையான ஒரு சத்துணவு இப்பொதுதான் மக்களுக்குக்
கிடைத்து வருகின்றது என்று கூறுகின்ற வகையிலே, முட்டை
யுடன் கூடிய சத்துணவு இன்றைக்கு வழங்கப்பட்டு வருகிறது.

இன்றைக்குப் பல ஏழைப் பெண்கள் பாராட்டுகின்ற வகை
யில், பல ஏழைகளுடைய பெண்களைக் க டிக் கொடுப்பதற்குப்
பணம் இல்லாத சூழ்நிலையில் எத்தனையோ வயது அடைந்தும்,
அந்தப் பெண்கள் கட்டிக் கொடுக்கப்படாமல் அந்தக் குடும்
பங்கள் கஷ்டப்பட்டன. அப்படிப்பட்ட குடும்பங்களுக்கெல்லாம்



90 மார்ச் 30] [திரு. எம். முகமது சித்திக்]

000 ரூபாய் உதவி செய்து இன்றைக்குப் பல பெண்களுக்கு
ாழ்வளித்திருக்கின்றீர்கள். அப்படிப்பட்ட அந்தக் குடும்பங்
ளெல்லாம் டாக்டர் கலைஞர் அவர்களை அவர்கள் உயிருள்ள
ரை பாராட்டக் கூடியவர்களாக இருந்துக் கொண்டிருக்
ின்றார்கள்.

அதுமட்டுமல்லாமல், கருவுற்ற பெண்களுக்கு இன்றைக்கு 200
ரூபாய் அளித்திருக்கின்றார்கள். இன்றைக்கு மனிதனாக இருக்கக்
கூடியவன் ஒரு மனிதனுக்கு மனிதன் உதவி செய்கின்றான்.
ஆனால், தாயினுடைய வயிற்றில் இருக்கின்ற சிசுவுக்கே நீங்கள்
உதவி செய்கின்ற வகையில், இன்றைக்கு நீங்கள் 200 ரூபாய்
அந்த உதவித் தொகையினைக் கொடுத்து இருக்கின்றீர்கள்.
அதையும் இந்தத் தாய்க்குலம், தாய்மார்கள் இன்றைக்கு மிகவும்
பாராட்டுகின்றார்கள்.

பெண்களுக்கு 30 சதவிகித வேலைவாய்ப்பினை இன்றைக்குக்
கொடுப்பதாக அறிவித்துள்ளீர்கள். இன்றைக்கு இந்தப் பெண்
குலத்திற்கு அது பெருமை தருகின்ற வகையிலே இருக்கின்ற
தையும் நான் பாராட்டுகின்றேன்.

தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மாணவர்களுக்குப் பட்டப்
படிப்புவரை இலவசக் கல்வியை நீங்கள் அறிவித்ததற்கும் நான்
பாராட்டுகின்றேன்.

இன்றைக்கு இந்த அரசு விவசாயிகளினுடைய நலனைக் காக்
கின்ற அரசாக இருக்கின்றது. விவசாயிகளுடைய நீண்ட நாள்
கோரிக்கையாக இருந்த நெல், கரும்பு போன்ற பயிர்களுக்குச்
சரியான விலை கிடைக்காமல் விவசாயிகள் விளைபொருட்களை
விளைவிப்பதற்கே சங்கடப்பட்டவர்களாக இருந்தார்கள். இப்
பொழுது அவர்கள் மிகுந்த ஆர்வத்துடன் அதிக அளவிலே
இன்றைக்கு உற்பத்தி செய்யக் கூடிய வகையிலே நீங்கள் அவர்
களை ஊக்குவித்திருக்கின்றீர்கள். இன்றைக்கு நெல்லுக்கும்,
கரும்புக்கும் அளித்திருக்கின்ற விலையை விவசாயிகள் மனதாரப்
பாராட்டி வரவேற்று இருக்கின்றார்கள்.

கரும்புக்கு 8.5 சர்க்கரைச் சத்துக்கு இன்றைக்கு மத்திய,
அரசு ஒரு விலை நிர்ணயத்தைச் செய்திருக்கிறது. ஆனால்
அதற்கு மேலே கிடைக்கின்ற அந்த சத்தை அறிய விவசாயி
களால் முடியவில்லை. ஆலை அதிபர்கள் என்ன சத்து என்று
கூறுகின்றார்களோ, அதை அப்படியே நாங்கள் ஏற்றுக்கொண்டு,
அந்த விலையைப் பெற்றுக் கொண்டிருக்கின்றோம். ஆகை
யினால், முத்தரப்புக் கமிட்டியை ஏற்படுத்தி, விவசாயிகளில்
ஒருவர், ஆலை அதிபர்களில் ஒருவர், அதிகாரிகளில் ஒருவர் என்று

[திரு. எம். முகமது சித்திக்] [1990 மார்ச் 30

சேர்த்து மூவருமாகச் சேர்ந்து அந்தச் சர்க்கரைச் சத்தை அறி
கின்ற வகையில், உண்மையான சர்க்கரைச் சத்தின் அடிப்
படையில் விவசாயிகளுக்கு அந்த முழு விலை கிடைப்பதற்கு
அரசு ஆவன செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்
கின்றேன்.

அதுமட்டுமல்லாமல், இன்றைக்குப் பல இடங்களில் குடும்ப
அட்டைகள் இல்லாமல், ரேஷனிலே அரிசி வாங்க முடியாமல்,
பல ஏழைகள் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கின்றார்
கள். எனது தொகுதியிலே பல ஏழைகளிடத்தில் இன்றைக்குக்
குடும்ப அட்டைகள் இல்லாமல் என்னிடத்திலேயும், வருகின்ற
அமைச்சர்களிடத்திலேயும், அதிகாரிகளிடத்திலேயும் மனுக்
கொடுத்த வண்ணமாக இருக்கின்றார்கள். அவர்களுக்கெல்லாம்
உடனடியாகப் புதிய குடும்ப அட்டைகள் வழங்குவதற்கு அரசு
முன் வரவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

புத்தாண்டில் இலவசமாக அரிசி ஐந்து கிலோ வழங்குவதை
யும், இலவச வேட்டி, சேலை வழங்குவதையும் வரவேற்கிறேன்.

மாதம் ஒன்றுக்கு இரண்டு தொழிற்சாலைகள் அமைப்பதை
நீங்கள் அறிவித்திருக்கிறீர்கள். அதனால் தமிழகத்திலே
தொழிற்சாலைகள் பெருகி, வேலையில்லாத் திண்டாட்டத்தை
ஒழிப்பதற்கு வசதியாக இந்தத் திட்டம் பாராட்டக்கூடிய திட்ட
மாக அமைந்திருப்பதை நான் பாராட்டி வரவேற்கிறேன். குறிப்
பாக, எனது தொகுதியில் சிப்காட் மூலமாக மிகப் பெரிய அள
விலே தொழிற்சாலை ஏற்படுத்த இருப்பதை,என் தொகுதி மக்கள்
மிகவும் பாராட்டி வரவேற்கிறார்கள். எனது தொகுதியிலே
சிப்காட்டை ஏற்படுத்தி, அந்தப் பகுதியில் வாழ்கின்ற மக்கள்
பாராட்டுகிற வகையிலே, அந்தத் திட்டத்தைக் கொண்டு வந்த
தற்கும் நான் மனதாரப் பாராட்டி,அதை வரவேற்று, இங்கே
பேசுவதற்கு அளித்த வாய்ப்புக்கு நன்றி கூறி, விடை பெறு
கின்றேன், நன்றி. வணக்கம்.

12-20 மணி

*திரு. எல். கணேசன் (முதலமைச்சரின் பேரவைச் செயலர்):
மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த
துணை மானியக் கோரிக்கைகள் மீது மாண்புமிகு உறுப்பினர்கள்
பலரும்..............

திரு. இரா. மோகன்: துணைத் தலைவர் அவர்களே,
இரண்டு நிமிடங்கள் வழங்கினால் ஒரு பிரச்சினை பற்றி பேசி
முடித்துவிடுகிறேன்......



1990 மார்ச் 30]

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: ஆட்சிமன்றச்
செயலர் அவர்களைப் பேச அழைத்து விட்டேன். அவரும் பேச
ஆரம்பித்து விட்டார். நீங்கள் நாளைக்குப் பேசலாம்.

*திரு. எல். கணேசன் (முதலமைச்சரின் பேரவைச் செயலர்)
துணைத் தலைவர் அவர்களே, உறுப்பினர்கள் பலரும் இதில்
ஆக்கப் பூர்வமான ஆலோசனைகளை இந்த அரசுக்கு வழங்கி
இருக்கிறார்கள். இந்தத் துணை மானியக்கோரிக்கையில் கேட்கப்
பட்டுள்ள தொகை சற்று அதிகம் போல மேலெழுந்தவாரியாகப்
பார்த்தால், தோன்றும். ஆனால், ஆழ்ந்து ஆய்ந்து பார்த்தால்
அது ஒன்றும் அப்படி அதிகமான தொகை இல்லையென்பது
புலப்படும். இதை தெளிவுபடுத்துவது என்னுடைய முதல் கடமை
யாகும்.

1987—88 ஆம் ஆண்டிற்கு கூடுதலாக வருவாய் கணக்கில்
தேவைப்பட்ட தொகை ரூ. 340.95 கோடி; 1988—89 ஆம் ஆண்
டில் கூடுதலாக வருவாய் கணக்கில் தேவைப்பட்ட தொகை
ரூ. 323.77 கோடி; 1989—90 ஆம் ஆண்டில் கூடுதல் வருவாய்
கணக்கில் கேட்கப்பட்டுள்ள தொகை ரூ. 654.01 கோடியாக
இருந்தாலும், அதிலே மத்திய அரசு அலுவலர்கள், அதிகாரிகள்
ஊதிய அளவிற்கு நம்முடைய மாநில அரசு அதிகாரிகள், அலு
வலர்கள் ஆகியவர்களுடைய சம்பளத்தை உயர்த்தி அளித்ததை
ஈடுகட்டவும், அதைப் போலவே, பல்கலைக் கழக மானியக்
குழு பரிந்துரை செய்த சம்பள விகிதங்களை வழங்கவும் ரூ. 330
கோடி தேவைப்படுவதால் பாக்கியுள்ள ரூ. 324.01 கோடி
ரூபாயை மட்டும் முன் வருடங்களோடு ஒப்பிடுவதற்கு எடுத்துக்
கொள்வது சரியாக இருக்கும். அதன்படி வருவாய்க் கணக்கில்
கேட்டுள்ள தொகை நிச்சயமாக அதிகம் இல்லை.

அடுத்து மூலதனச்செலவு, மூலதனக் கணக்கில் ரிசர்வ் வங்கியி
லிருந்து பெறப்பட்ட வழிவகை முன் பணங்களையும், மிகைப்
பற்றுகளையும், திருப்பிக் கொடுக்க தேவைப்படும் தொகையை
கழித்துப் பார்ப்போமானால் கூடுதல் செலவு பின் வருவதைப்
போலவே அமைகிறது.

1987—88 ஆம் ஆண்டு ரூ. 72.16 கோடி. 1988—89 ஆம்
ஆண்டு ரூ. 120.57 கோடி. 1989—90 ஆம் ஆண்டு ரூ. 144.36
கோடி. அதாவது 1989—90 ஆம் ஆண்டில் தேவைப்படும் கூடுதல்
தொகை 1988—89 ஆம் ஆண்டுக் கணக்கின் அளவிலேயே அமை
கின்றன என்பதை இந்த மாமன்றத்திற்குத் தெளிவுபடுத்துவதை
என்னுடைய கடமையாகக் கருதுகிறேன்.

இந்த நிதி நிலை அறிக்கையை பொறுத்தவரையில் ஒன்றை
நாடு ஒப்புக்கொள்கிறது. இந்த அரசு சீரான, செம்மையான
நிதி நிர்வாகத்தை உருவாக்கியதன் பயனாய், சிக்கனமான

[திரு. எல். கணேசன்] [1990 மார்ச் 30

பொருளாதார நடவடிக்கைகளை மேற்கொள்கின்ற காரணத்தால்
எதிர்பார்த்த அளவை விட சற்று குறைவாகவே, ஒரு வரம்பிற்கு
உட்பட்டு நாம் பற்றாக்குறையைக் கட்டுப்படுத்தி இருக்கிறோம்
என்பதை நிதித்துறை நிர்வாகிகள் அல்லது நிபுணர்கள், பொருளா
தார மேதைகள், பத்திரிகையாளர்கள் பாராட்டுகிறார்கள் என்
பதை நாம் அறிவோம்.

அதைப் போலவேதான் நலிந்து போனவர்கள், மெலிந்து
போனவர்கள் அவர்கள் வாழ்வில் உயரவும், ஏற்றம் பெறவும்,
சமூகநலத் திட்டங்கள் பலவற்றை அரசு நிறைவேற்றி வருகிறது.
ஆனால், அதே நேரத்தில் பொருளாதார வளர்ச்சிப் பணிகள்,
நீண்ட காலம் பயன்படுகிற தொலை நோக்குத் திட்டங்கள்,
இவைகளை பலியிட்டுவிட்டு அந்த நலிந்தவர்களுக்கான திட்டங்
களை நிறைவேற்றவில்லை. ஆகவே, இரண்டையும் சம அள
விற்கு நிறைவேற்றுகிற அரசாக இந்த அரசு இருக்கிறது.
அனைத்து பகுதி மக்களுடைய தேவைகளை, நலன்களை கணக்
கில் எடுத்துக் கொண்டு, யாரையும் புறக்கணிக்காமல், நிரா
கரிக்காமல், திட்டங்களை தீட்டியிருப்பது இந்த நிதிநிலை அறிக்
கையில் தெளிவாகத் தெரியும். தொழிலாளர்களுடைய நன்மை
பேணிப் பாதுகாக்கப்படுகிற அதே நேரத்தில் தொழில்
உற்பத்தி அதிகமாக, செய்யப்பட வேண்டுமென்று நினைக்கிற
போது தொழிலை நடத்துகிறவர்களின் நன்மையை நிராகரித்து
விடவில்லை.

12-25 மணி

விவசாயிகளைப் பற்றி அக்கறை செலுத்தி, அவர்கள் உற்
பத்தி செய்கிற பொருட்களுக்கான விலையை அதிகப்படுத்திக்
கொடுக்கிற அதே நேரத்தில், விவசாயிகளுடைய நன்மைகளைப்
பாதுகாக்கிற நேரத்தில், விவசாயக் கூலித் தொழிலாளர்களை
வாழ வைக்கிற அந்தப் பணியை இந்த அரசு புறக்கணிக்கவில்லை
என்பதை விட அதைத்தான் தலையாய பணியாகக் கொண்டு
இருக்கிறது என்பதை நாடு அறியும்.

ஆகவே, அரசு அலுவலர்கள் மற்றும் அனைவரையும் ஒரே
நோக்கில் கொண்டு, ஒரே காலத்தில் பல்வேறு நன்மைகளையும்
செய்து சகல பகுதி மக்களையும் பாதுகாக்கிற திட்டங்களை
நிறைவேற்றிக் கொண்டிருக்கிறது இந்த அரசு. எனவேதான் எல்
லோரும் பாராட்டுகிறார்கள். அதிலும் குறிப்பாக நிதித்துறை
நிபுணர்கள், அதைப் போலவே பொருளாதார மேதைகள்
பத்திரிகையாளர்கள், நடுநிலையாளர்கள், அத்துணை பேர்களும்
இந்த நிதிநிலை அறிக்கையை ஆய்ந்து பார்த்துவிட்டு கருத்துக்
களை அறிவிக்கிறபோது, பாராட்டுரைகள் தான் அதிகமாக



1990 மார்ச் 30] [திரு. எல். கணேசன்]

இருக்கின்றனவே தவிர, அதற்காக குறைகள் சுட்டிக் காட்டப்பட
வில்லை என்பது அல்ல என்னுடைய வாதம். குறைகளைவிட,
நிறைபாடுகள் அதிகமாக இருப்பதைத் தான் சுட்டிக் காட்டு
கிறார்கள். ஆனால், அதே நேரத்தில், இந்த நிதிநிலை அறிக்கை
யைப் பற்றி விவாதிக்க வருகின்றவர்கள், எதிர்த்தரப்பு நண்பர்
கள், குறிப்பாகவும், சிறப்பாகவும் என்னுடைய மரியாதைக்குரிய
நண்பர் மாண்புமிகு இராதா அவர்கள் நிதிநிலை அறிக்கையை,
நிதிநிலை அறிக்கை என்ற அடிப்படையில் விவாதிக்க முடியாமல்,
அதை விட்டு வெளியே சென்று, புறம்பாக உள்ள கருத்துக்களை
மிகுதியாக எடுத்து வாதாடுவதில், தன்னுடைய நேரத்தை அதிக
மாகச் செலவிட்டார். பரபரப்பான செய்தியை ஏதோ சட்ட
மன்றத்தில் சொல்வதைப் போல, பல்வேறு பத்திரிகைகளை
எல்லாம் அடுக்காக வைத்துக் கொண்டு, அவர்கள் எடுக்கத்
தொடங்கிய போது, நானும் அப்படி சில வேளைகளில் காட்டி
இருக்கிறேன், ஒரு முறை சட்டமன்ற உறுப்பினராக இருந்த
போது—ஆகவே ஏதோ பெரிய குற்றங்களை, குறைகளை இங்கே
எடுத்துச் சொல்லப் போகிறார் என்று பார்க்கிற போது, அழைப்
பிதழ்களை எடுத்து வைத்துக் கொண்டு, அதிலும் ஒரு அழைப்
பிதழை எடுத்துக் காட்டி, பாருங்கள், எவ்வளவு எளிமையாக
இருக்கிறது என்று காட்டத் தொடங்கினார். நான் வியந்து
போனேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

அது டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக் கழகத்
தொடக்க விழா அழைப்பிதழ். நான் சொல்லிக்கொள்ள விரும்பு
வது, டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக் கழகம் என்று
அந்தப் பெயர் சூட்டப்பட்டு இருக்கிறது. இந்தப் பெருமை
தெரியவில்லை.

அது மட்டுமல்ல, அந்தத் தொடக்க விழா மிகப் பெரிய
அளவில் நடத்தப்படுகிறது, அந்தப் பெருமை தெரியவில்லை.
அவர்களுக்குத் தெரிந்தது எல்லாம், அந்த வெறும்
அழைப்பிதழ் தான். அந்த அழைப்பிதழைக் கூட அந்த விழாவை
நடத்துகின்றவர்கள் பல்கலைக்கழகத்தினர், அவர்கள் அச்சடித்
தார்கள். அது சுயாட்சி பெற்ற பல்கலைக் கழகம். "அட்டாமஸ் பாடி". ஆகவே அவர்கள் நடத்துகிற போது, அவர்கள்
அச்சடிக்கின்ற ஒரு அழைப்பிதழுக்கு, ஏதோ மாண்புமிகு முதல்
அமைச்சரே பொறுப்பு என்பதைப் போல இங்கே எடுத்துக்
காட்டினார்கள். ஆனால் உண்மை என்ன தெரியுமா? அச்
சடிக்கப்பட்டிருக்கின்ற அழைப்பிதழ் யாருக்குப் போகிறதோ,
அவர்கள் மட்டும் பார்ப்பார்கள். 5 ஆயிரம் பேர்களுக்கு அனுப்
பப்படுகிறது என்று சொன்னால், அந்த 5 ஆயிரம் பேர்கள் தான்

[திரு. எல். கணேசன்] [1990 மார்ச் 30

பார்ப்பார்கள். அந்த விழாவிற்கு விளம்பரம் தரப்படுகிறது.
விளம்பரம் எத்தனை பத்திரிகைகளில், எத்தனை மொழிப்
பத்திரிகைகளில், நாளேடுகள், ஆங்கிலம், தமிழ் அதைவிட
உருது ஆகிய 3 மொழி நாளேடுகளில் விளம்பரப்படுத்தப்படு
கிறது அந்த விழாவைப் பற்றி. அந்த விளம்பரங்கள் அனைத்தி
லும், மறைந்த மாண்புமிகு எம்.ஜி.ஆர். அவர்களுடைய படம்
தான் மேலே போடப்பட்டு இருக்கிறது. அதற்குப் பின்னாலே
தான் ஆளுநர், முதலமைச்சர், மற்றவர்கள். ஆகவே எவ்வளவு
விளம்பரம் செய்யப்படுகிறது என்றால், அந்த விளம்பரத்திற்
காக மட்டும் 16 நாளேடுகளில், இந்து, எக்ஸ்பிரஸ் போன்ற
புகழ் பெற்ற ஆங்கில நாளேடுகள், தினத்தந்தி, தினகரன், தின
மணி போன்ற தமிழ் நாளேடுகள், அதைப் போல உருது நாளேடு
கள்—இந்த விழா விளம்பரப்படுத்தப்பட்டது. அதற்கான
செலவு மட்டும் ரூ. 1,61,298. அவர் சொன்ன அந்த அழைப்
பிதழைக்கூட அச்சடிப்பதற்கு ஏறத்தாழ 13,175 ரூபாய் செல
விடப்பட்டது. ஒட்டுமொத்தமாக நீங்கள் எண்ணிப் பார்க்க
வேண்டும். அந்த விழா ஏதோ அலட்சியப்படுத்தப்பட்டு நடத்
தப்பட்டதைப் போல ஒரு தோற்றத்தை இங்கே உருவாக்க
முயற்சித்தார். அன்றைக்கு அந்த விழாவிற்கு வந்திருந்தவர்
யார் என்றால், நம்முடைய இந்தியத் திருநாட்டினுடைய ஜனாதி
பதி ஆர். வி. அவர்கள் வந்திருந்தார்கள்.

12-30 மணி.

அவ்வளவு சிறப்பாக ரூ. 2,59,712 அளவில் செலவிட்டு மிகப்
பெரிய அளவில் நடத்தப்பட்ட விழாவை ஏதோ அலட்சியப்
படுத்திவிட்டார் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் என்
பதைப் போல் சொன்னார்கள். அலட்சியப்படுத்தியது தமிழக
அரசு அல்ல, மாண்புமிகு முதலமைச்சர் அல்ல. மாறாக
என்னுடைய மரியாதைக்குரிய நீண்ட நாள் நண்பர் குடந்தை
இராதா அவர்கள் தான். காரணம், இவ்விழாவிற்கும் பிறகு
கூட, அந்த விழாவிற்குக் கூட அவர் போகவில்லை. நீங்கள்
தெரிந்துகொள்ளவேண்டும் திட்டமிட்டு உருவாக்குவதற்காக
அவர்கள் முயற்சிக்கிறார்கள்.

நிதிநிலை அறிக்கையைப்பற்றி விவாதிக்கிறபோது இந்த
அரசு கொண்டுவந்த நிதிநிலை அறிக்கையில் பொருளாதாரத்
திட்டங்களில், கோட்பாடுகளிலே இருக்கின்ற ஓட்டை உடைசல்
களைச் சுட்டிக்காட்டுவது என்பது சரிதான். ஆனால் முழுக்க
முழுக்க அதை விட்டுவிட்டு வெளியே சென்று சம்பந்தமில்லாத
பிரச்சினைகளை உருவாக்கி காட்டுகிறார்கள். என்ன சொல்கி
றார்கள்? ஒட்டுமொத்தமாக ஏதோ மாண்புமிகு முதலமைச்சர்



1990 மார்ச் 30] [திரு. எல். கணேசன்]

கலைஞர் அவர்கள் முன்னாள் முதலமைச்சர் எம்.ஜி. ஆர். அவர்
களுடைய பெருமைக்கு குறை தேடுவதைப் போல, அவருடைய
புகழுக்கு களங்கம் கற்பிப்பதைப் போல நடவடிக்கைகளை
எடுப்பதைப் போல பேசினார்கள். 40 ஆண்டு நண்பர் என்று
சொல்கிறார். ஆனால் நடவடிக்கை எப்படி இருக்கிறது, இதோ
பாருங்கள் இந்த விளம்பரத்தை என்றார். நான் கேட்டுக்கொள்
கிறேன். நான் உருதுப் பத்திரிகையைத் தான் காட்ட விரும்பு
கிறேன். ஏனென்றால் உருது பத்திரிகை உள்ளிட்டு விளம்பரம்
செய்யப்பட்டது. அதுமட்டுமல்ல' நீங்கள் எண்ணிப்பார்க்க
வேண்டும். எனக்கு உரிய தாக்கம் வேறு. அதில் தலைவர்
கலைஞர் இருக்கின்ற காரணத்தாலே வெளிப்படையாக
என்னாலே காட்டிக்கொள்ள முடியாது. காட்டிக்கொள்ளவும்
விரும்பவில்லை. ஏனென்றால் I am a disciplined party man
அதிலிருந்து நான் வழுவ முடியாதவன். ஆனால் ஒன்றை நான்
விளக்கமாகச் சொல்ல வேண்டும். எம்.ஜி.ஆர். அவர்களுடைய
பெயர் எந்த வகையிலேயும் குறைக்கப்படக் கூடாது என்பதிலே
விழிப்போடு செயல்படுகிறவர் கலைஞர் அவர்கள்.

எம்.ஜி.ஆர். சமாதி கடற்கரையிலே கட்டப்பட்டிருக்கிறது
எப்போது? அவருடைய துணைவியார் சில காலம் முதலமைச்ச
ராக இருந்தார். ஆனால் அப்போது எல்லாம் அக்கறை இல்லை
ஆனால் கலைஞர் அவர்கள் முதலமைச்சராக ஆனதற்கும் பின்
னாலே தான் அண்ணா சமாதிக்குப் பக்கத்திலே அமைத்திருக்
கின்ற அந்தச் சமாதி இன்றைக்கு தமிழகத்திலிருந்து வருகின்றவர்
கள் எல்லாம் பார்த்து, அண்ணாவை வணங்குவதைப் போல்
எம்.ஜி.ஆர். அவர்களையும் வணங்கக் கூடிய நிலையில், நிலையை
உருவாக்கிய தலைவனை பாராட்ட வேண்டுமே தவிர, அதிலே
கூட குறை காண்கிறார்கள். இன்னும் எண்ணிப்பார்க்க வேண்
டும். எம்.ஜி.ஆர். அவர்களுடைய அஞ்சல் தலை வெளியிடப்
பட்டிருக்கிறது. என்ன பொருள்? இன்றைக்கு அமைந்திருக்
கின்ற தேசிய முன்னணி சர்க்கார், இந்த முதலமைச்சருடைய
பரிந்துரையில்—பரிந்துரை என்றால்கூட பரவாயில்லை—செய்
வதை பெருந்தன்மை என்பேன். அதையும் தாண்டி. இப்படித்
தான் அந்தத் திருவுருவம் இருக்க வேண்டும் அஞ்சல் தலையிலே,
என்று தானே தேர்ந்தெடுத்து, பார்ப்பவர்கள் பாராட்டக் கூடிய
வகையில் அருமையான அஞ்சல் தலையை இப்படித் தான் வெளி
யிடவேண்டுமென்று அதையும் சொல்லிக் கொடுத்து, அதற்குப்
பிறகு மத்திய அமைச்சர் உன்னிகிருஷ்ணன் அவர்களே வந்து
நின்று நடத்துகின்ற மிகப் பெரிய விழா. அந்த விழாவிற்குக்
கூட மாண்புமிகு உறுப்பினர் வரவில்லை. ஆனால் அந்த
விழாவை எப்படி நடத்தினார்கள்? நீங்கள் எண்ணிப் பார்க்க
வேண்டும்.

[திரு. எல். கணேசன்] [1990 மார்ச் 30

அதைப் போலத்தான் எம்.ஜி.ஆர். அவருடைய பெயரை
களங்கப்படுத்த வேண்டுமென்று என்றைக்கும் கலைஞர் அவர்கள்
நினைத்ததில்லை. மாறாக அதை அதிகப்படுத்துகிறாரோ என்
பதுதான் என்னைப் போன்றவர்களுடைய தாக்கம், ஆனால் அது
வேறு. யாருடைய பெயரை வைத்திருக்கிறார்கள் ? திருவாரூர்
ஒரு சின்ன நகரம். கலைஞர் வளர்ந்த நகரம். அதிலே
அரசு கலைக் கல்லூரி. அந்தக் கலைக் கல்லூரியிலே இவர்
பெயர் இருந்தது. அதைக் கூட சகித்துக்கொள்ள முடியாமல்
அந்தப் பெயர் பலகையை கழற்றி எறிந்தவருக்குத்தான் கலைஞர்
அவர்கள் சமாதி எழுப்புகிறார்.

12-35 மணி

அடுத்து மருத்துவப் பல்கலைக் கழகம். It is the first and
foremost, that is the only Medical University.
முதன்முறையாக மருத்துவப் பல்கலைக் கழகம் வருகிறது.
அதற்கு அந்தப் பெயரைச் சூட்டுகிறார். ஆகவேதான் இங்கே
பேசியபோது நண்பர் திரு. இராதா அவர்கள் இல்லையே என்கின்ற
வருத்தம் எனக்கு, வருத்தம் என்பதைவிட ஏமாற்றம் என்றே
சொல்லலாம். ஏனென்றால் அவர் இருக்கவேண்டுமென்று கருதி
னேன். அவர் நீண்ட நாள் என்னுடைய நண்பர். வேறு யாரா
வது பேசியிருந்தால்கூட நான் வருத்தப்பட்டிருக்க மாட்டேன்.
1972-க்குப் பிறகு திராவிட முன்னேற்றக் கழகத்திலிருந்து
அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் பிரிந்த பிறகு, அதற்குப்
பின்னாலே அரசியல் ஞானம் பெற்று, அண்ணா திராவிட முன்
னேற்றக் கழகத்திலே சேர்ந்த உறுப்பினர்கள் இங்கு யாராவது
இருந்து அந்த குற்றச்சாட்டுக்களைச் சொல்வார்களேயானால்,
மறப்போம், மன்னிப்போம் என்று அண்ணா பாணியிலே
சொல்லிவிட்டுப் போய்விடலாம். திராவிடர் கழகத்திலிருந்து
திராவிட முன்னேற்றக் கழகத்திலிருந்து, இப்படியெல்லாம் படிப்
படியாக வளர்ந்து, பின் நாளிலே அண்ணா திராவிட முன்னேற்றக்
கழகத்திலே சேர்ந்த திராவிடர் பேரியக்கத்தைச் சேர்ந்த திரு.
இராதா அவர்களை நான் மதிக்கிறேன். ஆனால் அவரா? அவா
நிலையா இப்படி ஆவது ? வெட்டிவிட்டு வா என்று ஒரு அமைச்
சர் சொன்னார் என்றா பேசுவது ? எனக்கு இருக்கின்ற வேதனை
அந்த அமைச்சரும் அந்த இராதாவும் எவ்வளவு நண்பர்களாக
எத்தனை ஆண்டுகள் ஒரே நகரத்தில் இருந்தார்கள் என்பது
எனக்குத் தெரியும். ஆக அவர்கள் இன்றைக்கு எப்படி அரசி
யலை நடத்திக் கொண்டு போகிறார்கள் என்பதற்காக நான்
சொல்ல விரும்புகிறேன். என்ன சொல்லுகிறார் ? ஒரு சாதாரண



1990 மார்ச் 30] [திரு. எல். கணேசன்]

விபத்து. அந்த விபத்தைக் கூட இப்படியா பேசுவது ? மாண்பு
மிகு முதல்வர் அவர்கள் கூட நீண்டநேரம் அதை விளக்கிப் பேசி
யிருக்கிறார்கள். அதற்குப் பின்னால் அதில் பேசுவதற்கு எதுவும்
இல்லை.

நான் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன். இந்த நேரத்தில்
அவர்கள் இங்கே இருக்க வேண்டும் அல்லவா ? ஆளும் கட்சிக்கு
எவ்வளவு பொறுப்போ, அதைவிட அதிக பொறுப்பு இல்லை
யென்றாலும் இணையான பொறுப்பு எதிர்க்கட்சிக்கு இருப்பது,
இருக்கிறது என்பதை அங்கீகரிப்பது தான் ஜனநாயகம். ஆளும்
கட்சி சட்டம் கொண்டு வந்தால் அதிலே இருக்கிற ஓட்டை
உடைசல்களை சுட்டிக் காட்டி அடைக்க யோசனை தருவது
எதிர்க்கட்சி. ஆளும் கட்சி திட்டங்களை தயாரித்தால் அந்தத்
திட்டங்களிலே இருக்கின்ற குற்றங்குறைகளை சுட்டிக் காட்டி
திருத்துவது எதிர்க்கட்சி. ஆளும் கட்சிக்கு எவ்வளவு பணியோ
அதே பணி எதிர்க்கட்சிக்கும் இருக்கிற காரணத்தாலே தான்
எதிர்க்கட்சித் தலைவர்—he is ranked as one among the cabinet
Ministers. அமைச்சர்களுக்கு கொடுக்கப்படுகிற அந்தஸ்து கூட
அவருக்கு கொடுக்கப்படுகிறது. ஆனால் நான் எண்ணிப் பார்க்க
விரும்புகிறேன். ஆளும் கட்சியாக இருந்தாலும் சரியான ஆளும்
கட்சியாக இருப்பது இல்லை. எதிர்க்கட்சியாக இருந்தாலும் சரி
யான எதிர்க்கட்சியாக இருப்பது இல்லை என்ற முடிவு எடுத்துக்
கொண்டு சில பேர் இருக்கிறார்கள்.

ஆனால் எதிர்க்கட்சியாக இருந்தாலும்—1967-க்கு முன்
னாலே ஆனாலும் சரி, அதற்குப் பின்னாலே ஆட்சிப் பொறுப்
பிலே 9 ஆண்டுகள் இருந்துவிட்டு 76-க்குப் பிறகு 1989 வரையிலே
13 ஆண்டுகள் ஆனாலும் சரி, எதிர்க்கட்சியாக இருந்த நேரத்தி
லும் சரியான ஜனநாயக ரீதியான ஆக்கபூர்வமான எதிர்க்கட்சி
யாக இருந்து பணியாற்றியவர் கலைஞர். அதைவிட ஆளும்
கட்சியாக இருக்கிறபோதும் அப்படித்தான். பள்ளிகளில் கல்லூரி
களில் சில வேளைகளில் ஒரு பரிசு அறிவித்திருப்பார்கள். தவறா
மல் பள்ளிக்கூடத்திற்குச் சென்ற மாணவர்களுக்கு என்று பரிசு
அளிப்பார்கள். முதல் பரிசு, இரண்டாம் பரிசு என்று. ஒரு
வேளை தவறாமல் சட்டமன்றத்திற்கு வந்தவர்களுக்கு முதல்
பரிசு இரண்டாம் பரிசு என்று அளிக்கப்படுமானால் அந்த முதல்
பரிசை பெறுகிறவரே கலைஞர் தான். (மேசையைத் தட்டும்
ஒலி).

ஆளும் கட்சியாக இருக்கிற நேரத்தில் மட்டும் இல்லை.
எதிர்க்கட்சியாக இருக்கிற நேரத்திலும் அப்படித்தான். நினைத்
துப் பார்க்கிறேன். 7 ஆண்டுகள் முதலமைச்சராக இருந்தவர்,

[திரு. எல். கணேசன்] [1990 மார்ச் 30

எதிர்க்கட்சியினுடைய தலைவராக வந்து அமர்ந்தபோது கூசாமல்
குறுகாமல் கூனாமல் இதுதான் நமக்கு மக்கள் அளித்த கடமை
அதை நிறைவேற்றுவோம் என்று அமர்ந்து என்றைக்கும் தவறா
மல் தன்னுடைய கடமையை நிறைவேற்றினார். இன்றைக்கு
எதிர்க்கட்சியினுடைய தலைவர் என்னுடைய மரியாதைக்குரிய
அருமை நண்பர் மாண்புமிகு திரு. இராதா அவர்கள் ஏதோ சாக்
கிட்டு எழுந்து சென்று விட்டார். அவர் இருந்திருக்க வேண்டும்.
அவர் அவருடைய கடமையை ஆற்றுகிறபோது நம்முடைய நிலை
மையை விளக்க வேண்டும் என்றெல்லாம் நான் விரும்பினேன்.
அவர் இல்லாத காரணத்தினாலேதான் சிலவற்றிற்கு உள்ளே,
இன்னும் உள்ளே ெ ல்ல விரும்பாமல் நான் சுருக்கமாகவே
சொல்ல விரும்புகிறேன்.

நீங்கள் எண்ணிப் பார்க்கவேண்டும். என்ன சொல்லுகிறார்?
ஒரு சாதாரண விபத்து. அந்த விபத்து எப்படி நேர்ந்தது எப்படி
எல்லாம் இருந்தது என்பதையெல்லாம் கூட நான் விளக்க வேண்
டியதில்லை. இராதாவா அதைக் கிளப்புவது. எப்படி ஜன
நாயகக் கடமையை நிறை( வற்றினோம் எதற்கெல்லாம் போராடி
விட்டுச் சிறைக்குச் சென்றோம். திராவிட பாரம்பரியம், திராவிட
பாரம்பரியம் என்று பெருமை பேசுகிற திரு. இராதா அவர்கள்
புரிந்து கொள்ள வேண்டும். இந்தியை எதிர்த்துப் போராடிய
இயக்கம் அல்லவா? இலட்சியப் பேராட்டம் அல்லவா அது.
விலைவாசி உயர்வைக் கண்டித்து போராடி உள்ளே சென்றோம்
அல்லவா? எத்தனை போராட்டங்கள் அரசியல் ரீதியாக சமுதாய
ரீதியாக பொருளாதார ரீதியாக போராடி விட்டுச் சிறைக்குச்
சென்ற பாரம்பரியத்தில் மரபில் வந்திருக்கின்ற நாம் என்று
சொல்லிக் கொள்கிற திரு. இராதா அவர்கள் இன்றைக்கு எதை
வைத்துக்கொண்டு போராட முடிகிறது அவர்களாலே? அப்படி
போராடுவதற்கு வழி இல்லாத காரணத்தினாலேதான் ஏதாவது
சொல்லிவிட்டு எப்படியாவது தப்பித்துக் கொள்கிற முயற்சியில்
இன்றைக்கும் கூட இருந்து தன்னுடைய ஜனநாயகக் கடமையை
நிறைவேற்ற முடியாமல் அவர்கள் வெளியேறி இருக்கிறார்கள்.
ஆகவே நான் இறுதியாக ஒன்றைத் தான் சொல்லிக் கொள்ள
விரும்புகிறேன். இந்த அரசு இந்த நிதிநிலை அறிக்கையானாலும்,
துணை மானியக் கோரிக்கையின் அடிப்படையிலே வைத்திருக்கிற
மானியக் கோரிக்கையானாலும் செம்மையான சீரான நிதி நிர்
வாகத்தை உருவாக்கி தமிழகத்தினுடைய பொருளாதாரத்தை
மேம்படுத்துவதற்காக அத்தை.ா திட்டங்களையும் நிறைவேற்
றிக் கொண்டிருக்கிறது. ஆகவே, இந்தக் கோரிக்கை நியாயமான
கோரிக்கை என்ற அடிப்படையில் இதை நிறைவேற்றித் தர
வேண்டுமென்று கேட்டுக் கொண்டு விடை பெறுகிறேன்.



1990 மார்ச் 30]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு.

திரு. கோ. வீரையன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம், பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப் பெற்றது.

12-40 மணி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி—

" 1989-90-ஆம் ஆண்டிற்கு கூடுதல் செலவுகளுக்கான கோரிக்கைகள் அடங்கிய, 28—3—1990 தேதியிடப் பெற்ற அறிவிப்பில் குறிப்பிடப் பெற்றுள்ள, துணை மானியக் கோரிக்கைகள் ஒவ்வொன்றிற்கும் எதிரே கோரப்பட்டுள்ள தொகைகளுக்கு மேற்படாத தொகைகள் 1989-90-ஆம் ஆண்டிற்கான கூடுதல் செலவிற்காக அரசுக்கு வழங்கப் பெற வேண்டும் ".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, கோரிய தொகைகள் அரசுக்கு வழங்கப் பெற்றன.

(நிறைவேற்றப்பெற்ற மானியக் கோரிக்கைகள்)

| கோரிக்கை. | | (ரூபாய் ஆயிரத்தில்.) |
|---|---|---|
| | A. வருவாய்க் கணக்கில் செலவு. | |
| 1 | நில வரித் துறை .. .. .. .. | 5,22,10 |
| 3 | மோட்டார் வண்டிகள் சட்டங்கள் .. நிருவாகம் | 17,13 |
| 4 | பொது விற்பனை வரியும், ஏனைய வரிகளும். தீர்வைகளும்—நிருவாகம் | 4,70,85 |
| 5 | முத்திரைத்தாள்கள் — நிருவாகம்.. .. | 6,56 |
| 6 | பத்திரப் பதிவு .. .. .. | 50,20 |
| 7 | மாநிலச் சட்ட மன்றம் .. .. .. | 34,52 |
| 8 | தேர்தல்கள் .. .. .. .. | 5,43,41 |

கோரிக்கை: [1990 மார்ச் 30

(ரூபாய் ஆயிரத்தில்.)

A. வருவாய்க் கணக்கில் செலவு—தொடர்ச்சி.

| | | |
|---|---|---|
| 9 | மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள் தலைமையிடப் பணியாளர்கள் | 9,59,40 |
| 10 | பால் வழங்கு திட்டங்கள் .. .. .. | 72,65 |
| 11 | மாவட்ட நிருவாகம் .. .. .. | 22,49,19 |
| 12 | தமிழ்நாடு 1959-ஆம் ஆண்டு இந்து சமய அறக்கட்டளைகள் சட்ட நிருவாகம். | 1,06,49 |
| 13 | நீதி நிருவாகம் .. .. .. | 4,63,44 |
| 14 | சிறைச் சாலைகள் .. .. .. | 1,68,66 |
| 15 | காவல் துறை .. .. .. .. | 18,33,98 |
| 16 | தீயணைப்புப் பணிகள் .. .. .. | 3,28,30 |
| 17 | கல்வி .. .. .. .. | 1,77,54,40 |
| 18 | மருத்துவம் .. .. .. .. | 26,08,93 |
| 19 | பொதுச் சுகாதாரம் .. .. .. | 27,47,80 |
| 20 | வேளாண்மை .. .. .. .. | 43,49,37 |
| 21 | மீனளம்.. .. .. .. .. | 97,03 |
| 22 | கால்நடை வளர்ப்பு .. .. .. | 6,49,59 |
| 23 | கூட்டுறவு .. .. .. .. | 11,23,56 |
| 24 | தொழில்கள் .. .. .. .. | 14,38 |
| 26 | கைத்தறியும், துணித் தொழிலும் .. | 33,24,95 |
| 27 | கதர்த் தொழில் .. .. .. | 82,02 |
| 29 | தொழிலாளர் நலனும் தொழிற்சாலைகளும் | 4,22,04 |
| 30 | சமூக நலன் .. .. .. | 7,80,17 |



1990 மார்ச் 30]

கோரிக்கை: (ரூபாய் ஆயிரத்தில்.)

A. வருவாய்க் கணக்கில் செலவு—தொடர்ச்சி.

| | | |
|---|---|---|
| 31 | பழங்குடியினர், ஆதி திராவிடர் முதலியோர் நலன் | 15,95,82 |
| 32 | பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் முதலியோர் நலன் | 2,03,12 |
| 33 | வீட்டு வசதி .. .. .. | 4,81.20 |
| 35 | நுகர் பொருள் வழங்கல் .. .. | 96,12,12 |
| 36 | பாசனம் .. .. .. .. | 95,88 |
| 37 | பொதுப் பணிகள்—கட்டிடங்கள் .. | 1,13,89 |
| 38 | பொதுப் பணிகள்—பணியாளரமைப்பும், கருவிகளும், தளவாடமும். | 5,10,28 |
| 39 | சாலைகளும் பாலங்களும் .. .. | 9,99,93 |
| 40 | சாலைப் போக்குவரத்துப் பணிகளும் கப்பல் போக்குவரத்தும் | 2,13,14 |
| 41 | இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு | 4,19,76 |
| 42 | ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வுகால நன்மைகளும் | 9,42,45 |
| 43 | பல்வகை .. .. .. .. | 8 |
| 44 | எழுதுபொருள்—அச்சுத்துறை .. .. | 3,06,86 |
| 45 | காட்டுவளத் துறை .. .. .. | 5,43,99 |
| 46 | இழப்பீடுகளும், ஒதுக்கீடுகளும் .. | 2,00,41 |
| 47 | செய்தி, சுற்றுலா, திரைப்படத் தொழில் நுட்பவியல் | 2,05,11 |
| 48 | ஊரகத் தொழில்கள் .. .. .. | 4,87,54 |
| 49 | குடிநீர் வழங்கல் .. .. .. | 17,23,38 |
| | மொத்தம்—A. வருவாய்க் கணக்கில் செலவு ... | 6,04,36,03 |

கோரிக்கை:

| | | (ரூபாய் ஆயிரத்தில்.) |
|---|---|---|
| | **B. வருவாய்க் கணக்கின்கீழ் வராத மூலதனச் செலவு.** | |
| 50 | வேளாண்மை குறித்த மூலதனச் செலவு .. | 89,83 |
| 51 | தொழில்வளர்ச்சி குறித்த மூலதனச்செலவு | 1,63,63 |
| 53 | பொதுப் பணிகள்—கட்டிடங்கள் குறித்த மூலதனச் செலவு | 6,47,22 |
| 54 | சாலைகள்—பாலங்கள் குறித்த மூலதனச் செலவு | 1 |
| 55 | சாலைப் போக்குவரத்துப் பணிகள், கப்பல் போக்குவரத்து குறித்த மூலதனச் செலவு | 29,84 |
| 56 | காட்டுவளம் குறித்த மூலதனச் செலவு ... | 4,19,35 |
| 57 | ஊரகத் தொழில்கள் குறித்த மூலதனச் செலவு. | 1 |
| 58 | பல்வகை மூலதனச் செலவு .. — | 12,41,65 |
| | மொத்தம்—பி. வருவாய்க் கணக்கின்கீழ் வராத மூலதனச் செலவு. | 25,91,54 |

கோரிக்கை:

| | | (ரூபாய் ஆயிரத்தில்.) |
|---|---|---|
| | **C. கடன்கள், முன்பணங்கள் வழங்குதலும் கடனைத் திருப்பிச் செலுத்துதலும்.** | |
| 59 | மாநில அரசு வழங்கும் கடன்களும் முன் பணங்களும் | 1,07,37,29 |
| | பெரு மொத்தம் ... ... — | 7,37,64,76 |



5. அறிவிப்புகள்—தொடர்ச்சி.

(ஆ) நிதி ஒதுக்க (எண் 2) சட்ட முன்வடிவு 1990. (ஆ.இ.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு, 1990 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்க (எண் 2) சட்ட முன்வடிவைப் பேரவையில் அறிமுகம் செய்யவும், ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளவும் ஆளுநர் தமது இசைவினைத் தெரிவித்துள்ளார்.

8. சட்ட முன்வடிவு (அறிமுகம் செய்தல்).

நிதி ஒதுக்க (எண் 2) சட்ட முன்வடிவு, 1990.

திரு. எல். கணேசன் (முதலமைச்சரின் ஆட்சிமன்றச் செயலர்): மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

''1990 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்க (எண் 2) சட்ட முன்வடிவைப் பேரவையில் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று அனுமதி வழங்கப்பெற்றது.

திரு. எல். கணேசன் (முதலமைச்சரின் ஆட்சிமன்றச் செயலர்): இச்சட்ட முன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.

9. சட்ட முன்வடிவு (ஆய்வு செய்தல்)

மாநகராட்சிச் சட்டங்கள் சார்ந்த (திருத்த) சட்டமுன்வடிவு, 1990.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி: மாண்புமிகு பேரவை தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்:

''1990 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாநகராட்சிச் சட்டங்கள் சார்ந்த (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 10/1990) பேரவையின் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்.''

திரு. யூ. கே. வெள்ளிங்கிரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாநகராட்சிச் சட்டத் திருத்தங்கள் சம்பந்தமாக ஒரு சில கருத்துக்களை, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக சொல்ல விரும்புகிறேன். ஏற்கனவே, மாநக ராட்சித் தேர்தல்களை நடத்த வேண்டுமென்று நாம் வற் புறுத்தி வந்தபோதிலும், இன்னும் அது காலங்கடந்து கொண்டு தான் இருக்கிறது. அந்தத் தேர்தல்களை நடத்த முடியாத காலகட்டத்தில், இன்றைக்கு சென்னை, மதுரை, கோவை ஆகிய மிகப்பெரிய மாநகராட்சிகள், பல்வேறு காரியங்களை நடை முறைபடுத்த முடியாத நிலையிலேயே இருக்கின்றன என்பதை இந்த நேரத்திலே சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். இந்தச் சட்டத்தின் மூலமாக, மேலும் ஆறு மாத காலத்திற்கு, தனி அலுவலர்களுடையப் பதவியை நீட்டிக்க இருக்கிறார்கள் அமைச் சர் அவர்கள். நான் தெளிவாகச் சொல்கிறேன். இந்த ஆறு மாத காலத்திற்குள், குறிப்பாக, செப்டம்பர் மாதத்திற் குள்ளாவது, மாநகராட்சியின் தேர்தல்களை நடத்துவதற்கு உறுதியான நிலை எடுக்கப்பட வேண்டும் என்று நான் இந்த நேரத்திலே சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். மேலும் நீட்டிக்க வாய்ப்பு இருக்கக் கூடாது என்பதுதான் என்னுடைய வேண்டு கோள். அதைத் தெளிவாக அமைச்சர் அவர்கள் பதிலிலே சொல்வார்கள் என்று நான் எதிர்பார்க்கிறேன். இந்த காலக் கட்டங்களில், மாநகராட்சிகளில் கவுன்சிலர்கள் இல்லாத காரணத்தினால், சட்டமன்ற உறுப்பினர்களைத் தான் இன்றைக்கு மிக நெருக்கமாகப் பிடித்துக் கொள்கிறார்கள் என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். குடிநீர் பிரச்சினை, சாக்கடைப் பிரச்சினை, பாதாள சாக்கடைப் பிரச்சினை, தெரு விளக்குகள், சாலை வசதிகள் போன்ற இந்த வசதிகளுக்கெல்லாம்—இன்றைக்கு மாநகராட்சிகளில் அவை நிறைவேற்றப்படாமல் தேங்கிக் கிடக்கின்றன—துரிதமாக வேலைகள் நடைபெறுவதற்கு அங்கே ஒரு கவுன்சிலராவது இருந்திருந்தால், ஓரளவாவது அந்த வேலைகள் முறையாக செய்திருக்க வாய்ப்பு ஏற்பட்டிருக்கும். ஆகவேதான், அப்படிப்பட்ட ஒரு நிலையை கூடிய சீக்கிரமே உருவாக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

12-45 மணி

இந்தத் திருத்தத்தினுடைய கொள்கை விளக்கத்திலே சொல்லி இருப்பதைப் போன்று, மாநகராட்சியில் வாக்காளர் களுடைய எண்ணிக்கை அதிகமாக இருக்கின்றது. சென்னை யிலும் இருக்கின்றது. மதுரையிலும் இருக்கின்றது. கோவை யிலும் இருக்கின்றது. ஆனால் அந்த வாக்காளர்களுடைய எண்ணிக்கையை சமப்படுத்துவது என்ற நோக்கத்தை இங்கே விளக்கக் குறிப்பிலே சொல்லியிருக்கிறார்கள். அது வரவேற்கப்



படக்கூடிய ஒன்று தான். குறிப்பாக, கோவையில் 13,000 15,000 என்று ஒரு டிவிஷனிலே வாக்காளர்கள் இருக்கி றார்கள். அதேபோல் 9,000, 6,000 என்று ஒரு டிவிஷனிலே இருக்கின்றார்கள். இதையெல்லாம் சமமாக ஆக்கவேண்டும் என்பதையும் நான் இந்த நேரத்திலே சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

இது அநேகமாக சென்னையிலும் இருக்கின்றது. மதுரை யிலும் இருக்கின்றது. அப்படிப்பட்ட முறையில், வாக்காளர் களை, டிவிஷன்களைப் பிரிக்கும்போது சரியான முறையில் ஒரே அளவு, கொஞ்சநஞ்சம் இருந்தாலும் கூடப் பரவாயில்லை. சம ரீதியாகப் பிரிப்பதற்கான ஒரு சூழ்நிலையை உருவாக்க வேண்டும். அதே நேரத்தில் இன்றைக்கு இருக்கக் கூடிய டிவிஷன்களுடைய எண்ணிக்கையை அதிகப்படுத்த வேண்டும். எண்ணிக்கை போதாது. ஏனென்றால் மிகப் பெரிய சென்னை நகரம், கோவை நகரம், மதுரை நகரம் வளர்ந்து வரக்கூடிய பெரிய நகரங்கள். அந்த நகரங்களில் எல்லாம் இன்றைக்கு இருக்கக்கூடிய வார்டுகளின் எண்ணிக்கை போதுமானதாக இல்லை. அந்த எண்ணிக்கையை அதிகப்படுத்த வேண்டும். அதே நேரத்தில், இன்றைக்கு ஒதுக்கப்பட்டிருக்கக்கூடிய பெண் களுக்கான இடங்களையும், அரிஜன ஆதிவாசி மக்களுக்கான இடங்களையும் ஒரு சரியான முறையிலே தீர்வு செய்யவேண்டும். இதிலே விருப்பு, வெறுப்பின்றி, மற்றவர்கள் குறை சொல்லக் கூடிய முறையில் அமையாமல், எந்த வார்டுகளில் அதிகமாகப் பெண்கள் இருக்கிறார்களோ, அந்த வார்டுகளில் பெண்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கக்கூடிய வகையில் அந்தப் பெண்கள் வார்டுகள் பிரிக்கப்பட வேண்டும்.

அதே நேரத்தில் அரிஜன மக்கள், ஆதிவாசி மக்கள் இருக்கக் கூடிய வார்டுகளில், டிவிஷன்களில், அதிகமாக எந்த வார்டுகளில் டிவிஷன்களில் இருக்கின்றார்களோ, அவற்றை ஆதிவாசி, அரிஜன மக்களுக்காக ஒதுக்கவேண்டும். அந்த முறையில், நியாயமான முறையில் வார்டுகளைப் பிரிப்பதிலே நாம் கவனம் செலுத்த வேண்டும் அப்போதுதான் ஒரு சரியான முறையில் இருக்கும் என்பதை நான் இந்த நேரத்திலே சொல்லிக்கொள்ள விரும்பு கிறேன்.

டிவிஷன்களைப் பிரிக்கிற அதே நேரத்தில், பெண்களுக் கான, அரிஜனங்களுக்கான வார்டுகளைப் பிரிக்கிற அதே நேரத்தில் வார்டுகளில் இருக்கக்கூடிய எண்ணிக்கை 80 க்கு மேல் போகாமல் இருப்பதற்கான நிலையை எடுத்தால் சரியான முறையில் அந்த எண்ணிக்கையைத் தீர்மானிக்க முடியும் என் பதைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

110 [திரு. யூ. கே. வெள்ளிங்கிரி] ]1990 மார்ச் 30

ஆகவேதான் அப்படிப்பட்ட முறையில் இவைகளையெல்
லாம் காலம் கடத்தாமல் மாநில ரீதியான கமிட்டி ஒன்று
இருக்கிறது. அந்தக் கமிட்டி வேகமாகச் செயல்பட்டு, இந்தக்
குறைகளையெல்லாம் முழுமையாக, சீக்கிரமாக முடிவுக்குக்
கொண்டு வந்து, வரக்கூடிய செப்டம்பர் மாதத்திற்குள்ளாக
தேர்தலை நடத்தி, அந்தப் பகுதிகளில் இருக்கக்கூடிய பல்வேறு
கோரிக்கைகளை நிறைவேற்றவேண்டும் என்று இந்த நேரத்தில்
நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அதேபோல்தான், அதிலே பணியாற்றக்கூடிய நகரசுத்தித்
தொழிலாளர்கள், இன்றைக்கு சென்னையானாலும், கோவை
யானாலும், மதுரையானாலும், போதுமான அளவில் இல்லை.
அவர்கள் மிகக் குறைவாக இருக்கிறார்கள். நகர மக்களுடைய
எண்ணிக்கைக்கேற்ற அடிப்படையில் சுகாதாரத்தைப் பேணு
வதற்கு நகரசுத்தித் தொழிலாளர்கள் போதுமான எண்ணிக்
கையில் இல்லை என்பதுதான் எங்கள் கருத்து. அந்த எண்ணிக்
கையை அதிகப்படுத்தவேண்டும் என்று சொல்லி, அரசுக்கு
மாநகராட்சிகள் பரிந்துரை செய்தும்கூட அதற்கான அனுமதி
கிடைக்க வில்லை என்று சொல்கிறார்கள்; ஆகவே, அவர்கள்
எண்ணிக்கையை அதிகப்படுத்தவேண்டும். அவர்களுடைய சம்
பளத்தைக் கூட அரசே ஏற்றுகொள்ளவதற்கான ஒரு நிலையை
உருவாக்கினாலும் கூடப் பரவாயில்லை. இன்றைக்கு பல்வேறு
பணிகளில், மாநகராட்சியின் கீழ் பணியாற்றக்கூடிய பல
இலாக்காக்களிலே, ஆசிரியர்களை எல்லாம் அரசாங்கமே
எடுத்துக்கொண்டிருக்கிறது. அதேபோல், நகரசுத்தித் தொழி
லாளர்களையும் நேரடிப் பொறுப்பில் அரசாங்கமே எடுத்துக்
கொள்ளவேண்டும் என்பதை நான் இந்த நேரத்திலே சொல்லிக்
கொள்ள விரும்புகிறேன்.

அதே நேரத்தில், அவர்களுக்கு வீடு கட்டக்கூடிய ஒரு
முறையில், ஏற்கனவே கோவையில் நாங்கள் பேசினோம்,
மாவட்ட ஆட்சித் தலைவரோடு, 'தாட்கோ' மூலமா
கடன்களை வாங்கிக் கட்டலாம் என்று சொன்னார்கள். அந்த
நகரசுத்தித் தொழிலாளர்கள், 'எங்களுக்கு அந்த 'தாட்கோ'
மூலமாக கடன் வாங்கி அந்த வீடுகள் கட்டினால், கிடைக்கக்
கூடிய வருமானத்தில் ஈடுகட்ட முடியாது'' என்று சொல்
கிறார்கள். ஆகவே, அரசாங்கமே மானியமாக அந்த நக
சுத்தித் தொழிலாளர்களுக்கு வீடுகளைக் கட்டிக் கொடுக்க
கூடிய முறையில் ஆய்வு செய்யுமா என்பதையும் இந்த நேரத்தி
கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். அந்த முறையில் இந்த
சட்டத் திருத்தத்தினை வரவேற்று, சம்பந்தப்பட்ட அமை
சரும், அரசும் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட
எனக்கு வாய்ப்பளித்ததற்கு நன்றி சொல்லி முடித்துக் கெ
கிறேன், வணக்கம்.



1990 மார்ச் 30] [திரு. கோ. சி. மணி]

12-50 மணி

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, இந்தச் சட்டத் திருத்த முன் வடிவைக்
கொண்டு வந்ததன் நோக்கத்தை அறிந்த மாண்புமிகு உறுப்
பினர் அவர்கள் இனிமேலும் காலதாமதம் செய்யக் கூடாது
என்பதைக் குறிப்பாக நினைவூட்டி, அவருடைய உரையை
முடித்திருக்கிறார் ; நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். இந்தப்
பொறுப்பை, இந்த ஆட்சி ஏற்ற உடனேயே இந்த மாநகராட்சி
களின் தேர்தலை நடத்த வேண்டுமென்று முடிவெடுத்தது
தாங்கள் அறிந்த ஒன்று. இருந்தாலும், அதற்குப் பிறகு,
அப்போதிருந்த வாக்காளர் பட்டியலில் கண்டுள்ள 21 வயது
நிரம்பியவர்களின் சட்டமன்ற வாக்காளர் பட்டியலை வைத்து
தான் அந்தத் தேர்தலை நடத்த வேண்டுமென்று அவசரமாக
முடிவெடுத்தோம். அதற்குப் பிறகு, பாராளுமன்றத் தேர்தலும்,
சட்டமன்றத் தேர்தலும் வந்துவிட்டன. வந்துவிட்டதன்
அடிப்படையில், வாக்காளர் பட்டியல் சேர்க்கும் பணி
தொடங்கியது. அதிலே, 18 வயதுக்கு மேற்பட்டவர்கள்தான்
வாக்களிக்கலாம் என்று இருந்த மாநகராட்சிமன்றச் சட்டத்
தைத் திருத்தி, அந்த அளவில் 21 வயதை நிரப்பலாம் என்று
வந்தபிறகு, மத்திய அரசாங்கத்தின் உத்தரவின் அடிப்படையில்
18 வயதுக்கு மேற்பட்டவர்கள் சட்டமன்றத்திலும் வாக்காளர்
களாகலாம் என்ற நிலையில் இந்த மாமன்றத்திற்கு அந்தத்
தகவல் கிடைத்து, மாமன்ற உறுப்பினர்கள் அதை மீண்டும்
திருத்த வேண்டுமென்று கேட்டுக்கொண்டதன் அடிப்படை
யில்தான் அது திருத்தப்பட்டது.

எது எப்படியிருந்தாலும், ஏறத்தாழ 15 ஆண்டுகளுக்கு
மேற்பட்டுவிட்டது மாநகராட்சித் தேர்தல் நடைபெற்று
என்பது தாங்கள் அறிந்த விஷயம். நிச்சயமாக செப்டம்பர்
30-ஆம் தேதிக்குள் இந்தத் தேர்தலை ஒத்திவைக்கப்படாமல்
நடத்தப்படுவதற்காகத்தான் தேர்தல் தேதியை நிர்ணயித்து
விட்டு, அதற்குள்ளாகப் பணிகளை வரையறுத்திருக்கிறோம்
என்பதைத் தெரிவித்து, இதற்குத் தந்திருக்கிற திருத்தங்
களைத் திரும்பப் பெற்று இந்தச் சட்ட முன்வடிவை நிறை
வேற்றித் தரவேண்டுமென்று கேட்டு அமைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி:

''1990 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாநகராட்சிச் சட்டங்கள்
சார்ந்த (திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை
சட்ட முன்வடிவு எண். 10/1990) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்
பெற வேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, சட்ட முன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற்றது.

பிரிவுகள் 2 முதல் 4 முடிய பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றன.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

''1990 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாநகராட்சிச் சட்டங்கள் சார்ந்த (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 10/1990) நிறைவேற்றப் பெற வேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன்வடிவு நிறைவேற்றப்பெற்றது.

5. அறிவிப்புகள் (தொடர்ச்சி.)

(ரி) பேரவை அலுவல்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு.

பேரவையின் நிகழ்ச்சி நிரலில் கீழ்க்கண்டவாறு மாற்றம் செய்யப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன் :

9–4–1990 அன்று எடுத்துக் கொள்ளப்படவிருந்த வேளாண்மை மற்றும் வேளாண்மை குறித்த மூலதனச் செலவு ஆகிய மானியக் கோரிக்கைகள் 21–4–1990 அன்று எடுத்துக் கொள்ளப் பெறும். அன்று பேரவை மாலையிலும் கூடும்.

21–4–1990 அன்று எடுத்துக் கொள்ளப்படவிருந்த நீதி நிருவாகம் மற்றும் சிறைச்சாலைகள் ஆகிய மானியக் கோரிக்கைகள் 9–4–1990 அன்று எடுத்துக் கொள்ளப்பெறும்.

பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளை (31–3–1990) காலை 9–00 மணிக்குப் பேரவை மீண்டும் கூடும்.



பின்னர் பேரவை 12–53-க்கு ஒத்திவைக்கப்பெற்றது.

10. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

46. தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனத்தின் 1985–86-ஆம் ஆண்டிற்கான இருபத்தியொன்றாவது ஆண்டறிக்கை [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்).

47. தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனத்தின் 1986–87-ஆம் ஆண்டிற்கான இருபத்திரண்டாவது ஆண்டறிக்கை [1956ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்.)

48. தமிழ்நாடு பீங்கான் நிறுவனத்தின் 1986–87-ஆம் ஆண்டிற்கான பதின்மூன்றாவது ஆண்டறிக்கை [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்.)

ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள், ஏனைய தாள்கள்.

42. பொது நிறுவனங்கள் குழுவின் நாற்பத்தொன்றாவது அறிக்கை, 1989–90 (தமிழ், ஆங்கிலம்).

43. ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் செயல்வினை முறைத்திட்டம், 1990–91 (ஆங்கிலம்).

143796

D

V211,31'N90

N90.24.2